Annual Subscription Rs. 6 | 4th April 1937 | Price 2 As.

# ஸ்ரீ சுதேச மித்திரன்

Vol. 8 | வாரப்பதிப்பு | No. 9

## THE SWADESAMITRAN ILLUSTRATED WEEKLY



"பிரதி பிம்பம்"

எல்லா நோவுகளுக்கும் ஒப்பற்ற சஞ்சீவி.

# பாடால் பாம்

உதகமண்டலம்: தென் ஆற்காடு:


IMPORTANT TO MOTHERS
GRIPE WATER
அடைவதற்கு இயற்கையான
விருப்பம்
வுட்வர்ட்ஸ்
கிரைப்வாடர்
குழந்தைக்கு
ஆரோக்கியத்தைத் தரும்
IMPORTANT TO MOTHERS
REGISTERED TRADE MARK
Nº 99
WOODWARD'S CELEBRATED
"GRIPE WATER"
AN
INFANTS PRESERVATIVE
FOR THE DISORDERS OF CHILDREN. VIZ-
REGISTERED TRADE MARK "GRIPE WATER" Nº 100
WOODWARD'S
GRIPE WATER
W. WOODWARD LTD. LONDON. ENGLAND



பம்பாய் கேட்வே ஆப் இந்தியாவிலிருந்து தாஜ்மஹால் ஹோட்டல் தோற்றம்

# தனிக் குடித்தனம்

(எம். என். சுப்ரமண்யன்)

(சென்ற வாரத் தொடர்ச்சி)

4

உலகத்தில் சுகமும் துக்கமும் பகலும் இரவும் ஒன்றையொன்று தொடர்ந்து வருவதுபோல், மாறிமாறி ஏற்படுவது இயற்கையின் இயல்பு என்று கீதையில் சொல்லப்பட்டிருக்கிறதல்லவா?

குழந்தை வளர வளர சரோஜாவினிடத்திலேயே இருக்கும். என்னிடத்தில் வரக்கூட அது சம்மதிக்காது. அது என்னிடத்திலேயே, அதைப் பெற்ற தாயினிடத்திலேயே, வேற்று முகம் பார்ப்பது என்னுடைய மனதைப் புண்படுத்தியது. என்னையறியாமலே பழைய ஞாபகங்களும், பழைய பகைமைகளும் என்னைக் குடிகொண்டன. என்றைக்காவது இவ்விதம் வளரும் அசூயை கட்டிலடங்காமல் வெடிகுண்டுபோல் வெடிக்குமென்று நான் அறிவேன். ஆனால் இதை எப்படித் தடுப்பது? தடுப்பதற்கேற்ற முயற்சிகளை நான் கையாளவில்லை.

ஒருநாள் தொட்டிலிலிருந்து குழந்தையைத் தூக்குகையில் சரோஜாவின் கைகளிலிருந்து குழந்தை தவறி கீழே விழுந்துவிட்டது. தொட்டிலென்னமோ அதிக உயரத்தில் இல்லை. சரோஜாவும் வேண்டுமென்று குழந்தையைப் போட்டிருப்பாளா? ஏதோ நழுவியே விழுந்திருக்க வேண்டும். இருந்தபோதிலும் அவளை அப்பொழுது நான் பேசின வார்த்தைகளையும் வசை மொழிகளையும் இறக்கும்பரியந்தம் மறக்கமுடியாது.

"என் குழந்தையைக் கொல்லவா பார்க்கிறாய்? பாதகி! சண்டாளீ! உண்ட வீட்டுக்கு இரண்டு நினைக்கிறாயே..."

இன்னும் ஏதேதோ பேசினேன். சரோஜாவின் மனதை எவ்வளவு புண்படுத்தலாமோ அவ்வளவும் செய்தேன். அவளை எப்படியெல்லாமோ தூஷித்தேன். இந்தமாதிரி பாதகியாயிருப்பதால் தான், அவளுடைய துர்க்குணத்தை அவள் கணவன் அறிந்து அவளைத் தள்ளி வைத்து, இல்வாழ்க்கை நடத்த மறுத்துவிட்டாரென்று சொன்னேன்! ஆஹா! பாம்பின் விஷமாவது அவளை உடனே கொன்றிருக்கும். நான் அவளிடத்தில் அவ்வளவு கிருபைகூடக் காட்டவில்லை. என் வழி சித்திரவதைதான். உயிருடன் அவளுடைய தோலை உரித்திருந்தால்கூட அவ்வளவு வேதனை உண்டாகாது.

சரோஜாவை வைத்த அமர்க்களத்தில் குழந்தையைக்கூட நான் கவனிக்கவில்லை. குழந்தைக்கு ஒன்றும் காயமேற்படவில்லை.

என் தாயார் எவ்வளவோ சாதுர்யமாக என் கோபத்தைத் தணிக்கப் பிரயத்தனப்பட்டாள்.

"உன்னை யார் கேட்டாள்? அவளுக்குப் பரிந்து நீயொன்றும் பேச வேண்டியதில்லை..." என்று அவள் வாயை மூடினேன். அதற்கப்புறம் என் தாயார் ஏன் பதில் பேசுகிறாள்?

அன்றிரவு வீட்டில் யாரும் சாப்பிடவில்லை. என் கணவருக்கு நடந்த விஷயத்தை ஒருமாதிரியாகச் சொல்லி வைத்தேன். நான் செய்தது தவறு என்று எனக்குத் தெரியும். என் தாயாரும் சரோஜாவும் வேறு எங்கும் செல்வதற்கு முடியாது என்று தெரியும். அப்படியிருந்தும் நான் அப்படிப்பேசியது ஏன்? இனிமேல் அவ்விதம் சரோஜாவைத் துன்புறுத்துவதில்லை என்று சபதம் செய்துகொண்டேன். இவ்விதம் எத்தனையோ முறை சபதம் செய்துகொண்டிருக்கிறேன். கண்ட பலன் என்ன?

இரவு ஒரு மணி. என் அறையின் கதவு தடதடவென்று தட்டப்பட்டது. "கமலா... கமலா, சிக்கிரம் வாடி..." என்று என் தாயாரின் குரல் கேட்டது. அச்சமும் நடுக்கமும் அடங்கியிருந்தது அந்தக் குரலில்.

"என்ன......?" என்று கேட்டுக்கொண்டே நானும் என் கணவரும் அறையை விட்டு வெளி வந்தோம்.

என் தாயாரின் முகம் வெளுத்திருந்தது. கண்களில் நீர் ததும்பின...அவள் தேகம் நடுக்கம்கொண்டிருந்தது. துடிக்கும் உதடுகள்கொடுமையர்ன வார்த்தைகளை உச்சரித்தன.

"சரோஜா...போய்விட்டாள்..."என்று அலறினாள்.

"போய் விட்டாளா... எங்கே?...என்ன உளறுகிறாய்...?" என்றேன். எனக்கு ஒன்றும் தோன்றவில்லை.

"என்ன நடந்தது? தயவுசெய்து ரகளை செய்யாமல் சொல்லுங்கள்...தைரியமாய்ச் சொல்லுங்கள்..." என்றார் என் கணவர்.

என் தாயார் தன்மனத்தைக் கொஞ்சம் ஆறுதல் செய்துகொண்டாள். நடந்த விஷயமென்னவென்றால் சரோஜா இரவில்விழித்துக்கொண்டாள். என் தாயார் விழித்துக்கொண்டபோதிலும், சரோஜா விளக்கொன்றும் ஏற்றிக்கொள்ளாமல் கீழே குளிக்கும் அறைக்குச் சென்றாளாதலால் 'சரி ஏதோ காரியமாகப் போகிறாளென்று என் தாயார் நினைத்து, மறுபடியும் கண் அயர்ந்துவிட்டாள். மறுபடியும் விழித்துப் பார்க்கும்பொழுது சரோஜாவைக் காணோம். உடம்பு ஏதாவது அசௌகர்யமாயிருக்குமோவென்று கீழே சென்று கூப்பிட்டுப் பார்த்தும் பதிலொன்றும் வராததால், ஒவ்வொரு அறையாகத் தேடினாள். அப்பொழுது வெளிக்கதவு கொஞ்சம் திறந்திருந்ததை என் தாயார் கண்டாள். என்ன செய்வது என்று தெரியாமல் என்னை வந்து கூப்பிட்டிருக்கிறாள்.

சரோஜா சென்று எவ்வளவு நேரம் ஆயிற்று? எங்கு, எந்தத் திக்கை நோக்கி நடந்தாள் என்று யாருக்குத் தெரியும்?

"போய்விட்டாள்...அவ்வளவுதாண்டியம்மா... மத்தியானம் கூடச் சொன்னாளே..'இனிமேல் இங்கே இருக்க நமக்கு யோக்கியதை இல்லை...' என்று சொன்னாளே...ஐயோ ... என் கண்ணே...!" என்று என் தாயார் வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டாள்.

என் கணவர் அவளைத் தைரியப்படுத்த முயன்றார். நீங்கள் பயப்படவேண்டாம். இச்சமயங்களில் நமக்குத் தைரியம் வேண்டும். நான் தேடிப் பார்த்துவருகிறேன். எங்கேயும் போயிருக்கமாட்டாள். கொஞ்சம் பொறுங்கள்...வீணாக மனதைப் புண்படுத்திக்கொள்ளுவதில் என்ன பலன்...?" என்று சொல்லிவிட்டு என் கணவரும் வெளியே சென்றார்.

அவர் சென்ற பிறகு என் தாயார் என்னைப் பிடித்துக்கொண்டாள்.

"இனிமேல் நீ ஜோராயிருடியம்மா...!அவளைத் தொலைச்சாயா...?போ...!அவள் எங்கேயாவது செத்துக்கிடந்தால், அதற்குக் காரணம் நீதான். எங்களிருவரையும் கொல்லப் பார்த்தாய். நான் தடிமாடு. மானம், வெட்கம் எல்லாவற்றையும் விட்டுவிட்டு உன்னிடத்தில் வந்தேன். உன் ஆதிக்கத்தை என்னால் பொறுக்க முடியும். அவள்...அதற்குமேல் என் தாயார் சொன்ன வார்த்தைகள் அழுகைக் குரலுடன் கலந்துவிட்டது.

நான் பதிலொன்றும் பேசவில்லை. பேசமுடியவில்லையென்றே சொல்லவேண்டும். என் மனம் பிரம்மித்துப்போயிருந்தது. என் வாழ்க்கையை நொந்துகொண்டேன். சரோஜா அன்றைக்குத் துர்மரணம் செய்துகொண்டால், என் ஆயுள் பூராவும் அந்தக் கொடிய பாவம் என்னையே சேருமென்று நான் அறிவேன். நானல்லவா அவளை அந்த வீட்டிலிருந்து துரத்தினேன்?

என்றுமில்லாமல் கடவுளைப் பிரார்த்தித்தேன். என் கணவர் சரோஜாவை எப்படியாவது கண்டுபிடிக்க வேண்டுமேயென்று ஏங்கினேன்.

மணி மூன்று அடித்தது. என் கணவர் சென்று சுமார் இரண்டு மணி நேரம் கடந்தும் இன்னும் வரவில்லையே!

"இத்தனை நாழியாச்சே... சரி; அவ்வளவுதான்...!" என்றாள் என் தாயார். அதற்குமேல் மறுபடியும் அழுகைதான். எனக்கு அழுகை வராமலில்லை. ஆனால், அழுது பயனில்லை என்று நினைத்தேன்.

மணி நான்கு அடித்தது. வெளிக்கதவு திறக்கப்பட்டது. என் தாயார் ஆவலோடு ஓடிப் போய்ப் பார்த்தாள். ஆனால் என் கணவர்மட்டும் தான் வந்தார். ஓவென்று அலறினாள் என் தாயார்.

"காணோம். அக்கம்பக்கத்தில் பார்த்தாய்விட்டது. போலீஸிலும் சொல்லியிருக்கிறேன். உடனே புறப்பட்டிருக்கிறார்கள். எந்தப்பக்கம் என்று தெரியவில்லையே..! அழாதேயுங்கள்...கொஞ்சம் பொறுங்கள். !" என்றார்.

நாங்கள் கதவைமட்டும் திறந்து வைத்துக்கொண்டு வீதியில் எட்டிப் பார்த்தவண்ணமாயிருந்தோம். எங்கள் கண்கள் பூத்துப்போயினவே தவிர சரோஜா வரவில்லை.

5

இரண்டு நாட்கள் சென்றன. இரண்டு யுகங்களென்றே சொல்லவேண்டும். என் தாயார் இருந்த இடத்தை விட்டு அகலவேயில்லை. ஒன்றும் சாப்பிடவுமில்லை.

இரண்டு நாட்கள்தான்! ஆனால், அந்த நாற்பத்து எட்டு மணி நேரத்தில் எங்கள் வீடு பட்டபாடு கடவுளுக்கே தெரியும்!

சரோஜாவைப்பற்றிய பழைய ஞாபகங்கள் என் மனக் கண்முன் வந்து நின்றன. எத்தனைப் பண்டிகைகள், எத்தனை திருவிழாக்கள்! நாங்களிருவரும் ஒன்றாகக் கண்டு, பக்ஷணங்கள் உண்டு களித்திருந்தோம். பிறகு எங்கள் கலியாணம் ஒரே மணப்பந்தலில் நடந்த கலியாணம். ஆனால் எங்கள் வாழ்க்கையில்
இவ்வித மாறுதல்கள்
மென்று கனவிலும்
திருப்போமா?

அந்த இரண்டு நாட்க
என் மனதை நான் ஆராய்
பார்த்தேன். சரோஜாவி
என்ன ஆயிற்றோ! எங்
குளத்தில் விழுந்த
எந்த மோட்டார்
எந்த டிராம் அவளைத்
சக்கரங்களினிடையில்
யிருக்குமோ? ச
மறுபடியும் உயிருட
கப்போகிறேனோ
அவளைக் கொன்ற
னால் சூழ்ந்துதான்
வாழ்நாட்களைக் க
டுமோ? இவைக
தங்கள். இரண்டு
படிஎன் மனம் த
க்க வேதனையி
கொண்டிருந்தது.

மூன்றுவது நாள் காலை ஒன்பதுமணி இருக்கும். என் கணவர் சாப்பிட்டுவிட்டு ஆபீஸுக்குப் போக உடுத்துக் கொண்டிருந்தார். வெளிக்கதவை யாரோ அவசரமாகத் தட்டினர்கள்.

என் தாயார் வாசற்கதவைத் திறந்தாள். நாங்களும் வாசலை அடைந்தோம். முதலில் எங்கள் கண்களுக்குப் புலப்பட்டது ஒரு சநயாசி. அதிக வயதானபோதிலும், யோகாப்பியாசத்தினுல் ஏற்பட்ட திடகாத்திரமான சரீரி. மூன்று ஆசைகளையும் முற்றும் துறந்த சந்நியாசிகளின் அறிகுறியான காவி ஆடை அவரைச் சோபித்தது. அவர் ஒரு வங்காளி. எங்கள் வீட்டிற்கு ஏன் வந்திருக்கிறுர் என்று நாங்கள் யூகிக்கவேண்டிய சந்தர்ப்பம் ஏற்படவில்லை. ஏனென்றுல், அவருக்குப்பின்னுலிருந்தது என் அக்காள் சரோஜா. அவள் தேகம் மெலிந்து வாடியிருந்தபோதிலும், அவள் முகத்தில் என்றுமில்லாத ஒளி பிரகாசித்தது.

அதற்குக் காரணம் அவளுடன் இருந்த அவள் கணவர், என் அத்திம்பேர்!

சிறிய வயதுதான். பெருத்த மனோவேதனையினுல் பீடிக்கப்பட்டிருந்தாரென்பதை அவர் முகத்திலிருந்து யாரும் அறிந்துகொள்ளலாம். எல்லாம் ஈசன் செயல்-என்று கடவுளை நம்பி மனிதப்பிரயாசையினுல் பலனென்றும் கிடையாது என்று நிர்விசாரமாக இருக்கின்றவர்களைப் போலவேயிருந்தார்.

வந்தவர்கள் யாவரென்று தெரிந்தபோதிலும் அவர்கள் வந்த சமயமும், வந்த விதமும் கவனிக்கையில், நாங்கள் பிரமித்துப்போய் மௌனமாயிருந்ததில் ஆச்சரியம் என்ன! முன்பின் அறிமுகமாகாத ஒரு வங்காள சநயாசி, திடீரென்று மறைந்த என் சகோதரி சரோஜா அவள் வாழ்க்கைக்குப் புத்துயிர் அளிக்கவந்த அவள் கணவர்.

எங்கள் பிரமை நீங்குவதற்குமுன், அந்தச் சநயாசி, "வாருங்கள், உள்ளே போகலாம்" என்றுர்.

எல்லோரும் உள்ளே சென்றோம். அதுவரையில் தன் ஆவலை அடக்கிக்கொண்டிருந்த என் தாயார் சரோஜாவைப் பேரன்புடன் வாரி அணைத்துக் கொண்டாள். சரோஜாவின் கணவரை என் கணவர் வரவழைத்து நன்கு உபசரித்தார்.

எப்படி அவர்கள் மூவரும் சந்திக்க நேரிட்டது என்பதைச் சரோஜா சுருக்கமாகச் சொல்லிமுடித்தாள். அதன் வரலாறு பின்வருமாறு:—

எங்கள் வீட்டைவிட்டுப் புறப்பட்ட சரோஜா நேராகக் கல்கத்தாவிற்குச் சுமார் 8மைல்களுக்கப்பாலுள்ள பேலூர் ராமகிருஷ்ண மடத்திற்குச் சென்றுள். அவ்வளவு தூரம் அவளால் நடக்கமுடியாமல் நடந்ததால், அதை அடைந்தவுடன் தோட்டத்தில் களைப்பாறினுள். மறுபடியும் அவள் விழித்தபொழுது தன்னையே உற்று நோக்கியிருக்கும் மேற்சொன்ன சந்யாசியைக் கண்டாள். அவர் மிகவும் பக்ஷமாக அவளை யாரென்று வினவ, ஆனுல் சரோஜாவுக்கு வங்காள பாஷை தெரியாததால் பதிலொன்றும் சொல்ல முடியாமலிருந்தாள். அவள் சங்கடத்தை ஒருவாறு அறிந்து, அந்தச் சந்யாசி தன்னிடத்தில் வேதாந்த விசாரம் செய்துகொண்டிருந்த ஒரு தென்னிந்தியச சிடரை விசாரிக்கச் சொன்னுர்.

அந்தத்தென்னிந்தியச் சிடர் என் அத்திம்பேர். சரோஜாவின் கணவர். அவர்கள் அவ்விதம் எதிர்பாராத முறையில் சந்தித்தது அவருக்கு இடுக்கலாயிற்று. ஏனென்றுல், அந்த மடத்தில் அவர் சேரும் பொழுது, தானுகவே தனக்குக்கலியாணம் ஆகவில்லையென்று பொய்யைச் சொல்லியிருந்தார். பிறகு என் குருவினிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு சரோஜாவின் கதையையும் தன் பெற்றோரின் பேராசையினுலும் கொடுஞ் சிந்தனையினுலும் சரோஜாவைத் தான் தள்ளிவைத்ததாகவும், ஆனுல், நாளடைவில் தன் மனம் புண்பட்டு வீட்டைவிட்டு ஓடி, அவர் சரணுகதியை அடைந்ததாகவும் சொன்னுர்.

அவர்களுடைய துயர்பட்ட நிலைமையைக்கேட்ட அந்த சந்யாசி அவர்கள் மனத்தாங்கல் கொஞ்சம் தீருவதற்காக இரண்டு நாட்கள் அங்கேயே இருக்கச்சொல்லி அன்று காலையில் எங்களிடம் சமர்ப்பிக்க வந்ததாகச் சொல்லி முடித்தார்.

* * * *

அன்றைய தினத்திலிருந்து ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் எங்கள் குடும்பத்தவர் எல்லோரும் கல்கத்தாவிற்கருகாமையில் கங்கையின் கரையில் அமைக்கப்பட்டுள்ள பேலூர் ராமகிருஷ்ண மடத்திற்குச் செல்லத் தவறுவதில்லை. பரமஹம்ஸர் ஐக்கியமடைந்த இடத்தையும், இன்னும் அங்கு எழுந்தருளியிருக்கும் புண்ணிய மூர்த்திகளையும் தரிசித்து வருகிறோம்.

சரோஜாவிற்கு இப்பொழுது குழந்தை ஒன்று இருக்கிறது. என் அத்திம்பேர் ஒரு கம்பெனியில் உயர்ந்த உத்தியோகத்தில் இருக்கிறுர். இருந்தபோதிலும் அவர்கள் தனிக் குடித்தனம் செய்யப் பிரியப்படவில்லை. நான் அதற்குச் சம்மதிக்க வில்லை. எல்லோரும் சகுகுடும்பமாக வாழ்ந்து வருகிறோம்.

என் தாயார், சரோஜா, அவர்களைவிட, என் வாழ்க்கையில் ஏற்பட்டிருக்கும் புத்துணர்ச்சி எனக்கே ஆச்சரியமாயிருக்கிறது. முன் என்னைக் குடிகொண்டிருந்த அசூயைப் பேயும், ஆபாசக் கோபமும் இப்பொழுது என்னை விட்டு அகன்றுவிட்டது. அது நான் பூர்வ ஜென்மத்தில் செய்த புண்ணியமே.

உற்றுர் உறவினர், இவர்களுடைய சேர்க்கை கொஞ்சம் கூட இல்லாமல் வாழ்க்கையை நடத்த இக்காலத்துப்பெண்கள் ஆசைப்படுகிறுர்கள். அது தவறு. பந்துக்களால் நமக்கு எவ்வளவோ கஷ்டமிருக்கலாம். அவர்களுடைய நடவடிக்கைகள் நமக்குப் பிடிக்காமலிருக்கலாம். நமக்குக் கோபத்தையும் விளைவிக்கலாம். ஆனுல், அவர்களில்லாமல் நமது வாழ்க்கை ஒரு பாலைவனத்திற்கே சமானமாகும். தற்காலத் தனிவாழ்க்கை எவ்வளவோ அற்ப சுகங்களையும், சௌகர்யங்களையும் கொடுப்பினும் அது வாழ்க்கையாகாது. உறவினர்களே நமது ஆப்த நண்பர்கள் என்பதை நாம் மறக்கவே கூடாது.

அந்த உண்மையை எங்கள் இரு சகோதரிகளுடைய வாழ்க்கைச் சரித்திரமே நிதர்சனமாக விளக்குகிறதல்லவா?

* * * *


# ஜெனித் திராக்ஷாஸவா

ஆயுர்வேத சாஸ்திரீய முறைப்படி "ஜெனித் திராக்ஷாஸவா" தயாரிக்கப்பட்டிருக்கிறது. க்ஷயரோகத்தின் ஆரம்ப நிலையையும், காசம், இருமல் முதலிய ஈரல் நோய்களையும், ஜலதோஷம், சளி, அஜீர்ணம், மலச்சிக்கல், வாந்தி யெடுத்தல் முதலான நோய்களையும், தொண்டையைப்பற்றின சகல ரோகங்களையும் முழுவதும் குணப்படுத்தும். குழந்தைகளுக்கு உண்டாகும் கக்குவான் இருமலுக்குக் கைகண்ட மருந்து. இது வெகு ருசியுள்ள பானம். தினசரி உபயோகித்தால் குடலைச் சுத்தி செய்து பசியை அதிகரிக்கச் செய்கிறது. படுப்பதற்குச் சிறிது நேரத்திற்கு முன் ஜெனித் திராக்ஷாஸவாவைச் சிறிது பருகினுல், காலையில் எழுந்து வேலை செய்வதற்கு வெகு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் கொடுக்கும்.

ஒவ்வொரு நகரத்திலும், கிராமங்களிலும் கூட, இப்பொழுது ஜெனித் திராக்ஷாஸவா கிடைக்கும். தபால் மூலமாக இம்மருந்தை அனுப்புவதென்றுல் அதிகச் செலவு ஆகும். நீங்கள இருக்கும் இடத்திலேயே ஜெனித் திராக்ஷாஸவாவை வாங்கினுல் உங்களுக்கு லாபமும் சௌகரியமும் உண்டு.

**ஜெனித் கெமிகல் ஒர்க்ஸ்,**

தேவகரன் கட்டடங்கள், பிரின்ஸஸ் தெரு, பம்பாய்.

**The Zenith Chemical Works,**

Deokaran Mansions, Princess Street, Bombay, No 2.

சென்னை ராஜதானிக்கும், மைசூர் சமஸ்தானத்திற்கும் ஸோல் டிஸ்டிரிபியூட்டர்கள்:—

**ஜே. பலாபாய் & கம்பெனி,**

260, சைனுபஜார் — மதராஸ்



## நரம்புக்கு வலுவூட்டுவதில் சிறந்தது

**புரோபசர் ஜேம்ஸின்**

எலெக்ட்ரோ டானிக்பர்ல்ஸ் (ரிஜிஸ்டர்ட்)



நரம்பு வியாதிகள், தூக்கமின்மை, ஞாபக சக்திக் குறைவு, பித்த மயக்கம், அசதி, பலவீனம் இவற்றை நிச்சயமாகப் போக்குவது. தவருமல் உபயோகியுங்கள்; மற்றவர்கள்போல் குணம் பெறுவீர்கள். விலை 25 பர்ல்ஸ் அடங்கிய புட்டி 1-க்கு ரூ 1—4; 40 அடங்கிய புட்டி 1-க்கு ரூ. 2. வி. பி. சாரஜ் வேறு.

4-அணு ஸ்டாம்பனுப்பினுல் 2-நாள் உபயோகத்திற்கான சாம்பிள் பாக்கெட் கிடைக்கும்.

மொத்த ஏஜண்டுகள்.

The Anglo Indian Drug & Chemical Co., BOMBAY, 2



ஒரு வக்கீல் இருவர் சேர்ந்து ஆரம்பிக்கும் கம்பெனி ஒன்றிற்கான ஒப்பந்தங்களை எழுதிக்கொண்டிருந்தார். முடிவாக அவர் தாம் எழுதிய ஒப்பந்தத்தைப்படித்துவிட்டு "இதில் தீப்பிடித்துக் கொண்டாலாவது கம்பெனியை மூடிவிட்டாலாவது என்ன செய்வது என்பதைப்பற்றிய ஷரத்துக்களைச் சேர்க்கவில்லை, அதையும் சேர்த்துவிடுகிறேன்" என்றார்.

கூட்டாளிகள் இருவரும் ஒரே சமயத்தில் "அதையும் சேர்த்துவிடுங்கள். ஆனால் லாபம் இருவருக்கும் சமமாகப் பிரிக்கப்படவேண்டும்" என்றனர்.

* * * *

ஒரு கனவான் வீட்டில் விருந்தொன்று நடந்தது. அதற்கு வந்திருந்த ஒருவர் அன்று மழையும் இடியுமாகவிருந்ததால் வெளியே செல்லப் பயந்து அங்கேயே தங்கிவிடுவதென்று தீர்மானித்தார். கனவானின் வேலைக்காரன் அவர் இருப்பதற்காக ஒரு அறையைக் காட்டினான். அதைப் பார்த்த விருந்தாளி பயந்து, "இந்த அறை உபயோகப்படுத்தப்படுவதில்லை போலிருக்கிறதே. ஏதாவது பேய் பிசாசுநடமாட்டம்உண்டோ" என்று கேட்டார்.

வேலைக்காரன்:— அப்படியொன்றுமில்லை. 20 வருஷமாக எல்லாம் சரிவர நடக்கின்றன. அந்த அறையில் ஒரு இரவு தூங்கினால்போதும். அவர் மறுநாள் காலை காணப்படமாட்டார்.

* * * *

ஒரு கடைக்காரர் அங்கு வழக்கமாகச் சாமான் வாங்குகிறவர் ஒருவருக்குக் கடன் கொடுத்துப் பிறகு பணம் வாங்கிக்கொள்வது வழக்கம். ஒரு நாள் சாமான் வாங்குகிறவர் தான் வழக்கமாக வாங்கும் கடைக்குச் செல்லாமல் எதிர் கடைக்குச் சென்று சாமான்கள் வாங்கிக்கொண்டுவந்தார்.

இதைக் கண்ட பழைய கடைக்காரர்:—நான் ஏற்கனவே கடனில் சாமான் கொடுத்திருக்கிறேன். இப்பொழுது நீங்கள் எதிர்க் கடைக்குச் சென்று பணம் கொடுத்து வாங்குகிறீர்கள். என் பாக்கியைத் தீர்த்து விடுகிறது தானே.



சென்னையில் ஓர் பிச்சைக்காரன் உபயோகிக்கும் நூதன வண்டி.

"நீங்கள் ரொக்கத்திற்குச் சாமான் கொடுப்பீர்களென்று எனக்குத் தெரியாது."

* * *

ஆபீஸ் நேரத்தில் ஒரு தொழிலாளி மெள்ள நழுவப் பார்த்தான். ஆனால் அவன் அப்படிச் செல்கையில் மானேஜர் பார்த்துவிட்டார்.

மானேஜர்:— என்னையா பார்க்க வருகிறாய்?

வேலையாள்:—உங்களைப்பார்த்துக் கொண்டுதான்வந்தேன். ஆனால் நீங்கள் பார்ப்பதை நான் விரும்பவில்லை.

* * * *

நாடகம் முடிந்தது. ஒரு நவநாகரீக ஸ்திரீ நாடகத்தில் நடித்த விதூஷகனைப் பார்த்து "நீங்கள் தானே விதூஷகனாக நடித்தது. உங்கள் தொண்டை பெரிதுதான். குரல் தீர்க்கமாகவிருக்கிறது" என்றாள்.

விதூஷகனுக்கு நிரம்ப சந்தோஷமாகவிருந்தது.

ஸ்திரீ:—சரி, உங்கள் குரல் தான் தீர்க்கமாகவிருக்கிறதே! என் கார் ஓட்டுகிறவன் எங்கேயாவது தூங்கிக் கொண்டிருப்பான். அவன் பெயர் கிருஷ்ணன். அவனை தயவு செய்து பெயர் சொல்லிக் கூப்பிடுங்கள்.

* * * *

ரெயில் ஒரு சிறிய ஸ்டேஷனில் நின்றது. ஒரு கனவான் ரெயிலிலிருந்து தலையை வெளியே நீட்டிப் பார்த்தார். அங்கு கார்டு நின்றுகொண்டிருந்தார். அவரைப்பார்த்து "நான் காப்பி சாப்பிட்டு வரும்வரை வண்டி இங்கு நிற்குமா?' என்று கேட்டார்.

கார்டு:—நிற்கலாம்.

"நிச்சயமாகத் தெரிய வேண்டுமே?"

"நான் வேண்டுமானால் உங்களுடன்கூடக் காப்பிசாப்பிட வருகிறேன். அப்பொழுது தான்உங்கள்சந்தேகம்தீரும்."

* * ர் *

பிச்சைக்காரன்:— நான் சாப்பிட்டு இரண்டு நாட்களாகின்றன. என் வயிற்றைப் பாருங்கள்.

லோபி:—எனக்குத் தெரியவில்லை. மூக்குக் கண்ணாடியை வீட்டில் வைத்துவிட்டேன் நாளைக்கு வா.

* * * *




## தியாகராஜா தங்க நகைகள்

அசல் சவரன் பொன்னுக்கு ஒப்பானது. அநேக கண் காக்ஷிகளில் தங்க மெடல்கள் பரிசு பெற்றது. தங்கத்துக்குக் கனத்தில் குறைந்தாலும் குணத்தில் மேற்பட்டது!

நாகரீகத்திற்கேற்ற நானாவிதக் கலர் மாலைகளும், வளையல், செயின், ஒட்டியாணம் முதலிய நகைகளும் நயமாய்க் கிடைக்கும். கேட்லாக் இனம்.

**ஸ்ரீ தியாகராஜா மெட்டல் ஒர்க்ஸ்,**

77, சைனா பஜார் ரோட், மதராஸ்

BLACKLOCK & MACARTHUR LTD., GLASGOW




வெள்ளை வர்ணத்தில் 541 வெள்ளைதான் உயர்ந்தது. வெண்மை மாறாது. வெடிக்கவும் செய்யாது. அதிக ஸன்னமாதலால் ஆண்டுவரும். 541 ஈய வெள்ளையை வாங்கி உபயோகித்தால் கூலி மிச்சமாகும். அடிக்கடி வர்ணம் கொடுக்கவேண்டிய அவசியமுமிராது. 541 கெக்கின்பேரில் மான்மார்க்கும் இரண்டு ஈய வில்களும் இருக்கிற கெக்காகப் பார்த்து வாங்குங்கள். போலிகளை வாங்கி ஏமாறுநீர்கள். செந்தூரத்தில் "மான்மார்க்"செந்தூரம்தான் உயர்ந்தது. இவைகள் எல்லா வர்ண வியாபாரிகளிடத்திலும் கிடைக்கும்.

Sole Agents:-M., R. V. AIYER & Co., 49, பந்தர் தெரு, மதராஸ்.

தஞ்…
பூர் உ…
த்தி ஐ…
கிடைய…
ரர். நா…
னம். ஐ…
அத்து…
தரும…
பிச்சை…
க்கு வ…
திரும்…
ஒரு…
விளங்…
சிதை…
போவ…
ய்யா…
ந்தி…
அ…
ந்து…
குழ…
பெ…
ரண்…
லும்…
இரு…
வே…

தா… ஹு… …டர் கதை.

மது…



# …ாதா

(…ல ஸ்ரீமான் சுந்தரம்பிள்ளை)

### முன் கதைச் சுருக்கம்

…ந்தகோப முதலியார் மகேந்திரத்தில் காட்டு இலாகாவில் …த்திலிருந்தார். அவருடைய குமாரி ராதாவிற்கு அமரே…சன படிப்புச் சொல்லிக்கொடுத்து வந்தார். நச்சுமுதலி நந்தகோபருக்கு மைத்துனன் முறை. தண்டபாணியின் சிற்றப்பன் நச்சுமுதலி.

நந்தகோபர் மனைவி அனந்த கல்யாணியின் பேச்சுக்குப் புறம்பாக நச்சுமுதலியின் சூது காரணமாக ராதாவிற்கும் தண்டபாணிக்கும் விவாகம் நடைபெறுகிறது. அனந்த கல்யாணி ஒரு பிள்ளையைப் (மாதவன்) பெற்று இறந்துபோகிறாள். நச்சுமுதலி தன் குமாரியான காளத்தியை நந்தகோபருக்கு விவாகம் செய்து வைக்கிறார்.

நச்சுமுதலியின் துஷ்கிருத்தியங்களுக்காக அவர் சிறைத் தண்டனையடைகிறார். சிறையிலிருந்து வெளிவந்தபின் தனக்குக் கீழ்ப்படியாத தண்டபாணியைச் சதிசெய்து கொன்றுவிட ஏற்பாடு செய்தார். காளத்தி நந்தகோபருடன் சண்டையிட்டுப் பிறந்தகம் சென்றாள்.

டாக்டர் நாயனார் சென்னைப் பத்திரிகையொன்றின் ஆசிரியர். அவர் தமது சுற்றுப்பிரயாணத்தில் கொத்துவால் தோப்பிற்கு வந்தார். அங்குதான் தற்சமயம் நந்தகோபர் தமது வேலையை ராஜிநாமாச் செய்துவிட்டுக் குடும்பத்துடன் வசித்து வந்தார். நந்தகோபர் வீட்டிலில்லாத சமயம் மாதவனுக்கு நோய் உண்டாயிருந்தது. அதை நாயனார் குணப்படுத்தினார். பின்னிட்டு அவர் அவ்வீட்டு ரகசியங்களை அறிகிறார்.

காணமற் போயிருந்த நந்தகோபரின் சகோதரி கற்பகமும், அந்தமான் சென்றிருந்த அவளது கணவர் கார்த்திகேயரும் வீடு திரும்புகின்றனர். ராதாவின் மூலம் டாக்டர் நாயனார், அமரேசன் என்பதை அறிந்த கற்பகமும் கார்த்திகேயரும் நாயனாருக்கு ஒரு கடிதம் எழுதி நந்தகோபரிடம் கொடுத்தனுப்புகின்றனர். நாயனார் அதைப் படித்துவிட்டு நந்தகோபருடன் அவர் வீட்டுக்குச் செல்லுகிறார் அங்கு நாயனாரின் பெற்றோர் கார்த்திகேயர், கற்பகம் என்று வெளியாகிறது. சிறுவன் மாதவனை விஷம் வைத்துக் கொல்ல முயற்சித்த குற்றத்திற்காக நச்சுமுதலிக்கும் பிச்சுவையனுக்கும் தீவாந்திர சிக்ஷை விதிக்கப்படுகிறது. நாயனாரின் விவாகப் பேச்சு ஆரம்பமாகிறது.

இருவரும் வாய்க்காலில் இறங்கி ஜலத்தில் நின்றுகொண்டிருக்கும்பொழுது,

ராதா:—அத்தை, நாம் அதிகாலையில் வந்து குளித்திருப்போமானால், தண்ணீர் மிகவும் தெளிவாயிருக்கும். இவ்வளவு கலங்கியிராது.

கற்ப:—உன் அத்தானிடம் பேசிக்கொண்டேயிருந்துவிட்டேன். நேரமாய்விட்டது.

ராதா:—இரண்டு மணி நேரமாய் இருவரும் என்ன பேசினீர்கள்?

கற்ப:—என்ன பேச்சு? கல்யாணப் பேச்சுதான். அவன் ரொம்பக் கவலைப்படுகிறான்.

ராதா:—கல்யாணப் பேச்சில் கவலையேன்படுகிறார்கள்?

கற்ப:—என்ன கவலை? எல்லாம் உன்னைப்பற்றிய கவலைதான்.

ராதா:—என்னைப்பற்றிய கவலை எப்பொழுதுமுள்ள கவலைதானே?

கற்ப:—உனக்கு அத்தான்-உபாத்தியாயர் என்ற இருவகைப் பாசத்தினாலும் அவன் உன் கதியை நினைந்து நினைந்து வருந்துகின்றான்; தனக்கே இனி விவாகம் வேண்டியதில்லை யென்கிறான்.

ராதா:—இதென்ன நியாயம்? என் தலைவிதி நான் இப்படியிருக்கிறேன். அதற்கு அத்தான் கவலைப்படுவதிற் பயனென்ன?

கற்ப:—பயனில்லாமல் அவன் வீண் கவலைப்படுவானா? நீ அன்றிரவு "தீராக் கவலை ஒரு நாளும் தீராது" என்று சொன்னதை நான் அவனிடம் சொன்னேன். அதற்கு அவன் உன் கவலை தீரும் கவலையேயன்றித் தீராக் கவலையல்லவென்கின்றான். அவன் சொன்னதை யெல்லாம் உன்னிடம் எப்படிச் சொல்வது?

ராதா:—அத்தான் வேறே என்னவெல்லாம் சொன்னார்கள்?

கற்ப:—ராதா, உன்னிடம் நான் சொல்வதைத்தானே சொல்லலாம். சொல்லக் கூடாத சொல்லைச் சொல்லலாமா?

ராதா:—சொல்லக்கூடாத சொல் என்ன? நீங்கள் என்னை வையப்போகிறீர்களா? அல்லது திட்டப்போகிறீர்களா? தாய்போன்ற நீங்கள் வைதாலும் நான் கேட்டுக்கொள்ள மாட்டேனா?

கற்ப:—வையவும் திட்டவுமா உன்னிடம் நான் இவ்வளவு ஜாக்ரதையாய்ப் பேசுகின்றேன்? மங்களமாயிருக்கத்தான் வகைதேடுகின்றேன்.

ராதா:—(சிறிதுநேரம் மௌனமாய்; வாய்க்காலில், மேல் வெள்ளம் வந்தாற்போல் மலமலவென்று கண்ணீர் வடித்துக்கொண்டு) அத்தை, மங்களமா? எனக்கா மங்களம்! நல்லது! நல்ல யோசனை!

கற்ப:—ராதா கோபமா? தாயே, என்மீது வருத்தமா?

ராதா:—(விம்மிக்கொண்டு) வருத்தமொன்றுமில்லை. நீங்கள் மங்களமென்று சொன்னவுடன் என் வயிற்றில் தீப்பிடித்தாற்போலிருக்கின்றது. அத்தை, நீங்கள் வருத்தப்பட்டுக்கொள்ளப்படாது. அத்தானும் என்மேற் சடைத்துக் கொள்ளப்படாது. நீங்கள் ஒருவரும் என்னைப்பற்றிய கவலையை வைத்துக்கொள்ளவேண்டாம். எனக்கு மங்களமும் வேண்டாம்; ஒன்றுமே வேண்டாம். நான் எப்படிப்போனாலும், என் அத்தானாவது உலகத்தைப்போல மங்களமாயிருந்தால்போதும். அதுவே யெனக்குத் திருப்தி. செருப்பிற்கிசையக் காலைத்தறித்தாற்போல், என் க்ஷேமத்தின் பொருட்டு என் அத்தானுக்குக் கௌரவக் குறைவுவேண்டாம். அவர்களுடைய கல்வி முதலிய அந்தஸ்துகளுக்கு, அவர்கள் சற்றேறகாவையசைத்தால், மாசுமருவற்ற உத்தமமான மங்கலப் பெண்கள் எத்தனையோபேர் உனக்கெனக்கென்று ஓடியோடி வருவார்களே? அதையெல்லாம் விட்டுவிட்டு இதென்ன யோசனை? எனக்கு இதுவரையுள்ள கவலையெல்லாம் காணமல், இந்தக் கவலையையுமா வருவித்துக்கொள்ள வேண்டும்?

கற்பக:—அம்மா, எந்தக் கவலையை வருவித்துக்கொள்ளப்போகிறாய்?

ராதா:—அத்தை, நான் இதைவிட விவரித்துச் சொல்ல வேண்டுமா? இத்தனை காலமும் மகா கேவலமான மிகவும் இழிவான விதவையென்ற பெயரோடு விதவைக் கோலம் பூண்டிருந்துவிட்டு, இனிமேல் ஒரு நாயகன் முன்—அதுவும், என் அத்தானைப் போன்ற பரம பரிசுத்தமான உத்தம நாயகர் முன்—மனைவியென்ற பெயரும் வேடமும் பூண்டு எதிரே நிற்க நான் இசைவேனோ? என் மனசாக்ஷியே என்னைப்பார்த்து நகைக்காதா? இகழாதா? நானே இசைந்தாலும் உலகம் ஒப்புமா? பார்த்தோர் சீ யென்று உமிழ்ந்து பழியார்களா? எனக்குத்தான் பெருமையுண்டா? கன்னிகைப் பருவத்தில் உலக முறைப்படி மணந்த மற்றப் பெண்களுக்குள்ள கம்பீரமும் களையும் இறுமாப்பும் எனக்கு வருமா? உலகில், இணையற்ற பெருமையும் குணமும் வாய்க்கப்பெற்ற புருஷ சிகாமணிக்கு மனைவியானேனென்ற மகிழ்ச்சியும் பூரிப்புமெனக்குண்டாயினும் கூட, அத்தனை மகிழ்ச்சியையும் அத்தனை பூரிப்பையும், நான் மனதார அனுபவிக்கவொட்டாமல் என் பழய கோலமும் பழய நினைவும் இடையிடையே வந்து என்னைத் தடுக்காதா? பால் பழம் நெய் தேன் சர்க்கரை முதலிய இனியவஸ்துக்களாற் செய்யப்பட்ட மதுரமான பஞ்சாமிர்தத்தில் ஏதேனுமொரு அருவருப்பான இழிந்த வஸ்துவைச் சற்றே கலந்தால், அவ்வினிய பஞ்சாமிர்தத்தை நாயும் புசியாதே? அதுபோலவே, என் அத்தை, நான் எத்தனையோ விதமான சந்தோஷங்களையும், பவிசுகளையும் போகபோக்கியங்களையும் இனி அனுபவிக்கும்படி நேர்ந்தாலும், என்னுடைய இந்தப் பாழான பழங்கோலமும் பழநினைவும் அத்தனையையும் பாழாக்கி, என் மனத்தை

ஜாக்கிரதை!
கரும்பூதம்
வருகிறது!

மனோரஞ்சனி
இது ஒரு மாதாந்த நாவல் சஞ்சிகை. 1937 ஜனவரி முதல் சம்சார சன்னியாசி என்னும் நாவல் தொடர்ச்சியாய் வெளிவரும். இதன் வருட சந்தா ரூ. 1-8. மாதிரிக்காபி இனும்!
எம். எஸ். ராமுலு கம்பெனி,
286, எஸ்பிளனேட், மதராஸ்.



கார்த்திகேயர்:—அந்த ஆக்ஷேபனையைத் தானு ராதா பிரமாதமாய்ச் சொல்லுகின்ருள்! கோலம் கோலமென்று சும்மா சொல்கிருயே, ராதாவுக்கு இப்பொழுது என்ன கோலம் வந்துவிட்டது.


இந்தியா கவர்ன்மெண்டு வைத்திய பட்டதாரியும்,
இந்தியன் மெடிகல் ஸ்கூல் ஹாஸ்பிடல் இவைகளின்
னிங்பாடி, மெடிகல் அட்வைஸரி கமிட்டி, & ஸெண்ட்
இவைகளில் மெம்பரும், கவர்ன்மெண்டு வைத்திய க
மெடிகல் டிப்ளோமா பட்ட பரீக்ஷைகளுக்கு பரீக்ஷாதி

வைத்தியரத்ன பண்டிட் யு. ராமநாத சாஸ்திரிய



(Sastriar in Govt. Medical dress)

ம ஹா
பில்வாதி
பித்தவாயு, கீல்
மயக்கம், பலஹீ
துவேஷம், அஜீ
சிக்கல் இவைகளை
1 சேர் கொண்
ரூபா 3. வி. பி

ஆனந்த
குணம், ருசி,
களில் இது ஒ
கெட்டில் சிறந்த
0—2—9. ஒரு
பெட்டி 1-க்கு
வி.பி.வேறு. எ

ஆனந்த
ஆனந்த பற்
ரூபமாக செய்
ட்யூப் 1-க்கு 0-
எங்கும் கிடை

மஹா பில்வாதி தைலம்:—நேத்திர ஸம்பந்தமா
களையும் கண்டித்து, கண்களுக்கு நல்ல குளிர்ச்சியைக
அப்பியங்கன தைலம். 6 அவு. கொண்ட சீசா 1-க்கு

ஆனந்த படை நிவாரணி:—இதை மேலுக்கு உ
இல்லாமல் எவ்விதமான படைகளையும் திரும்பி வ
உடனே போக்கிவிடும். சீசா 1-க்கு அணு 12. வி

பிரமதாரோக பஞ்ஜனி:—மூத்திர நாளத்தின்
முதலிய வெட்டை ஸம்பந்தமான துஷ்டரோகங்களைக்க
சீசா 1-க்கு ரூ. 3. வி. பி. வேறு.

ஆனந்தாஞ்சனம்:—ஸகலவிதமான வலிகளுக்கும், க
கும், தேவாமிருதம் போன்றது. சீசா 1-க்கு அணு 8. வி.

நேரில் வருவோருக்கு கன்ஸல்டிங் சார்ஜ் கிடையாது.

சகல ஆயுர்வேத ஔஷதங்களும் கிடைக்கும். கேட்லாக் இனும்.

**வைத்தியரத்ன யு. ராமநாத சாஸ்திரி,**

வைத்திய ஸித்தாச்ரமம், 39, பஜார் ரோட், மயிலாப்பூர், மதராஸ்.


அறுத்துக்கொண்டிருக்குமே ? என் மனமே இத்தனை துன்பத்திற்காளானல், என்னை மனைவியெனக் கொள்ளப்போகும் நாயகர், எத்தனை பொறுமையுடையவராயும் எத்தனை ஞானமுடையவராயும் எத்தனை கருணையுடையவராயுமிருப்பினும், என்னல் என்னசுகத்தை யடைய முடியும்? என் சொந்த மனமே பூரிப்பின்றிப் புழுங்கிக் கொண்டிருந்தால், என்னைக் கொள்வோர் மனம் என்ன பூரிப்பை யடையும்? என் அத்தை, நீங்களும் என் அத்தானும், உங்கள் அபிப்பிராயப்படி, என் க்ஷேமத்தைக் கருதித் தேடியிருக்கும் இந்தஉபாயம், இறுதியில் எங்களிருவர் க்ஷேமத்திற்கும் இடையூருய் முடியினு முடியும். பாயஸத்திற் பழங்கனி சிந்தி வீழ்ந்து ஒன்றையொன்று கெடுத்தாற் போலிருக்கப்படாது.

கற்ப:—(வாட்டம் தீர்ந்து மலர்ந்த நகையுடன்) என் ராதா, இவ்வளவேனும் சொன்னயே? உன்அத்தானைப் பாயஸமென்றும் உன்னைப் பழங்கனியென்றும் இணையிட்டுக் கூறினய். ஒன்றுக்குமுதவாத வீண் பொருளென்று உன்னைத் தாழ்த்திவிடாமல், பழங்கனியென்ருவது சொன்னயே அதுவே எனக்குத் திருப்தி! பழங்கனிபழஞ் சோற்றிற் கிசைந்ததேயன்றிப் பாயஸத்திற் கிசையாதென்பதுதானே உன் சொந்தக் கருத்து. தாயே, உண்பவனுண்டால் உனக்கென்ன கவலை? பாயஸமும் பழங்கனியும் கலந்துண்டால் வெகு ருசியாயிருக்குமென்று உன் அத்தான் விரும்பியுண்டால், உனக்கென்ன நஷ்டம்? தின்ருல் தின்னட்டுமேன்? பதார்த்த ருசி தெரியாத பைத்தியக்கார அத்தானென்று நீ பரிகாசம் செய்தாலும், அவன் அப்படித்தான் உண்பேன் என்று பிடிவாதம் செய்கின்ருன். அம்மா, நீ தான் உன்னைப் பழங்கனியென்றும் ஊசற்கறியென்றும் தாழ்த்திக் கொள்கிருயேயன்றி, உன் அத்தான் அமரேசன் உன்னை ஒரு நாளும் ஊசாத கற்கண்டுக் கட்டியென்றும், பாயஸத்திற்கு இன்றியமையாத பசுந்தேன் எனவும் மதித்திருக்கின்ருனே? ஆதியில் உன்னை இன்னுளென்று தெரியாமல் யாரோ எவரோபோல் உனக்குப் படிப்பிக்கும் காலத்திலேயே உன் மேலன்புபூண்டு, பின் உன் பிரிவையாற்ருது துறவுபூண்ட உன் உத்தம மைத்துனன் முடிவில் உன்னைத் தன் சொந்தமாமன் மகளென்றறிந்தபின் இலகுவில் விடுவானு? அம்மா, நீ விதவைக்கோலம் பூண்டிருப்பதற்காக எங்களைப்போலவே அவனும் வருந்துகின்ருனென்பது உன் எண்ணம். ஆனல், உன் கோலத்தைக் கண்டு அவன் அளவின்றி மகிழ்கின்ருனே, என்ன விந்தை!

ராதா:—அத்தை, இதென்ன பேச்சு? என்னிடத்திலா இந்த ஸம்பிரதாயப் பேச்சு? காரிய முடிந்தாற் போதுமென்று கண்டமட்டும் அடித்து வீசுகிறீர்களே? எடுத்த கக்ஷியை எவ்விதமும் சாதிக்கும் திறனை என் அத்தானிடம் கற்றீர்களா? (துக்கத்துடன்) என் அத்தை, அந்தக் காலத்திலேயே அத்தான் என்மீது அன்பு பூண்டிருந்ததைக் கேட்க, எரிகிற தீயில் எண்ணெயை வார்த்தாற்போல் என் நெஞ்சம் பதைக்கின்றது. ஆனல், அவர்கள் என்மீது கொண்ட அன்பினும் நான் அவர்கள் மீது கொண்ட பேரன்பு ஆயிரமடங்கதிகமென்பதையும், என் பிரிவையாற்ருது அவர்கள் துறவு பூண்டது உண்மையாயின், நானும் அவர்கள் பிரிவையாற்ருதே இவ்வேடம் பூண்டேனென்பதையும், அவர்களிடம் தனித்துச் சொல்லுங்கள். ஆயினும், என் துறவு அவர்கள் பொருட்டென்று நான் கூறும் வார்த்தை—அவர்கட்குமட்டுமா?— உங்கட்குமொப்பாது. நிற்க, என் அத்தான் என் கோலத்தைக்கண்டு மகிழ்ந்ததாய் நீங்கள் சொல்வதை நினைக்க—என் வயிற்றெரிச்சலும் போய்—நகைப்பும் வருகின்றது! என்மீது இத்தனை அன்பும் இத்தனை பாசமுமுள்ள என் அருமை அத்தான் என்னை உலகமுறைப்படி மணக்காமல் இந்தக் கோலத்துடன் மணக்க வேண்டுமென்று இத்தனை காலமும் தவஞ் செய்தார்கள்? அதற்கா இப்பொழுது மகிழ்கின்ருர்கள்? அவர்கள் அன்பும் அதினுமதிகமான என் பேரன்பும் முற்றுப்பெற வேண்டுமென்று ஈசன்—அந்த ஜகதீசன்—என்னை இரக்கமின்றி இக்கதிக்காளாக்கிய அந்தப் பெண்ணடியற்ற கடவுள்— சற்றேனும் எண்ணியிருப்பாரானல், நான் இதுவரை— இந்தப் பதினெட்டு வயதுவரை—மற்றப் பெண்களைப்போல் மணமுடியாத மங்கலப் பெண்ணுயிருந்திருக்கப்படாதா? என்னை அத்தான் மணந்திருக்கப்படாதா? அவர்கள் என்னை மறந்தாலும் நான் அவர்களை மறப்பேனே? வலியவந்து வாழ்க்கைப்படும் கடமையும் உரிமையும் எனக்கில்லையா? அப்படி நடந்திருந்தால் எத்தனை பெருமை! நாமனைவரும் எத்தனை பூரிப்பும் இறுமாப்பும் அடைவோம்!

கற்ப:—நீ எண்ணுகிறபடிதான் நானும் எண்ணினேன். ஆனல் உன் அத்தான் எண்ணுகிற விதம் வேறு; அவன் உலகத்திலுள்ள மற்ற ஆண்பிள்ளைகளைப்போல் தன் பாடும் தன்

(35-ம் பக்கம் பார்க்க)

நமது சிறுகதை

# சாப விமோசனம்

(ஸ்ரீமான் தி. ந. சுப்ரமணியன்)

தஞ்சை ஜில்லாவில் கரும்பூர் உதயபானு கிருஷ்ணமூர்த்தி ஐயரை அறியாதவர்கள் கிடையாது. பெரிய பணக்காரர். நாற்பது வேலி குடித்நனம். ஐம்பதினாயிரம் ரொக்கம். அத்துடன் சாஸ்திர வித்து. தரும சிந்தனை வாய்ந்தவர். பிச்சையென்று அவர் வீட்டுக்கு வந்தவன் இல்லையென்று திரும்பியதில்லை. அவர் வீடு ஒரு அன்ன சத்திரமாகவே விளங்கியது. அவர் மனைவி சீதையம்மாளும் அவரைப் போலவேதான். அவர்கள் செய்யாத தான தருமங்கள் சாந்தி ஹோமங்கள் கிடையாது.

அவர்கள் குடும்பத்தில் நாலைந்து தலைமுறையாகப் பிள்ளைக் குழந்தையே பிறக்கவில்லை. பெண்குழந்தைகள் ஒன்றிரண்டு அபூர்வமாகப் பிறந்தாலும் அதிக நாள் உயிருடன் இருக்காமல் இறந்துவிடும். வேத சாஸ்திரங்களில் மகா பண்டிதர்களாக இருந்து தஞ்சை மன்னரிடம் உதயபானு என்னும் விருதையும், சர்வ மானியமாகக் கரும்பூரையும் பெற்ற அவர்கள் குடும்பத்தில் இவ்விதம் வமிச விருத்தி தடைப்படும் என்று ஒருவ்ரும் கருதவில்லை. இது ஒரு மர்மமாகவே இருந்தது. வமிச விருத்தியும் ஸ்வீகாரத்தாலேயே நடைபெற்று வந்தது. தனக்கு இனிப் பிள்ளை பிறக்காது என்பது நிச்சயமானவுடன் கிருஷ்ண மூர்த்தி ஐயரும் சாமா என்னும் பையனை ஸ்வீகாரம் செய்துகொண்டார்.

பையன் நல்ல கெட்டிக்காரன். அவன் படித்துப் பெரிய உத்தியோகத்திற்கு வருவான் என்ற நம்பிக்கையில் அவனை மேல் படிப்புக்குச் சென்னைக்கு அனுப்பி வைத்தார். ஆனால், அவன் பி. ஏ. பாஸ் செய்யும்வரையில் சென்னையில் வசிக்கவில்லை. பி. ஏ. வகுப்பில் வாசித்துக்கொண்டிருக்கையில் திடீரென்று ஒருநாள் அவன் ஊருக்குப் பெட்டி, பேழைகளுடன் திரும்பி வந்துவிட்டான். மற்றவர்கள் என்ன சொல்லியும் அவன் மேலே படிப்பதையும், உத்தியோகம் ஏற்பதையும் அறவே வெறுத்துத் தேச சேவையில் ஈடுபட்டுவிட்டான். தேசசேவையில் அவன் முக்கியமாகக் கருதியவை ஹரிஜன சேவையும் கதர்ப்பிரசாரமுமேயாவன. சுற்றுப் புறங்களில் பத்து மைலுக்கு அவன் புகுந்து உபதேசம் செய்யாத சேரியே கிடையாது.

அவன் நடத்தையில் இவ்விதம் திடீரென்று பிடிவாதமான மாறுதல் ஏற்பட்டதன் காரணத்தை எவராலும் அறியமுடியவில்லை. தனக்கு நெருங்கியவர்கள் யாராவது வற்புறுத்திக்கேட்டால், தேசக்ஷேமத்துடன், தன்குடும்ப க்ஷேமத்தையும் உத்தேசித்துத்தான் செய்வதாகக் கூறுவானேயன்றி வேறொன்றும் சொல்ல மாட்டான்.

உண்மையில் நடந்தது என்னவென்றால் ஒருநாள் அவன் சென்னையில் ஹரிஜனங்களின் கஷ்டங்களை நிவர்த்திப்பதற்காக நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றுக்குப் போய்விட்டு வீட்டுக்குத் திரும்பி வந்துகொண்டிருந்தான். அப்பொழுது அவன் மனம் ஹரிஜன்ங்கள் படும் துயரத்தையே சிந்தித்து அனலில் இட்ட மெழுகுபோல் உருகியிருந்தது. அப்படியே விட்டிருந்தால் எவ்வித உருக்கொண்டு வெளி வருமோ கூறமுடியாது. அப்பொழுது ஒரு கிழவர் அவனைப் பின் தொடர்ந்து வந்து தோளைத் தட்டிக் கூப்பிட்டார். சாமா அவரை யார் என்று கேட்பதற்குமுன்னதாகவே அவர், "அப்பா! நீயார் என்பதையும் உன் மனம் இப்பொழுது எவ்வித நிலையில் இருக்கிறது என்பதையும் நான் நன்கு அறிவேன். அதுவிஷயமாகத்தான் நான் இப்பொழுது உன்னுடன் பேசப்போவது. இந்தச் சமயத்தை எதிர்பார்த்தே பல நாட்களாகக் காத்திருக்கிறேன். உங்கள் குடும்பத்தை ஒரு சாபம் சூழ்ந்திருக்கிறது. நீ ஹரிஜன சேவையில் ஈடுபடுவாயானால், அந்தச் சாபம் நிவர்த்தியாவதுடன், நீயும் பிள்ளை குட்டிகளுடன் அமோகமாய் வாழ்வாய். அந்தச் சாபம் யாரால் எப்படி எப்பொழுது ஏற்பட்டது என்பதையும், நான் யார், எப்படி அதை அறிந்தேன் முதலிய விஷயங்களையும் உன்னிடம் கூறுவதற்கு இது ஏற்ற சமயமல்ல. இன்னும் ஏழு வருஷங்கள் கழித்து,உன் இருப்பிடம் தேடி வந்து தெரிவிக்கிறேன்" என்று கூறி, அவனை ஆசீர்வதித்துவிட்டு வந்த வழியே திரும்பிவிட்டார். சாமாவுக்குச் சிறிது நேரம் ஒன்றும் புரியவில்லை; அப்படியே ஸ்தம்பமாக நின்றான். மறுபடியும் அவரைக் கூப்பிடலாம் என்று அவர் சென்ற வழியே பார்க்கையில் அவரைக் காணவில்லை. அந்தக் கிழவரின் வார்த்தைதான் அவனை ஊருக்குத் திருப்பி அனுப்பியது.

இது நடந்து ஏழு வருஷங்கள் ஆய்விட்டன. கிழவர் கூறியபடியே உதயபானு குடும்பத்தாரின் குறையும் நீங்கிவிட்டது. சாமாவுக்கு மூன்று குழந்தைகள்—இரண்டு பிள்ளைகளும் ஒரு பெண்ணும்—பிறந்திருக்கின்றன. சொல்லிப் போனபடியே கிழவர் எப்படியும் திரும்பி வந்து சாபத்தைப் பற்றி விவரமாகக் கூறுவார் என்னும் நம்பிக்கை சாமாவுக்குப் பூரணமாக உண்டு.

மூத்த பையனுக்கு அக்ஷராப்பியாசமும், மூன்றாவது குழந்தைக்கு ஆண்டு நிறைவும், ஒரே முகூர்த்தத்தில் நடத்த ஏற்பாடாகி இருக்கிறது. பல தலைமுறைகளாக அக்குடும்பத்தில் இவ்விதமான சுபகாரியங்கள் நடக்கவில்லையாதலால், இவை மிகவும் விமரிசையாக நடத்தப்படுகின்றன. ஏராளமான கூட்டம். ஆசீர்வாதமும் முடிந்து பெண்டுகள் ஆரத்தி எடுக்கும் சமயம் சாமா எதிர்பார்த்திருந்த கிழவர் பந்தலுக்குள் நுழைந்தார். அவருக்கு ஆசார உபசாரங்கள் நடந்தனவென்பதை நாம் கூறவேண்டியதில்லை. கடைசியாக அவர் சாமாவுக்குக் கூறியது பின்வருமாறு:—

நான் சொல்லப்போவது நூற்றைம்பது வருஷங்களுக்கு முன்பு நடந்தது. ஹைதர் காலம் என்று சொல்லுகிறார்களே அந்தக் காலம். கலகக்காரர்கள் குதிரைமேல் வந்து ஊரையெல்லாம் சூறையாடிச் சென்றார்கள். அவர்கள் வருகிறார்கள் என்று கேள்விப்பட்டால், குழந்தைகள் முதல் பெரியவர்கள்வரையில் எல்லோரும் வீடு வாசல்களைத் துறந்து உயிருக்குப் பயந்து ஓடி ஒளிந்துகொள்வார்கள். வயது வந்த பெண்கள் வைக்கோல் போர்களில் புகுந்துகொண்டிருக்கிறார்கள். கலகக்காரர்களும் நிர்மானுஷ்யமான கிராமங்களை அப்படியே விட்டுச் செல்ல மாட்டார்கள். குதிரைகளைக் கொண்டு மோப்பம் பிடிக்கச் செய்து ஒளிந்துகொண்டிருப்பவர்களைக் கண்டுபிடித்து ஹிம்சை செய்வார்கள். போதாக் குறைக்குத் தெற்கத்திக் கள்ளர்களும் நாட்டுள் புகுந்து பகற்கொள்ளை அடித்தார்கள். நாடு அப்படி அலங்கோலப்படும்பொழுது யார்தான் பயிர்த் தொழிலைக் கவனிப்பார்கள்? எங்கு பார்த்தாலும் ஒரே பாழ். வயல்களெல்லாம் தரிசாகக் கிடந்தன. அரசாங்கத்தாருக்குக் கிஸ்திப் பணம் எவ்விதம் செலுத்துவார்கள்? அரசனும் குடிகள் படும் துயரத்தைக் கவனியாமல் இல்லை. மேல்



இத்தாலி பிராங்கோவின் ஸ்பானிய கவர்ன்மெண்டை ஏற்றுக்கொண்டுவிட்டதாகத் தெரிவித்துவிட்டது. ஸலமான்காவில் இத்தாலிய ஸ்தானிகர் அச்செய்தியை அறிவிக்க பிராங்கோவிடம் சென்ற காட்சி.

# "அவன் படுத்துகிறான் . . .

## மற்ற பிள்ளைகளைப்போல் ஏன் அவன் சந்தோஷமாக இருக்கக்கூடாது?"





**பலவீனப்பட்டிருக்கும் குழந்தைக்கு சிறந்ததென நிரூபணமாகியுள்ள இம்முறையையே டாக்டர்கள் சிபார்சு செய்கிறார்கள்.**

வெடு வெடுப்பு, "நரம்பு" பலவீனம், கோபம்—இவற்றிற்குக் காரணம் குழந்தையின் ஆகாரத்தில் முக்கியமான சத்துக்கள் சில இல்லாததே எனக் கூறுகின்றனர். இந்தக் குறையை நீக்கி, வலுவூட்டினால் சந்துஷ்டியும், சுறுசுறுப்பும் பிறக்கும்.

இங்கிலையில் ஸ்காட்ஸ் எமல்ஷனை விடச் சிறந்த பலன் தருவது வேறெதுவுமில்லை. காட்லிவர் ஆயில் சாதாரணமாக வலுவூட்டும்; அதில் போஷாக்குச் சத்தும், வேண்டிய அளவுக்கு விட்டமின்கள் A அண்டு Dயும் நிறைந்திருக்கின்றன. அத்துடன் ஸ்காட்ஸ் எமல்ஷனில் கால்வியம் உப்புகளும், பாஸ்பரஸுமிருக்கின்றன. இது தேகத்திற்கு வலுவும், எலும்புகளுக்கு உரமுமளிக்கிறது; பலவீனப்பட்டுள்ள நரம்புகளுக்கு உத்வேகமூட்டுகிறது. வாய்க்கு ருசியானது; எளிதில் ஜீரணமாகக் கூடியது. சாதாரண காட்லிவர் ஆயிலைவிட ஸ்காட்ஸ் எமல்ஷன் மும்மடங்கு பலன் தரத்தக்கது!

### பூரணமான வேலை

காட்லிவர் ஆயிலிலிருந்து பூரா அனுகூலத்தையும் அடையத்தக்க சிறந்த சத்துக்கள் ஸ்காட்ஸ் எமல்ஷனிலிருக்கின்றன. சாதாரண காட்லிவர் ஆயிலைச் சாப்பிட்டால், இதர வகைகளில் கால்ஷியம் முதலியவற்றை உட்கொள்ளவேண்டும். ஸ்காட்ஸில் எல்லாம் அடங்கியிருக்கிறது. பெரியவர்களுக்கும் சரி, குழந்தைகளுக்கும் சரி பலவீனத்தைப் போக்க இதுவே சிறந்தது. ஸ்காட்ஸ் எமல்ஷன இன்புளுவென்சா, ஜலதோஷம், இருமல் முதலியன வராமல் தடுக்கிறது அறுபது வருஷங்களுக்கு மேலாக டாக்டர்களால் சிபார்சு செய்யப்படுவது.

பெற்றோர்களுக்கு சில குறிப்புகள்:—
எலும்புக்கு வலுவூட்டும் ஸ்காட்ஸ் எமல்ஷன்
—வெண்ணெய் அல்லது சுத்தப் பாலைவிட 80 மடங்கு அதிகப் பலனளிப்பது.
—முட்டையை விட இருமடங்கு அதிகப் பலன் தருவது.
தேக வளர்ச்சிக்கு
—வெண்ணெயை விட 8 பங்கு அதிகப் பலன் தருவது.
—அன்னாசிப் பழத்தைவிட 100 பங்கு பலன்.



மொத்த டிஸ்டிரிபியூட்டர்கள் :—
இம்பீரியல் கெமிக்கல் இண்டஸ்டிரீஸ் (இந்தியா) லிமிடெட்.,
கல்கத்தா —பம்பாய்
மதராஸ் —லாகூர்
ரங்கூன் —கொழும்பு
கான்பூர் —பாடலீபுரம்
ஆமதாபாத் —கொச்சி
கள்ளிக்கோட்டை —விசாகப்பட்டணம்
கராச்சி —அமிருதசரஸ்

**SCOTT'S Emulsion**

**சுத்த காட்லிவர் ஆயில் சேர்ந்தது.**


வாரத்தைக் குறைத்துக் குடிவாரத்தை அதிகப்படுத்தினான். என்ன செய்துதான் என்ன? நாட்டின் பஞ்சம் அகல வழியில்லை. கலம் ஐந்து அணா விற்ற நெல் ஒரு ரூபாயாக உயர்ந்தது. பல குடும்பங்கள் நாட்டைத் துறந்து வெளியேறின.

அக்காலத்தில் தஞ்சையை ஆண்டுவந்த அரசனுக்குப் படைத்துணை போதாது. நாட்டை எதிரிகளிடமிருந்து காப்பதற்காகக் 'கும்பெனி'க்காரர்களுடன் ஒப்பந்தம் செய்துகொண்டிருந்தான். அதன்படி அவர்களுக்கு வருஷத்திற்கு நாலு லக்ஷம் வராகன் கொடுக்கவேண்டும். சண்டைக் காலத்தில் படையின் செலவுக்காக வருஷவாரி மற்றொரு நாலு லக்ஷம் வராகன். அத்துடன் ஆற்காட்டு நவாப்புக்குச் செலுத்த வேண்டிய பழைய பாக்கிக்காக மூன்று லக்ஷம் வராகன். இப்படியாகக் கொடுக்க வேண்டிய பணத்தைக் கொடுக்க வழியில்லை. கிஸ்திப் பணத்தைத் தம்பிடிகூடத் தள்ளிக் கொடுக்காமல் வசூல் செய்தாலொழிய அரசன் கொடுக்க வேண்டிய கடனைத் தீர்க்க மார்க்கம் இல்லை. அப்படி அரசன் வசூல் செய்யாவிட்டாலும், குடிகளுக்கு அதனால் சௌகரியமில்லை. ஒப்பந்தப்படிக் 'கும்பெனி'யார்கள் நாட்டுள் புகுந்து வசூல் செய்துகொள்ளலாம். அதனால் கிஸ்தியை வசூல் செய்ய அரசன் புதிய அதிகாரிகளை நியமித்தான். அவர்கள் பதக்கம் கட்டிப் பல்லக்கு ஏறி அமல் நடத்திவந்தார்கள். கிஸ்திப் பணம் கொடுக்காதவர்களைப் பிடித்து வெய்யிலில் நிறுத்தியும் கிட்டி கட்டியும், மிளகாய் வற்றலை நெருப்பில் போட்டுப் பொசுக்கி அந்தப் புகையை நுகரச் செய்தும் இன்னும் பல விதமாக ஹிம்ஸித்தும் வசூல் செய்து வந்தார்கள்.

உங்கள் குடும்பத்தில் ஆறு தலை முறைக்கு முன்னால் அப்பாசாமி ஐயர் என்று ஒருவர் இருந்தார். அவர் பதக்கம் கட்டி ஆண்டு வந்தார். நல்ல சாமர்த்தியசாலி. வாய் சாலக்கு உள்ளவர். அதற்குத் தகுந்த ஆள்படை மாகாணம் உடையவர். ஆனால், அவருக்குச் சொத்து அதிகம் கிடையாது.

அவருக்குச் சிறிய தகப்பனார் பிள்ளை நாணுவையர் என்று ஒருவர் இருந்தார். அப்பாசாமி ஐயரைவிட அவர் வயதில் மூத்தவர். பக்கத்து வீடுதான். ஆனால், அவருக்குப் பத்து வேலிக் குடித்தனம். நிலத்தில் விளைவதை வைத்துக்கொண்டுதான் ஜீவனம் நடத்தவேண்டும். பயிரிடுவோர் இன்றி நிலங்கள் எல்லாம் தரிசாகக் கிடைக்கையில், அவர் ஜீவனம் எப்படி நடக்கும்? இரண்டு வருஷங்களாக வாயிதா பாக்கி. சர்க்கார் அதிகாரிகள் அவரிடமிருந்து வசூல் செய்வதற்குப் பலபாடு பட்டுப் பார்த்தார்கள். அவரைக் காணுவதே கஷ்டமாக இருந்தது. பிடித்துவிட்டால் கிட்டி கட்டி வசூல் செய்து விடுவார்கள்.

அவர் நியம நிஷ்டையுடையவர். தினம் விடிய ஐந்து நாழிகைக்கு எழுந்திருந்து ஆற்றுக்குச் சென்று ஸ்நாநம் ஜபம் முதலியவற்றை முடித்துக் கொள்வார். பிறகு திருவிடைமருதூருக்கு உஷத்கால தரிசனத்துக்குச் சென்றுவிடுவார். அப்பொழுது ஆறுகளுக்குப் பாலம் கட்டப்பெறவில்லை. ஆறு வாயால் வழிந்தாலும் நீந்திக்கொண்டாவது செல்வார். பூஜை வேளை மட்டில் தவறமாட்டார். திரும்பி வீட்டுக்கு வந்தால் பூஜை, ராமாயண பாராயணம். மறுபடியும் மாலையில் அதேபோலத் திருவிடைமருதூருக்குப் போய் 'அர்த்த சாமம்' ஆனபிறகே வீட்டுக்குத் திரும்புவார். அவர் இரவில் வரும்போது ஊரோசையே அடங்கிவிடும். இவ்விதமாக அவர் அதிகாரிகள் கையில் சிக்குவது சிரமமாக இருந்தது.

எப்படியாவது அவரிடமிருந்து வசூல் செய்துவிடுவது என்று கங்கணம் கட்டிக்கொண்டு ஒருநாள் தலையாரி முதலியவர்கள் இரவு பூராவும் அவர்வீட்டில் 'பாரா'க்கிடந்து விடியற்காலையில் அவர் ஸ்நானத்துக்குப் புறப்படுகையில் வழியை மறித்துக்கொண்டார்கள். "பணத்தைக் கொடுத்து விட்டு அப்பால் போங்கள்' என்று கண்டிப்பாகக் கூறினார்கள். அவர் "ஸ்நானத்துக்கு நாழிகையாகிறது. ஸ்வாமி தரிசனம் செய்து திரும்பி வந்ததும், முதல் வேலையாக வாயிதாப் பணத்தைக் கொடுத்துவிட்டு மற்ற காரியங்களைப் பிறகு பார்த்துக் கொள்ளுகிறேன். இப்பொழுதுமட்டும் தடுக்காதீர்கள்" என்று எவ்வளவோ சொல்லியும் அவர்கள் கேட்கவில்லை.

நாணுவையரிடம் சல்லிக்காசும் கிடையாது. கடன் வாங்கு

(33-ம் பக்கம் பார்க்க)

சிறுவர் பகுதி

# அகம்பாவம் பொல்லாது

(ஸ்ரீமான் எஸ். செல்லப்பா)

ஒரு நாள் பத்து பெயர்கள் அயலூரில் வியாபாரம் செய்துவிட்டுத் தங்கள் ஊருக்குத் திரும்பி வரும்போது வழியில் மூன்று கள்வர்கள் வந்து அவர்களை மறித்துக் கொண்டார்கள். திருடர்கள் கையில் ஆயுதமிருந்தமையால் இந்தப் பத்து பெயர்களும் அவர்களை எதிர்க்கமுடியாமல் போய்விட்டது. திருடர்கள் வியாபாரிகளைப் பார்த்து அவர்கள் கையிலிருந்த எல்லாவற்றையும் பிடுங்கிக் கொண்டு, அரைத் துணியைக்கூட விடாமல் அவிழ்த்தெடுத்து இந்தப் பத்து வியாபாரிகளையும் எதிரில் கோவணத்துடன் நிறுத்தி, “அடா, நீங்கள் எல்லோரும் நடனஞ் செய்யுங்கள், பார்ப்போம்’’ என்றார்கள். வியாபாரிகள் பார்த்து, “இந்தத் திருடர்கள் நம்முடைய சொத்தை எல்லாம் அரைத் துணிவிடாமல் பிடுங்கிக்கொண்டு நம்மை இப்பொழுது ஆடச் சொல்லுகிறார்கள். இதுவும் நமக்கு வந்த பொல்லாத காலம்’’ என்று வருத்தப்பட்டவர்களாய், ஆட ஆரம்



பித்தார்கள். இவர்களில் ஒருவன் வெகு புத்திசாலி. அவன் தான் நடனம் பண்ணுவதற்குச் சாதகமாக ஒரு பாட்டை எடுத்துக்கொண்டு பாடினான். அதாவது:—

‘‘நாமனம் புலிப்பேர்
தாளனும் திருப்பேர்
சாவன்னா தாளனை
திருவாணதாளன் சுற்றினால்
சாவன்னாத் தாளன் மீதி
தா, தை, தோ, ததிங்கண’’

இந்த மாதிரியாகப் பாடிக் கொண்டு எல்லாரும் சுற்றிச் சுற்றி நடனஞ் செய்தார்கள். இந்தப் பாட்டின் அர்த்தம் வியாபாரிகளுக்கு மட்டும் தெரியுமேயல்லாது மற்றவர்களுக்குத் தெரியமாட்டாது. வியாபாரிகளுக்குள் எண்ணிக்கைகளுக்கு சங்கேதம் உண்டு. முக்கியமாய் நம்முடைய பாட்டுக்கு வேண்டியது சங்கேதங்கள்: சா என்றால் ஒன்று திரு என்றால் மூன்று, புலி என்றால் பத்து. இந்தப் புத்திசாலி பாடின பாட்டின் அர்த்தம் “நாமனும் புலிப்பேர்’’—நாமோ பத்து பெயர்கள். “தாளனும் திருப்பேர்—திருடனும் மூன்று பெயர்கள். முண்டனுக்கு இரண்டாட்கள்’’ என்பது பழமொழி. அதற்குப் பதிலாக “சாவன்னாதாளனை திருவாணத்தாளன் சுற்றினால்’’—அதாவது ஒரு திருடனுக்கு மூன்று பெயர்களாய்ப் புகுந்து பிடித்துக்கொண்டால், “சாவன்னாதாளன் மீதி’’—நம்மில் மூன்று திருடர்களுக்கு மும்மூன்று ஒன்பது போகப் பாக்கி ஒருவனிருக்கிறான். அவன் இவர்கள் கால் கைகளைத் துணியால் கட்டிவிட்டால் நாம் நம்முடைய சொத்தை எடுத்துக் கொண்டுஓடிவிடலாம்என்பது கருத்து.

இவர்கள் இப்பாட்டைப்பாடி நடனஞ் செய்துகொண்டே வந்து, “தா, தை, தோ, ததிங்கண’’ என்னும்போது ஒரு திருடன் பேரில்



மூன்று வியாபாரிகளாய்ப் பாய்ந்து பிடித்துக்கொண்டார்கள். அதற்குள் மிகுந்தவன் துணிகளைக் கிழித்து இவர்கள் கைகால்களைக் கட்டி உருட்டினான். இவர்கள் அசையாமற் கட்டுண்ட பிறகு பத்து வர்த்தகர்களும் தங்கள் தங்கள் சொத்தை எடுத்துக்கொண்டு வீடு வந்து சேர்ந்தார்கள். திருடர்கள் முதலில் தங்கள் காரியமாகியும் அகம்பாவத்தால் கெட்டார்கள்.

* * * *

**1000 ரூபாய் கஜானா பைகள்.**

சர்க்கார் கஜானாக்களிலிருந்து நாம் பெறும் தொகைகளை வெள்ளி நாணயங்களாகப் பெற்றுக்கொள்ளும்போது, அவைகள் சர்க்கார் முத்திரை தரிக்கப்பட்ட பைகளில் கொடுக்கப்பட்டால் அவைகளை எண்ணவோ அல்லது பரிசோதித்துப் பார்க்கவோ அவசியமிராது. ஏனென்றால், எண்ணிக்கை குறையாமலும், நாணயங்கள் பழுதற்றவைகளாயுமிருப்பது நிச்சயம். அவ்வாறே **ஸ்டேன்ஸ் “T. S. & Co., Ltd.”** முத்திரை போடப்பட்ட துணிப்பைகளில் காப்பிக்கொட்டை வாங்குவீர்களேயானால் முதல்தரமான அசல் நீலகிரிச் சரக்கையே பெறுவீர்கள். இதர சாமான்யமான காப்பிக் கொட்டையால் இந்தப்பைகள் நிறப்பப்படுவதில்லை. சாய மேற்றின காப்பியில் நாங்கள் வியாபாரம் செய்வதுமில்லை. 3, 5, 7 பவுன் பைகளில் கிடைக்கும்.

பைகளின் பேரிலுள்ள

S & Co.

என்கிற வியாபாரக் குறியையும் கவனித்து வாங்கவும். போலிச் சரக்குகளை ஒப்புக்கொள்ளாதீர்கள்.

**டி. ஸ்டேன்ஸ் & கோ.,**

**கோயமுத்தூர்.**

**குழந்தைகளின்**

**மிருதுவான சருமத்திற்கு**

சந்தன வாசனையுடன் நாம கலக்கும் அவசியமான ஆயிலையும் ... ரவமும் ஆரோக்கிய மூட்டும் சத்துக்களிருக்கின்றன. மைசூர் சந்தன ஸோப்பு முக்கியமாக குழந்தைகளின் மிருதுவான சருமத்திற்கு ஏற்றது. இந்தியத் தாய்மார்களில் பல்லாயிரக் கணக்கானவர்கள் இதை அனுபவ பூர்வமாக அறிந்திருக்கின்றனர்.

**மைசூர் சந்தன ஸோப்பு**




**கவர்ன்மெண்ட் ஸோப்பு தொழிற்சாலை, பெங்களூர்**




## த்யாகராஜ கீர்த்தனம்.

[காபிரைட்.]

ஸங்கீதவித்வான் காஞ்சி பி. பி. ஸ்ரீனிவாஸய்யங்கார், பி. ஏ. எழுதியது.

I

பல்லவி

எவருன்னுரு ப்ரோவ—இந்த தாமஸ மேலனய்ய (எவ)

அநுபல்லவி

விவரம்புக தெலுபவய்ய—விச்வேச ஸ்ரீ பஞ்சநதீச (எவ)

சரணம்

மனஸார த்யானிம்ப—மனஸு நிலுவலு மர்மம்பு தெலுபு
தனவாடனி தலசிதைர்ய—மொஸகு த்யாகராஜனுத (எவ)

II

| | |
|---|---|
| விச்வேச | —ஜகதீச்வரரே! |
| ஸ்ரீ பஞ்சநதீச | —ஸ்ரீ பஞ்சநதம் என்ற திருவையாற்றில் கோயில் கொண்டிருக்கும் சிவபெருமானே! |
| த்யாகராஜநுத | —தியாகராஜனால் கொண்டாடப்பட்டவரே! |
| ப்ரோவ | —என்னை ரக்ஷிப்பதற்கு |
| எவரு உன்னுரு | —(வேறு) யாரிருக்கிறார்கள்? |
| இந்த தாமஸமு | —இவ்வளவு தாமதம் |
| ஏலனய்ய | —எதற்காக ஐயா? |
| விவரம்புக தெலுபவய்ய | —விவரமாக இதை விளங்கச் செய்யும் என் ஐயனே! |
| மனஸார த்யானிம்ப | —மனதார உம்மைத் தியானிப்பதற்கு |
| மனஸு நிலுவலு மர்மம்பு | —மனம் ஒரு வழிப்பட்டு நிற்பதற்குரிய ரஹஸ்யத்தை |
| தெலுபு | —எனக்கு விளங்க வையும்! |
| தனவாடு அனி தலசி | —உம்மைச் சேர்ந்தவனென்று மனத்திற்கொண்டு |
| தைர்யமு ஒஸகு | —(ஏகாக்ர சித்தத்தோடு உம்மைப் பஜிக்கும்) உறுதியைக் கொடுத்தருளும். |

III

ஸ்ரீ பஞ்சநதம் (திருவையாறு) என்ற க்ஷேத்திரத்தில் கோவில் கொண்டருளியிருக்கும் சிவபெருமானைப்பற்றி ஸ்வாமிகள் செய்த சில கீர்த்தனங்களில் இஃதொன்று. மற்றவை, 'முச்சடப்ரம்ஹாதுலகு, 'இலலோ ப்ரணதார்த்திஹருடு' 'ஏஹி த்ரிஜகதீச' முதலியவைகளாம்.

எவருன்னுரு:—'எவருன்னுரு நனுப்ரோசேவாரு' என்ற ஸதாசிவராயர் கீர்த்தனை ஞாபகத்துக்கு வரும். 'நன்னுகன்ன தல்லி' என்ற கீர்த்தனையில் 'நீவுப்ரோவகுண்டே எவருப்ரோதுருலே' என்று ஸ்வாமிகள் தர்மஸவர்த்தினி யம்மனை வினவுகிறார்.

தாமஸமேலனய்ய:—தனவாரிதனமு என்ற கீர்த்தனையின் சரணத்தில் 'தாமஸம்பு லேல?' என்று ஸ்வாமிகள் வினவுகிறார்.

விவரம்புக தெலுபவய்ய:—'என்னை ரக்ஷிப்பதற்கு வேறு யாருமில்லை; எனினும் நீர் என்னை ரக்ஷிப்பதில் தாமதப்படுத்துவதேன்? இதை எனக்குத் தெரியச் சொல்ல வேண்டும், ஸ்வாமி! — என்மீது ஏதாவது குற்றம் குறைகளிருக்கலாம். நான் ஏதாவது அபசாரம் செய்திருக்கலாம். எதையும் எனக்கு விளங்கத் தெரிவிக்க வேண்டுமென்று பிரார்த்திப்பதாக பாவம்.

மனஸு நிலுவலு மர்மம்பு:—மனமென்பது ஒருநிலையில் நில்லாதது. அதனாலேயே அதைப் பேரியோர்கள் குரங்குக்கு ஒப்பிட்டனர். அதை ஒரு நிலையில் நிறுத்துவதென்பது மஹான்களுக்கே ஸாத்யம். அந்த ரஹஸ்யத்தைத் தமக்குத் தெரிவிக்கும்படி ஸ்வாமிகள் பிரார்த்திக்கிறார். மனத்தைப் பலவழிகளிலும் இழுக்கக் கூடிய பலவிதத் தொல்லைகள் ஸ்வாமிக்கு ஏற்பட்டன வென்பது ஸ்வாமிகளுடைய சரித்திரத்தில் உள்ள பல சம்பவங்களால் விளங்கும். 'அந்யாஸ் சிந்தயந்தோமாம்' என்றபடி வேறு சிந்தையில்லாமல் பகவானைத் தியானிக்க வேண்டுமல்லவா? 'மனஸு விஷய நடவிடுல கொஸங்கிதே' என்ற கீர்த்தனையில் ஸ்வாமிகள், 'மனமென்கிற பெண்ணை விஷயாதிகள் (லௌகிக ஸுகங்கள்) என்ற விட புருஷர்களிடத்திலும் நட்டுவாங்கம் செய்பவர்களிடத்திலும் ஒப்படைத்தால் ஸ்ரீராமனுடைய க்ருபை உண்டாகுமா?' என்று கூறி யிருக்கிறார். அன்றியும், 'மனஸு

(12-ம் பக்கம் பார்க்க)

Broadcast

# பிராட்காஸ்ட்

ரிகார்டின்

## ஏப்ரல் வெளியீடு!



தஞ்சாவூர்
ராமதாஸ் ராவ்



முடிகோண்டான்
வெங்கடராம அய்யர்



மதராஸ்
விஸ்வனுத சர்மா

**B. G. 2428** { ஸ்ரீரகுவராப்ரமேய ம.மவ — காம்போஜி

நஞ்சன்கூடு
நாகரத்னம்



இம்மாது முதல் முதலில்
ரிகார்டு செய்யப்பட்டுள்ளாள்

B. 2429

ஸசாமர ரமாவாணி—ஹம்ஸாநந்தி
தேவி ஸ்ரீ—ஹமீர்கல்யாணி

## புதிய
டிராமா ஸெட்
புண்ய புராண சரித்திரம்

## பூ கைலாஸ்

அல்லது

## ராவண கர்வ பங்கம்

ஆறு ரிகார்டில்

## தி மியூஸிகல் பிராடக்ட்ஸ் லிமிடெட்

313, எஸ்பிளனேட் — மதராஸ்.

10, கன்ஸிஸ்டரி கட்டிடம், பிரன்ட் தெரு, கொலம்பு.

12, வாடர்லு தெரு, கல்கத்தா.

16, ராமபார்ட் ரோ போர்ட், பம்பாய்.

F. M. S. & S. S.க்கு ஸோல் டிஸ்ட்டிரிப்யூட்டர்கள்:—

தி இண்டியன் பிலிம் ஏஜன்ஸி, பிநாங்—சிங்கப்பூர்.

நில்ப' என்ற கீர்த்தனையில், 'மனத்தை ஒரு வழியில் நிலை நிறுத்த வகையில்லாமல் மதுரை மணியடித்துக்கொண்டுபகவானுக்குப் பிரமாதமான புஷ்பார்ச்சனைசெய்வதனால் என்ன பலன் உண்டாகும்' என்று வினவிப் பல உதாஹரணங்களைப் பிரயோகிக்கிறார்.

தனவாடனி தலசி:—'ஸநாதன' என்ற கீர்த்தனத்தில் 'தனவாடனே யபிமானமு...எல கல்கதோ' (உம்மைச் சேர்ந்தவனாயிற்றே என்ற அபிமானம் ஏன் உண்டாகவில்லையோ?) என்றும், 'தனவாரி' என்ற கீர்த்தனத்தில் 'தனவாரி தனமுலேதா' (தன்னைச் சேர்ந்தவனென்ற அபிமானமில்லையா?) என்றும் ஸ்வாமிகள் வினவுவதைக் கவனிக்கவும்.

தைர்யமு ஒஸகு:—ஸ்வாமிகளை, நரஸ்துதி செய்யுமாறும் பிறவாறும் பலர் தூண்டினர். ஆனால் அத்தூண்டுதல்களையெல்லாம் எதிர்த்து நிற்கும்படியான தைர்யத்தை ஸ்வாமிகள் பகவத்கிருபையால் பெற்றார். இங்கு—'தைர்யம்' என்ற சொல்லுக்கு மன உறுதி என்று அர்த்தங் கொள்ளவேண்டும். 'த்யாகராஜஸ்வாமிகுருனி' என்று ஸ்வாமிகளைப்பற்றி ஸ்தோத்ரரூபமாகச் செய்யப்பட்டிருக்கும் கீர்த்தனத்தில், ஸ்வாமிகள் பெரும் தீரர் என்று வர்ணிக்கப்படுகிறார்.

இந்தக் கீர்த்தனத்தின் பாவத்தோடு 'நன்னு கன்னதல்லி' என்ற கீர்த்தனத்தின் பாவத்தை ஒப்பிட்டுப்பார்க்கலாம்.

IV

மாளவஸ்ரீ — ஆதிதாளம்

72 மேளகர்த்தா முறையின்படி இந்த ராகம் 22 வதான கரஹரப்ரியையில் ஜன்யம். வேங்கடமகி ப்ரபலப்படுத்தின மேளகர்த்தா முறையில் ஸ்ரீராகமே 22 வது கர்த்தாவாகக் கூறப்படுகிறதென்பது இங்குக் கவனிக்கப்படவேண்டும்; சதுர்தண்டிப்பிரகாசிகையில் இதற்கு லக்ஷணம் 'ரிவர்ஜிதாமாளவஸ்ரீ ஆரோஹேது தவர்ஜித:' என்று கூறப்பட்டிருக்கிறது. அதன்படி இதன் நடை ஸகமபநிஸ்-ஸ்நிதபமகஸ. ஆனால் காலஞ்சென்ற சங்கீதவித்வான் கே. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்காருடைய "கான பாஸ்கர" மென்ற நூலில் இதற்கு ஸமகம பநிதநிபத நிஸ்—ஸ்நிதமகஸ என்று க்ரமங் குறிப்பிட்டிருக்கிறார்.

பல்லவி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ; ; ; ⁎ | கா மா பா ; நீ | தா ; ; | தா | பா மா ; | கா |
| ; ; ; ⁎ | எ வ ரு ;... | ன்னு ; ; | ரு | ... ப்ரோ | ... |
| மா ; ; ⁎ | கா மா பா ; நீ | தாபா நீ | நித | தப பமமா | கா |
| வ ; ; ⁎ | எ வ ரு ;... | ன்னு... | ரு | ... ப்ரோ | ... |
| மா ; ; ⁎ | கா மா பா ; நீ | தாபநி ஸ்ா | ஸ்நி | நித தபபம | மக |
| வ ; ; ⁎ | எ வ ரு ;... | ன்னு... | ரு | ... ப்ரோ | ... |
| மா ; ; ⁎ | கா மா பா ; நீ | தா பநிஸ்ா | ஸ்க் | ம்க் ஸ்நிதநி | பஸ் |
| வ ; ; ⁎ | எ வ ரு ;... | ன்னு... | ரு | ... ப்ரோ | ... |
| நிதபமகஸ ⁎ | மாகா ஸா ; ஸா | ஸநி பநிஸ | ஸம | கம | பந்தநி-பஸ் |
| வ......... ⁎ | இந்த தா ; ம | ஸ...... | மே | ... ல... | ன |

நிதபமகஸ ⁎ / ......ய்ய ⁎ } (எவருன்னுரு)

அனுபல்லவி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ; ; ; ⁎ | ஸ்ா ஸ்ா க்ா ; க்ா | ம்ா ; ; | ம்ா | க்ா ஸ்ா ; | ஸ்ா |
| ; ; ; ⁎ | வி வ ரம் ; பு | கா ; ; | தெ | ... ல்ப ; | வை |
| நீ ; ; ⁎ | ஸ்ா ஸ்ா க்ா ; க்ா | ம்ாஸ்க்ம்ா | ம்ா | க்ாஸ்ா ; | ஸ்ா |
| ய ; ; ⁎ | வி வ ரம் ; பு | கா...... | தெ | ல்ப ; | வை |
| நீ ; ; ⁎ | ஸ்ாம்ா ம்ாக்ா ஸ்ா | ஸ்நிதநிபா | ஸ்நி | ஸ்ா ; ஸநிதநி | பஸ் |
| ய ; ; ⁎ | வி ச்வே ச | ஸ்ரீ...... | ப | ச ந | தீ |

நிதபமகஸ ⁎ / ....ச..... ⁎ } (எவருன்னுரு)

சரணம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ; ; ; ⁎ | பா பா பா ; நீ | தா ; ; | பா | ஸ்நிதநிபா | மா |
| ; ; ; ⁎ | ம னஸா ;... | ர ; ; | த்யா | .........னி | ம் |
| கா, மா ⁎ | தா பா மா ; கா | ஸகமகஸா | கா | மா பா ; | நீ |
| ப, ... ⁎ | ம ; ன ; ஸ ; நி | லு வ லு | ம | ர்ம ; | ம்பு |
| தா, பா, ⁎ | | | | | |
| தெல், பு, ⁎ | | | | | |

'தனவாடனி........,த்யாகராஜனுத'—அனுபல்லவிபோல் பாடவேண்டும்.


உலகப் பிரசித்தி பெற்ற
ஆர். முகம் அண்டு கம்பெனியாரின்
நெ. 1. மணிமார்க் பட்டணம்
மூக்குத் தூளை
உபயோகியுங்கள்.
1. நெ. வீசை 1-க்கு விலை ரூ. 4 0
2. நெ. வீசை 1-க்கு விலை ரூ. 3 8
TRADE MARK
ஏஜண்டுகள் தேவை:—
விலாசம் : ஆர். முகம் அண்டு கம்பெனி,
நெ. 5, ஓல்டு ஜெயில் தெரு, மதராஸ்.

குமார சஞ்சீவினி
ரிஜிஸ்டர்ட்
குழந்தைகளின்
ஈரல்-குலை-ஜுரக்கட்டி
வியாதிகளுக்கு
நிகரற்ற குணமுடையது
ஸ்ரீ வைத்தியர். அண்ணாமலை முதலியார்
வைத்தியர் அண்ணாமலை தெரு, மயிலாப்பூர், சென்னை



ஸோல்ஜர் உருவம் இல்லாத டின் பிளிட் அல்ல.

தென்னிந்தியாவிற்கு சோல் டிஸ்டிரிபியூட்டர்கள்:—
டி. டி. கிருஷ்ணமாச்சாரி, 11-14, அரமனைக்காரத்தெரு, மதராஸ்.



லாகூர் மதராஸிகள் சங்கத்தின் கூட்டமொன்று சமீபத்தில் நடைபெற்றது. அப்பொழுது ஸ்ரீமதி அன்னபூரணி சிதார் வாத்தியத்திலும் ஸ்ரீமான் ஆர். என். சுப்ரமணியம் பிடிலிலும் கச்சேரி நடத்திய போது எடுத்த படம்.

மஹாபாரதம் - அநுசாஸன பர்வம்

# திலதானமும் கோதானமும்

——:[○]:——

பிறகு பீஷ்மர் திலதானத்தைப்பற்றிச் சொன்னார். எள்ளு பிரம்மதேவரால் பித்ருக்களுக்கு முதல் ஆகாரமாகப் படைக்கப்பட்டது. ஆகையால் எள்ளைத் தானம் செய்வதால் பித்ருதேவர்களின் வர்க்கம் ஸந்தோஷமடைகிறது. எள்ளு கச்யப மகரிஷியின் தேகத்திலிருந்து உண்டாயிற்று. அதனால் எள்ளு தேவத்தன்மை அடைந்திருக்கிறது. முற்காலத்தில் நெய் இல்லாமற் போனபோது குசிகனென்னும் ராஜரிஷி எள்ளை ஹோமம் செய்து உத்தம கதியை அடைந்தாரென்று சொல்லப்படுகிறது. எள்ளு பசுவின் நெய்க்குச் சமானமானது. திலதானத்தைப்பற்றி யமனுக்கும் ஒரு பிராம்மணனுக்கும் நடந்த ஒரு சம்பாஷணை இருக்கிறது. அதையும் சொல்லுகிறேன்.

மத்திய தேசமென்னுந் தேசத்தில் பர்ணசாலையென்று பெயர் பெற்ற பிராம்மண கிராமம் ஒன்றிருந்தது. அந்தக் கிராமத்தில் வித்வான்களான பிராம்மணர்கள் வசித்துவந்தனர். ஒரு நாள் யமன் தனது கிங்கரனை ஏவி அந்தக் கிராமத்திற்குச் சென்று சர்மி என்ற பிராம்மணனை அழைத்துவரும்படியும், அவனுக்குப் பக்கத்திலிருக்கும் மற்றொருபிராமணனை அழைத்து வரவேண்டாமென்றும் சொன்னான். ஆனால், கிங்கரன், யமன் யாரை வேண்டாமென்று சொன்னானோ அவனை அழைத்து வந்தான். உடனே யமன் இவன் வேண்டாமென்றும் மற்றொருவனை அழைத்துவரும்படியும் சொன்னான். அப்பொழுது பிராம்மணன் தான் அங்கேயே வசிக்க விரும்புவதாகச் சொன்னான். அதற்கு யமன் எவன் தர்மத்தைச் செய்கிறானோ அவனை மட்டும் தான் அறிவதாயும் சொல்லவே, பிராம்மணன் தர்மத்திற்கான சிறந்த தானம் எதுவென்று கேட்டான். யமன் திலதானமே சிறந்ததென்று சொல்லி, ஒருவன் தன்னால் கூடியமட்டும்திலதானம் செய்யவேண்டுமென்றும், சிராத்தத்திற்கு எள்ளு மிகவும் சிலாக்கியமானதாகச் சொல்லப்படுவதாயும், பிராம்மணர்களுக்குச் சாஸ்திர முறைப்படித் திலதானம் செய்யவேண்டுமென்றும், வைகாசி மாதம் பௌர்ணமாவாஸையில் பிராம்மணர்களுக்குத் திலதானம் செய்யவேண்டுமென்றும், கிருகத்தில் எல்லாவித நன்மையையும் வேண்டுகிறவர்கள் எப்போதும் எள்ளை உண்டாக்க வேண்டுமென்றும், உடம்பில் எண்ணெயைத்தடவிக்கொள்ள வேண்டுமென்றும் சொன்னான். பிறகு பிராம்மணன் யமகிங்கரனால் அவன் வீட்டிற்கு அழைத்துச் செல்லப்பட்டான். அதன் பின்பு சர்மியையும் கிங்கரன் அழைத்துச் செல்ல யமன் அவனுக்கும் முன் கூறியபடியே உபதேசித்து அனுப்பினான். யமன் உபதேசித்தபடியே அவர்களும் செய்துவந்தனர்.

பிறகு பீஷ்மர் யுதிஷ்டிருக்கு கோதானத்தின் மஹிமையைப்பற்றி யமனுக்கும் நாசிகேதருக்கும் நடந்தததொரு சம்பாஷணையைச் சொன்னார்:—முன்னொரு காலத்தில் ஔத்தாலகி என்னும் ரிஷியொருவர் தமது புத்திரனை நாசிகேதருடன் இருந்து வந்தார். ஒருசமயம் அவர் தனது குமாரனை நோக்கித் தான் ஆற்றங்கரையில் ஸமித்து, தர்ப்பம், புஷ்பம், பாத்


## பிரபல ஜோதிஷர்



மஹாராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்க ரூபா 2. 1 வருஷ மாதவாரிப் பலன் எழுத ரூபா 5. எதிர்காலத்தைப் பற்றின 3 கேள்விகளுக்கு ரூ 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்: 58, லஸ் சர்ச ரோடு, மைலாப்பூர், மதராஸ்.



## சேலத்தில் முதல் முதல் ஸ்தாபிக்கப்பட்ட நர்சரி தோட்டம்

3 வருஷத்தில் காய்க்கக்கூடிய ஒட்டுமாஞ்செடிகள், ஒட்டுப்பழ வர்க்கச்செடிகளும் இன்னும் இதர செடிகளும் கிடைக்கும். இங்கிலீஷ் அல்லது நாட்டுக் காய்கறி, இங்கிலீஷ் புஷ்ப விதைகள், 20 சாம்பெல் பாக்கெட் விலை ரூ. 2-10. சாம்பல் பாக்கெட்விலை ரூ. 1-4 கேட்லாக் இனாம்.

ச. கோ. இ. காதர்மீரா சாயபு, ஹெட் நர்சரி தோட்டம், சேலம்.



## ஆராய்ச்சி பூர்வமான
## நவீன மருந்துகள்

மேத்தாஸ் காப் மிக்சர் : எல்லாவகையான இருமல் நோய்களுக்கும், க்ஷயரோகத்திற்கும் கைகண்ட ஔஷதம்.

விலை புட்டி 1-க்கு ரூ. 2.

கே. எஸ். மேத்தா & கம்பெனி,

பிரபல மருந்து வியாபாரிகள்.

234, சைனா பஜார் — மதராஸ்.



## பற்களையும் ஈறுகளையும்
## அலட்சியம் செய்யாதீர்கள்.

ஆரோக்கியத்தை உத்தேசித்து உங்கள் பற்களையும், ஈறுகளையும் நன்கு பாதுகாருங்கள். இன்றைய அலட்சியம் நாளை பல்லழிவாக மாறி பிறகு பயரியாவில் முடியலாம். மேற்படி பாதுகாப்புக்குச் சிறந்த வழி "நீம் டூத் பேஸ்ட்" உபயோகிப்பதுதான். இதில் நீமின் சத்தும் இதர மருந்துச் சரக்குகளுமிருக்கின்றன; இவை பற்களைச் சுத்தம் செய்வதுடன், பல் வலிக்கும், பயரியாவிற்கும் காரணமான கிருமிகளையும் அழிக்கிறது. 'நீம் டூத் பேஸ்ட்'டில் தீங்கான சத்துக்கள் எவையுமில்லை, இன்றே "நீம் டூத் பேஸ்ட்" உபயோகிக்கத் தொடங்குக. வாழ்வு பூராவும் உங்கள் பற்கள் அழகுடன் விளங்கும்.



No 4.

'Neem' TOOTH-PASTE

கல்கத்தா கெமிகல்

திரம் முதலிய எல்லாவற்றையும் மறந்து வைத்துவிட்டு வந்துவிட்டதாயும், அவற்றை எடுத்துக்கொண்டு வரும்படியும் ஆக்ஞாபித்தார். நாசிகேதரும் ஆற்றங்கரை சென்று பார்க்க, அவற்றை ஆற்றுவெள்ளம் அடித்துக்கொண்டு போய்விட்டபடியால், காணாது அவற்றைக் காணவில்லை என்று தமது தந்தைக்குப் பதில் சொன்னார். உடனே ஔத்தாலகி கோபங்கொண்டு, "யமனைப் பார்" என்று சாபமிட்டார். நாசிகேதர் தக்ஷணமே உயிர்விட்டார்.

நாசிகேதர் இவ்விதம் போனதைக் கண்டு தந்தை தான் அவசரமாகச் செய்துவிட்டதை நினைத்துத் துக்கித்துக் கொண்டிருந்தார். அவ்விதமே ஒருநாள் கடந்தது. மறுநாட் காலையில் நாசிகேதர் திடீரென உயிர் பெற்றெழுந்து தந்தையை நமஸ்கரித்தார். உடனே அவர் பல ரிஷிகளின் மத்தியில் தான் கண்டதைப் பின்வருமாறு தெரிவித்தார்:—

'யமனைப் பார்' என்ற உமது கட்டளையைச் செய்வதற்காக உடனே சென்றேன். பிறகு யம சபையைக் கண்டேன். நான் வருவதைக் கண்டவுடன் யமன் என்னை எதிர்கொண்டழைத்து உபசரித்தான். நான் யமனிடம் எனக்கேற்ற லோகத்தை விதிக்கும்படிச் சொன்னேன். அதற்கு யமன் நான் இறக்கவில்லையென்றும், தந்தை, 'யமனைப் பார்' என்றுதான் சொன்னதாகவும், அதையே தான் சத்தியமாக்கியதாகவும், ஆகையால் திரும்பிச் செல்லவேண்டுமென்றும், வேண்டியதைக் கேட்கும்படியும் சொன்னான். நான், 'வேண்டினவையெல்லாம் நிரம்பிய புண்ணிய லோகங்களைக் காண வேண்டும்' என்று சொன்னேன். யமனும் அதன்படியே எல்லாவற்றையும் காட்டினான். பால் பெருகும் நதிகளையும் அவையுண்டாகும் மலைகளையும் நெய்யையும் தெளிந்த தண்ணீரையும் யமனுக்கு விருப்பமான அநேக இடங்களையும் முன் பாராத மற்றும் பலவற்றையும் கண்டேன். எல்லாவற்றையும் கண்ட பிறகு நான் தர்மராஜனை "என்றும் வற்றாமல் ஓடுகின்ற இந்தப் பாலாறுகளும் நெய்யாறுகளும் யார் புசிப்பதற்காக விருக்கின்றன" வென்று கேட்டேன்.

அதற்கு யமன், "எந்த ஸாதுக்கள் பசுவின் பால், நெய் முதலிய ஸாரங்களைப் பிறருக்குத் தானம் செய்பவரோ அவர்கள் புசிப்பதற்குரியவை இவை. கோதானமே செய்பவருக்குத் துயரமற்றவர்கள் நிரம்பினவையும் அழியாதவையுமான வேறு லோகங்களுள்ளன" வென்று சொன்னான். நான் கோவில்லாதவன் கோதானம் செய்வதெப்படி என்று கேட்டேன். அதற்கு யமன் பின்வருமாறு சொன்னான்:—கோவில்லாவிடின் கோதானத்திற்குப் பிரதியான வேறு தானத்தினால் கோதானம் செய்தவர்போலாகலாம். கோக்கள் கிடைக்காதபோது உறுதியான நியமத்தோடு கோக்குப் பிரதியாக நெய்யை தானம் செய்பவனுக்குத்தான் இந்த நெய்யாறுகள் பெருகுகின்றன. நெய்யும் கிடையாதபோது விரதம் வழுவாது பசுவுக்குப் பிரதியாக எள்ளைத் தானம் செய்பவன் பசுவினாலேயே நரகத்திலிருந்து கரையேற்றப்பட்டுப் பாலாற்றில் மகிழ்வான். அவற்றையெல்லாம் கண்டபிறகு நான் அத்தகைய தானங்கள் செய்யவேண்டுமென்று உறுதிகொண்டிருக்கிறேன்.

இதைக் கேட்டுத் தந்தையான ஔத்தாலகி ரிஷியும் சந்தோஷமடைந்தார். ஆகையால் கோதானத்தின் சிறப்பு மகத்தானதென்று பீஷ்மர் யுதிஷ்டிரருக்குச் சொன்னார்.





# வாலிப ஆரோக்கியத்தை
## மீண்டும் அனுபவிக்கலாம்

ஸனடோஜன் சாப்பிடும்படி டாக்டர் சொல்லுகையில் அதனால் என்ன அனுகூலங்கள் கிடைக்குமென்பதை அவர் அறிவார்; ஸனடோஜன் உங்களுக்கு மீண்டும் ஆரோக்கியமளித்து நோயை விரட்டும்.

ஸனடோஜன் விரைவில் உங்கள் பலவீனத்தைப் போக்கி, வாழ்வின் இன்பத்தை அள்ளித் தருகிறது.

ஏற்கனவே ஆயிரக்கணக்கானவர்கள் சாப்பிட்டுப் பலன் கண்டுளர். நீங்களும் அதேமாதிரி செய்யுங்கள். தசைகள் சோர்வதனால் உண்டாகும் நோய்களை ஒழியுங்கள்.



ஸனடோஜன் உங்கள் தசைகளிலும் இரத்த ஓட்டத்திலும் புதிய வாழ்வுக்கான சத்துக்களை நிரப்புகிறது. மீண்டும் வாலிப ஆரோக்கியம் பொங்கி வழிகிறது.

SANATOGEN

உண்மையான டானிக் உணவு

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

ஸனடோஜன் கைபடாமல் தயாரிக்கப்படுவது.

# கண்ணோட்டம் பிரமுகர்கள்.



சென்னை ஜீவஹிம்ஸை நிவாரணச் சங்கம் நடத்திய கட்டுரைப் போட்டியில் தங்கப் பரிசு பெற்ற ஸ்ரீமதி எஸ் சகுந்தலா பாய்.



அடுத்த ஆகஸ்ட் மாதத்தில் டோகியோவில் (ஜப்பான்) நடைபெறவிருக்கும் சர்வதேசக் கல்வி மகாநாட்டிற்குத் தென்னிந்திய உபாத்தியாயர்கள் சங்கத்தின் பிரதிநிதியாகச் செல்லும் கள்ளிக்கோட்டை ஜாமொரின் காலேஜ் தலைவர் ஸ்ரீமான் ஏ. வி. கே. மேனன்.



தர்மபுரி ஸ்திரீகள் சங்கத் தலைவி. மிஸஸ் வி. பி. கிருஷ்ணசாமி. இவர் தர்மபுரி பெஞ்ச் கோர்ட் கௌரவ மாஜிஸ்திரேட்டாக நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்.



சென்னை கோஷா ஆஸ்பத்திரி சூபரிண்டெண்ட் டாக்டர் மிஸ். லாஸரஸ் அமெரிக்காவிற்குப் புறப்பட்டுச் செல்லுகிறார்.



பண்டித ஜவஹர்லால் நேருவின் சகோதரியான மிஸஸ் விஜயலக்ஷ்மி பண்டிட். ஐக்கிய மாகாண சட்ட சபைக்கு இவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.



சமீபத்தில் சென்னையில் நடைபெற்ற தமிழ் சுருக்கெழுத்துப் போட்டியில் நிமிஷத்திற்கு 100 வார்த்தை எழுதி "சுதேசமித்திரன்" தங்கப்பரிசு பெற்ற ஸ்ரீமான் எஸ். விஸ்வநாதன். இவர் வேலூர் போலீஸ் ட்ரெயினிங் பள்ளிக்கூடத்தைச் சேர்ந்தவர்.



பம்பாய் இந்திய சங்கீதப் பள்ளிக்கூடத்தின் ஆதரவில் நடைபெற்ற சங்கீதப் போட்டியில் வாய்ப்பாட்டில் வெற்றி பெற்ற மிஸஸ் கிருஷ்ணா பாய் முர்தேஷ்வரும், மிஸ் காஞ்சன மாலா சிரோத்கரும்.



கொல்லங்கோடு ராஜாவின் குமாரன் டாக்டர் டி. வி. ஜி. மேனன் இந்தியா கவர்ன்மெண்ட் உதவி மார்க்கெட்டிங் ஆபீஸராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

# இண்டோ யூனியன் அஷ்யூ

தலைமை ஆபீஸ்: கலீல் மான்ஷன்ஸ், த. பெ.

பிராஞ்சுகள்:

**பாராட்டுதல்**

அன்புள்ள ஐயா,

காலஞ்சென்ற எனது பர்த்தா ஸ்ரீமான் சுந்தரமய்யர் ரூ. 20-15-0 தான் ப்ரீமியமாகச் செலுத்தினர். அடுத்ததடவை செலுத்தவேண்டிய ப்ரீமியத்தை அவர் செலுத்தவேயில்லை. எனினும் அவர் காலமாகிவிட்டதும் உங்கள் செக்ரிடரி தயவு கூர்ந்து இவ்விடம் வந்து, அஷ்யூர் தொகையாகிய 1000 ரூபாயை எனக்குக் கொடுத்துவிட்டார். இவ்வன்புமிகுந்த செயலுக்காக நான் இதன் மூலம் என் மனப்பூர்வமான நன்றி யறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். உங்கள் செக்ரடரி சிறிதும் காலதாமதமின்றியும், சுலபமாகவும்எனது பாத்தியதையைத் தீர்த்து வைத்ததற்காக அவருக்கு நான் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன். மேற்கூறிய விஷயங்களிலிருந்து உங்கள் கம்பெனியில் இன்ஷ்யூர் செய்வதால் கிடைக்கும் அனுகூலங்கள் நிதர்சனமாகின்றன; எனவே, உங்கள் கம்பெனியிலேயே பாலிஸிதாரராகச் சேர்ந்து, அதனுல் ஏற்படும் அனுகூலங்களை அனுபவிக்கும்படி நான் போது மக்களுக்கு சிபார்சு செய்கிறேன். இண்டோ-யூனியன் அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட். நீண்டகாலம் வெற்றிகரமாக விளங்க வேண்டுமென்பதே எனது பிரார்த்தனை.

தலைமை ஆபீஸிலிருந்து உடனே தொகையைப்பெற உதவிய உங்கள் உள்ளூர் ஏஜண்டுக்கும் நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

குருவிக்குளம், 30—1—35

(ஒப்பம்) வெங்குத்தாயம்மாள்.

எமது பாலிஸி நிபந்தனைகளும், ஏஜன்ஸி
சென்னையிலுள்ள‡ ஆயுள் ஆபீஸ்களுக்குள் எமது
செல்வாக்கும், ஊக்கமும் மகுந்த கனவான்கள் பிரத்யேக ஏஜண்டுகளாக
விவரங்களுக்கு


## பிரபஞ்ச வர்த்தமானம்

—:o:—

### அபிஸீனிய கோரக் கொலைபற்றிக் கண்டனம்

சென்ற வாரம் காமன்ஸ் சபையில் அந்நிய நாட்டு விவகாரம்பற்றி விவாதம் நடந்தபோது மிஸ்டர் லாயிட் ஜார்ஜ் அபிஸீனியாவில் சமீபத்தில் பலர் கொன்று தள்ளப்பட்டதுபற்றிப் பலமான கண்டனத்தை வெளியிட்டார். அவர் பேசியதாவது:— அபிஸீனியர் கூட்டங்கூட்டமாகக் கொலை செய்யப்பட்டதுபற்றிப் பிரிட்டிஷ் சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கின்றனரென்று நான் கேட்கிறேன். சென்ற ஐம்பது வருஷ காலத்தில் ? எங்கும் எந்த சமயத்திலும் இவ்வளவு கோரக் கொலை நடைபெற்றதில்லை. இதுபற்றி எல்லாத் தேசங்களும் தங்கள் பலமான கண்டனத்தை சர்வதேச சங்கத்தின் மூலம் வெளியிட வேண்டும்.



இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்த உலக பிரதம சாரணர் லார்ட் பேடன் பவல் இங்கிலாந்துக்குச் செல்லு முன் பம்பாயில், ஒரு கூட்டத்தில் பேசினர்.

ஜெனரல் கிரேஸியானி ஒரு உன்னதமான வீரனென்ற முறையில் உயிர் தப்பியது பற்றி நான் மகிழ்ச்சியடைகிறேன். அபிஸீனியாவில் இன்னும் பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்படக்கூடும். இப்பொழுதாவது நாம் நமது பலமான கண்டனத்தை வெளியிடுவதால் அது தடுக்கப்படலாம். நவீன சரித்திரத்தில் ராஸ் டெஸ்டாவைக் கொன்றதற்கு இணையானதொரு அட்டூழியம் எதுவுமில்லை. அவர் தமது தேசத்துக்காகப் போர் செய்தார். அந்தக் குற்றத்திற்காக அவர் கேவலம் ஒரு நாயைப்போல் சுட்டுக் கொல்லப்பட்டார். சர்வதேச சங்கத்தைச் சேர்ந்த வல்லரசுகள் இந்த அட்டூழியத்தைக் கண்டித்து ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லை.

* * * *

### பிரிட்டிஷ் பாதிரிகள்மீது முஸோலினியின் ஆத்திரம்

பாஸிஸ்ட் இயக்கத்தின் பதினெட்டாவது ஆண்டு விழாவில் ஸீனர் முஸோலினி பேசுகையில் தாம் ஒருநாள் முன்னதாக லிபியாவிலிருந்து திரும்பிவிட்டதைக் குறித்து ஏதோ மர்மமிருப்பதாகப் பத்திரிகைகள் கூறியிருப்பதைக் கண்டித்தார். பிரிட்டிஷ் பாதிரிகள் தம்மைப்பற்றிக் குறைகூறியதையும் அவர் கண்டித்தார். அவர் பேசியதாவது:—

"நம்மைப்பற்றித் தாறுமாறுகக் குறை கூறப்பட்டு வருகிறது. இது, உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் வேஷதாரிகளான சில பிரிட்டிஷ் பாதிரிகளின் கூச்சலைத் தவிர வேறல்ல. தங்களிடம் மலைமலையாகக் குற்றங்களிருக்கையில், பிறரிடம் சிறிது குற்றங் கண்டாலும் அதை ஆர்ப்பாட்டமாக விளம்பரப்படுத்துவதையே அவர்கள் தொழிலாகக் கொண்டிருக்கின்றனர்.


சமையலறையில்
எறும்புத்
தொல்லையா?
பிளிட் பவுடர்
அவற்றைக்கொல்லும்




புகழ் பெற்ற
பிளிட்
காரரின்
தயாரிப்பு.



"நஞ்சன்கூடு பல்பொடி" பாக்டெரியின் மற்றும் சில மருந்துகள்—

எவ்வித ஜுரங்களுக்கும் **ஜ்வரேக** ஓர் அரிய ஔஷதம்

ஊக்கம் உற்சாகம் ஊட்ட **ஜீர்ப்** அஜீர்ண. பித்தசமனி

குழந்தைகளுக்கு **பாலக்ஸ்** சுகபேதியாக

சோல் ஏஜண்ட்ஸ்: யுனைடெட் கன்ஸர்ன், 54. பந்தர் தெரு. மதருஸ் (டிப்போ. பம்பாய். ரங்கூன். கொழும்பு)

திருநெல்வேலி, மதுரை, திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், சேலம், ஈரோடு, திருப்பூர் டிப்போக்களிலிருந்து பெற்றுக்கொள்க.

# ரன்ஸ் கம்பெனி லிமிடெட்.,

## நெ. 350, மவுண்ட் ரோட், மதராஸ்.

## பல்லாரி & ரங்கூன்

**உண்மை வாழ்க்கையிலிருந்து ஓர் நிகழ்ச்சி**

காதர் பாட்சா சாஹிப் சேலம் ஜில்லாவில் ஓர் கலால் இலாகா கான்ஸ்டேபிலாக இருந்தார். அவருக்கு வயது 27. மிகவும் திடசாலியாக இருந்தார். ஒருநாள் காலையில் அவர் ஆபிஸ் வேலையின் நிமித்தம் வெளியில் போயிருந்தபொழுது ஒரு பாம்பு கடித்துவிட்டது. எவ்வளவு சிரத்தையுடன் மருந்துகள் கொடுத்துக் கவனித்துப் பார்த்தும், அவர் ஒரு பால்ய சம்சாரத்தையும், இரண்டு குழந்தைகளையும் விட்டுவிட்டு இறந்துவிட்டார். இறந்துபோவதற்கு ஒரு வருஷத்திற்கு முன்பு தற்செயலாக எங்கள் பிரதிநிதி மோகனூர் Mr. ரெத்தினசாமி முதலியார் அந்தப் பக்கம் போயிருந்தார். அப்பொழுது ரூ. 500-க்கு இன்ஷ்யூரன்ஸ் செய்துவைத்தார். அவர் சொப்பனத்தில்கூடத் தான் இறந்து போகக் கூடுமென்று நினைத்திருக்கவில்லை. இப்படித் திடீரென்று காலமாகிவிட்டபொழுது அவருக்கு இருந்த ஐவேஜி இந்தப் பாலிஸிதான். ஆகவே, இந்த ரூ. 500 இல்லாவிட்டால் அக்குடும்பத்தின் கதி என்னாகும், நினைத்துப் பாருங்கள்! இப்பொழுது இறந்து போனவ்ராவது அல்லது அவருடைய மனைவியாவது இப்படிக் கஷ்டம் ஏற்படும் என்று நினைக்கவாவது அல்லது இப்படி இன்ஷ்யூரன்ஸ் செய்திருந்ததைக் குறித்தாவது வருந்துவார்கள் என்று நினைக்கிறீர்களா?

நிபந்தனைகளும் மிகவும் தாராளமானவை.

தான் மிகச் சிறந்தது; விசேஷ அபிவிருத்தி வாய்ந்தது.

வும், சம்பவம் பெறும் பிரதிநிதிகளாகவும் சேவை புரியலாம்.

காரியதரிசிக்கு எழுதுக.


பல வல்லரசுகள் ஒன்பது மாதகாலம் இத்தாலி மீது பொருளாதார நிர்ப்பந்த முறைகளைப் பிரயோகித்து வந்தன. இறுதியில் அவைகள் நம்மிடம் சரணடைய வேண்டியதாயிற்று. எனினும் இந்த நிர்ப்பந்த முறைகள் மூலம் சமாதான வாதிகள் தான் உண்மையில் சமாதானத்துக்குப் பெரிய விரோதிகளாயிருப்பவர்களென்பது நிரூபணமாகிவிட்டது.

இத்தாலியர் இத்தகைய நிகழ்ச்சிகளை எளிதாக மறந்துவிடுவரென எவராவது எண்ணுவாராயின், அது சுத்தத் தவறு. அடோவாவில் தங்களுக்கு ஏற்பட்ட தோல்வி சம்பந்தமாக இத்தாலியர் நாற்பது வருஷ காலம் பொறுத்திருந்து இப்பொழுது பழிக்குப்பழி வாங்கினர். கருஞ்சட்டைப் படையினரே! இது உங்களுக்கு ஞாபகமிருக்கட்டும். முஸ்தீப்புடன் தயாராயிருங்கள்''

* * * *

### யுத்தக் கப்பல்களில் பீரங்கிகள்

பெரிய யுத்தக் கப்பல்களில் 14-அங்குலத்திற்கு மேல் குறுக்களவுள்ள பீரங்கிகள் அமைக்கக்கூடாதெனப் பிரிட்டிஷ் சர்க்கார் ஒரு யோசனை கூறியிருக்கின்றனர். இந்த யோசனையை ஜப்பான் ஏற்க முடியாதெனப் பிரிட்டனுக்குப் பதிலளிப்பதென்று ஜப்பானிய மந்திரி சபை முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது.

### வின்ஸர் கோமகன் விவாகம்

வின்ஸர் கோமகன்—மிஸஸ் ஸிம்ஸன் விவாகம் பிரான்ஸில் டூவனுக்கருகிலுள்ள ஒரு அமைதியான கிராமத்தில் நடைபெறுமெனத் தெரிகிறது. விவாகச் சடங்கின்பொழுது பிரஞ்சு வார்த்தைகளைச் சரியாக உச்சரிக்கும்பொருட்டு மிஸஸ் ஸிம்ஸன் இப்பொழுது முதலே பிரஞ்சு பாஷை கற்றுக்கொண்டு வருகிறார். மன்னரான ஆறாவது ஜார்ஜ் மகுடாபிஷேகத்திற்குப் பிறகு தான் விவாகம் நடைபெறுமாம். இவ்விவாகத்திற்கு மன்னர் குடும்பத்தின் சார்பாகக் கென்ட் கோமகனும் அவரது மனைவியும் விஜயம் செய்வர்.

* * * *

### 2000 எஞ்சினீயர்கள் வேலை நிறுத்தம்

தங்களுக்குச் சம்பள உயர்வு வேண்டுமென்ற கோரிக்கையை வற்புறுத்தும் பொருட்டு இங்கிலாந்தில் 2000 எஞ்சினீர்கள் வேலை நிறுத்தம் செய்வதெனத் தீர்மானித்திருக்கிறார்கள். இதனால் புதிய யுத்தக் கப்பல்கள் நிர்மாணிக்கும் வேலை தடைப்படுமென அதிகாரிகள் அஞ்சுகிறார்கள்.

* * * *

(24-ம் பக்கம் பார்க்க)



கிராண்ட் நேஷனல் குதிரைப் பந்தயத்தில் ''ராயல் மெயில்'' என்ற குதிரை வெற்றிபெறும் காட்சி.

மற்ற பக்கங்களில்


| | |
|---|---|
| தனிக் குடித்தனம் | 2 |
| விநோதக்கொத்து | 4 |
| ராதா (தொடர்கதை) | 5 |
| சாபவிமோசனம் (சிறு கதை) | 7 |
| அகம்பாவம் பொல்லாது (சிறுவர் பகுதி) | 9 |
| ஸங்கீதப்பகுதி | 10 |
| மஹாபாரதம் | 13 |
| கண்ணோட்டம்-பிரமுகர்கள் | 15 |
| பிரபஞ்ச வர்த்தமானம் | 16 |
| இந்திய வர்த்தமானம் | 18 |
| நாட்டு நடப்பு-சித்திரக் கண்ணாடி | 25 |
| பர்மா | 26 |
| காரியசித்தி (ஹாஸ்யப்பகுதி) | 27 |
| நவநாகரீகம் | 29 |
| மரியாதைராமன் கதை | 37 |
| தென்னிந்தியப் பிரமுகர்கள் | 38 |



சென்ற 25-ந் தேதி அதிகாலை சென்னை-பங்களூர் ரஸ்தாவில் சுமார் 5,000 ரூபாய் பெறுமான தீப்பெட்டிகளை ஏற்றிவந்த ஒரு லாரி தீப்பிடித்து நாசமாயிற்று.

# இந்திய வர்த்தமானம்

—[ o ]—

சென்னை மந்திரி சபை

சென்னையில் மந்திரி சபை அமைப்பது சம்பந்தமாகச் சென்ற வாரமுதல் ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாச்சாரியாருக்கும் சென்னைக் கவர்னருக்கும் பேச்சுவார்த்தை நடந்தது. ஆனால், அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியில் நிறைவேற்றப்பட்ட தீர்மானப்படிக் காங்கிரஸ் கட்சியினர் மந்திரி பதவி ஏற்றுக்கொள்ள விதிக்கப்பட்டிருந்த உறுதியைக்கவர்னர் கொடுக்க மறுத்துவிட்டதால், ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியார் மந்திரி சபை அமைக்கும்பொறுப்பைத்தாம் ஏற்றுக் கொள்ள முடியாதென்று கூறிவிட்டார்.

இதன்பேரில் கவர்னர் மகா கனம் வி. எஸ். ஸ்ரீனிவாஸ சாஸ்திரியாரை அழைத்து மந்திரி சபை அமைப்பதில் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். ஆனால் அவரும் தம்மாலாகாதென்று தெரிவித்துவிடவே, கவர்னர் ஸர் கே. வி. ரெட்டியை அழைத்தார். அவர் மந்திரி சபையை அமைத்திருக்கிறார். மந்திரி சபையில் பின்கண்ட ஆறு பேர் இருப்பார்கள்.

கனம் ஸர். கே. வி. ரெட்டி

கனம் ஏ. டி. பன்னீர் செல்வம்

குமாரராஜா கனம் எம். ஏ. முத்தையா செட்டியார்

ஸ்ரீமான் ஆர். எம். பாலத்

ஸ்ரீமான் எம். ஸி. ராஜா

ஜனாப் பி. கலிபுல்லா சாகிப்

மந்திரி சபையிலுள்ள ஜஸ்டிஸ் கட்சியங்கத்தினர்கள் சேர்ந்த ஹோதாவில் கட்சியின் அனுமதிபெற்று மந்திரி சபையில் சேர்ந்திருப்பதாகக் கூறப்படுகிறது. சென்னை சட்ட சபைகள் கூட்டம் அடுத்த ஆகஸ்ட் மாதம் வரையில் கூடாதெனத் தெரிகிறது.

சென்னையைப் போலவே காங்கிரஸ் மெஜாரிட்டி பெற்றிருக்கும் இதர ஐந்து மாகாணங்களிலும் காங்கிரஸ் மந்திரி சபை ஏற்படவில்லை. மற்றவர்களைக் கொண்டே மந்திரி சபையை அமைக்க ஏற்பாடாகி வருகிறது. காங்கிரஸ் மெஜாரிட்டியில்லாத இன்னும் சில மாகாணங்களிலும் மந்திரி சபை அமைப்பதில் நெருக்கடி இருந்து வருகிறது. வங்காளத்தில் அமைக்கப்பட்டுள்ள மந்திரி சபையை எதிர்த்து ப்ரஜா கட்சியங்கத்தினர்கள் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கின்றனர்.

* * * *

3000 சுரங்கத் தொழிலாளர் வேலை நிறுத்தம்

கல்கத்தா டாடா நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர் சங்கத்தின் உத்தியோகஸ்தரைக் கைது செய்துவிட்டதை ஆக்ஷேபித்து ஜாமதோபா நிலக்கரிச் சுரங்கத்தில் சுமார் 3000 பேர் வேலை நிறுத்தம் செய்திருக்கின்றனர். 144 பிரிவு தடை உத்தரவை மீறி அந்த உத்தியோகஸ்தர் தொழிலாளர் கூட்டத்தில் பேசுவதற்காகச் சென்றுகொண்டிருக்கையில் கைது செய்யப்பட்டார்.

* * * *

முஸ்லிம் குடும்பம் ஹிந்துமதத்தைத் தழுவியது

லக்ஷ்மணபுரியில் பிரபல சையத் குடும்பத்தைச் சேர்ந்த ஹக்கீம் சையது இலியார்ஸ் ஹுசேன் என்பவர் தமது இரு புதல்வர்களுடன் ஹிந்து மதத்தைத் தழுவினர். 33 தலைமுறையாக இவரது குடும்பம் யூனானி வைத்தியம் செய்து வருவதாகச் சொல்லப்படுகிறது. ஆர்ய சமாஜத்தில் சுத்திச் சடங்கு நடந்தேறியது. ஹகீமின் புதிய பெயர் தர்மதேவ சர்மா.

* * * *

காங்கிரஸ் பதவியேற்காத காரணம்

காங்கிரஸ் தலைவர் பண்டித ஜவஹர்லால் நேரு பின்கண்டபடி பத்திரிகைப் பிரதிநிதியிடம் கூறியிருக்கிறார்:— காங்கிரஸ் சார்பாகக் கோரப்பட்ட உறுதி மொழியும் நிராகரிக்கப்பட்டுவிட்டது. சீக்கிரத்தில் கவர்னர் விசேஷ அதிகாரங்களினால் ஆதரிக்கப்படும் சிறுபான்மைக் கோஷ்டி மந்திரிகள் தலைப்படுவதை நாம் பார்க்கப்போகிறோம். புதிய அரசியலின் உண்மைத் தன்மையைஇது நன்குவிளக்கும். மாகாணங்களில் இந்தப் புதிய அரசியல் ஜனநாயகப் போர்வை கொண்ட ஒரு பாஸிஸ்டு

(23-ம் பக்கம் பார்க்க)

## வருஷப்பலன்

மாதவாரி ஒருவருஷப்பலன் எழுத ரூ. 3 வாராந்திர பலன் எழுத ரூ. 10. தர்ம நியாயமான 5 கேள்விகளுக்கு பதில் எழுத ரூ. 1. வி. பி. செலவு 5 அணா. ஜாதக விவரம் அல்லது கடிதம் எழுதும்போதுள்ள நேரம், சுமார் வயது, பெயர் தேவை.

ஹனுமான் ஜோதிஷ ஆச்ரமம்,
திருத்தணி, S. இந்தியா.

உயர்ந்த ரோமசங்காரி





வேண்டா ரோமத்தை உடனே நீக்கி சருமத்தை மிருதுவாக்கி பாதுகாக்கின்றது. பெரிய குடும்பங்களால் உபயோகிக்கப்படுகின்றது.

பெரியடியூப் அணா 12 சிறிய டியூப் அணா 6
பெரிய பாட்டில் அணா 14
சிறிய பாட்டில் அணா 10

வி பி. வேறு. எங்கும் விற்கப்படுகின்றது.

Agents: Shivlal & Co., Bombay, 2

## மாடரன் டயமண்ட்ஸ்

இவற்றின் அபார அழகும், அருமையான ஜ்வலிப்பும் மனதைப் பறிக்கின்றன.

லோலக் - கம்மல் - லோலக்

சவரன் பொன்னில் ''மாடரன் டயமண்ட்ஸ்'' வைத்துக் கட்டப்பட்ட அழகுநிறைந்த லோலக்குகள் ஜதை 1-க்கு ரூ. 20-ம் அதற்குமேலும், கம்மல்கள் ஜதை 1-க்கு ரூ. 20-ம் அதற்குமேலும், மூக்குத்திருகுகள் ரூ. 4-ம் அதற்குமேலும், படங்கள் கூடிய ஜாபிதாவுக்கு எழுதுக.

வி. வி. ஆச்சார்யுலு & ஸன்,
உயர்தர நகை வியாபாரிகள்,
S 63, போன்னப்ப செட்டிதெரு, த. பெ. 543,
பார்க்டவுன், மதராஸ்.



பிரபல ஸினிமா நடிகர்களான மிஸ்டர் பட்டி ரோஜர்ஸும், மிஸ் மேரி பிக்போர்டும். இவர்கள் விவாகம் செய்துகோள்வார்களென்று செய்தி வெளிவந்திருக்கிறது.





ஜெர்மன் படையில் மோட்டார் சைகிள் பிரிவின் அணிவகுப்பு சமீபத்தில் நடைபெற்றது. (வலது படம்) ஜெர்மனியின் வி
முன் புறத்தில் ஒரு விமானி வெடிகுண்டு ஒன்





சீனு தனது விமானப்படையைப் பெருக்கி வருகிறது. நான்கிங் புதிய விமானங்கள் பெயரிடப்பட்டபோது கூடியிருந்த திரளான ஜனங்க
யொன்று ஷாங்காயிலுள்ள ஒரு சினர் ஸினிமாவில் காட்டப்பட்டது. 'ஸிபான்டோ' என்ற யுத்தக் கப்பலைச் சேர்ந்த இத்தாலிய அதிக
சம்பவத்திற்குப் பின் போலீஸார் கா



யின் விமானப் படை ஒத்திகை சமீபத்தில் நடந்தது. விமானிகள் விஷவாயு முகமூடி அணிந்துகொண்டிருக்கின்றனர்.
ண்டு ஒன்றை விமானத்தில் வைக்கிறார்.





ஜனங்கள். நடுப்படத்தில் புதிய விமானங்கள் காணப்படுகின்றன. (வலது பக்கம்) எதியோபிய யுத்தத்தைப்பற்றிய படக்காட்சி
அதிகாரிகளும் மாலுமிகளும் ஸினிமாவுக்குள் நுழைந்து அங்குள்ளவர்களைத் தாக்கி மெஷின்களையும் நாசம் செய்துவிட்டனர்.
ரார் காவல் புரிவதைக் காணலாம்!





பார்ஸிலோனாவில் ஸ்பானிய சர்க்கார் ஆதரவில் ஒரு பொதுக்கூட்டம் நடந்தது. அதில் காடலோனியா தலைவர் பேசுகிறார். அவர் ஸ்பானிய கலகக்காரர்களை எதிர்த்து நிற்கும் மாட்ரிட் ஜனங்களையும் துருப்புகளையும் பாராட்டினார். (வலது பக்கம்) ஐக்கிய மாகாணத்தில் சர்க்காரின் கிராமப் புனருத்தாரணத் திட்டம் மும்முரமாக முன்னேற்றமடைந்து வருகிறது. ஸஹஸ்பூரில் (மோரதாபாத் ஜில்லா) ஒரு பெரியோர் பள்ளிக்கூடத்தில் கல்வி கற்பிக்கப்படும் காட்சி.



சமீபத்தில் ஜெனரல் ஸ்மட்ஸ் ஓய்வெடுத்துக்கொண்டு பொழுது போக்காக டேபிள் மலை மீதேறிச்சென்றார். படத்தின் மேல் பக்கத்தில் கேப் டௌன் காணப்படுகிறது.



சென்னை ஒய். எம். ஐ. ஏ. கட்டிடத்தில் காலஞ்சென்ற ஸ்ரீமான் வித்தல்பாய் படேலின் உருவப்படத்தை ஸ்ரீமதி லீலாவதி முன்ஷி திறந்து வைத்தார்.

## இந்திய வர்த்தமானம்

(18-ம் பக்கத் தொடர்ச்சி)

முறையாகவே இருக்கிறது. கவர்னர்களிடமும் ராஜப் பிரதிநிதியிடமும் எல்லா அதிகாரங்களையும் இது குவித்து வைத்திருக்கிறது. இந்தியாவில் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டின் பாஸிஸ்டு உணர்ச்சி உச்சஸ்தானத்தைப் பெறுவதையே இது காட்டுகிறது. சமஷ்டி திட்டம் ஆரம்பிக்கப்படுவதுடன் இது இன்னும் பூர்த்தியாகிவிடும். இப்பொழுது இந்தப் போர்வை அகற்றப்பட்டுவிட்டது. உண்மை ஸ்வரூபம் அதன் ஆபாஸத் தோற்றத்துடன் நம் எதிரே காணப்படுகிறது.

* * *

### ரகஸ்யப் போலீஸ் தஸ்தாவேஜிகளை அழித்துவிட ஏற்பாடு

"பம்பாய் கிரானிகிள்" பத்திரிகைக்கு அதன் அலகபாத் நிருபர் பின்கண்ட செய்தியை அனுப்பியிருக்கிறார்:—ஐக்கிய மாகாணத்தில் காங்கிரஸ்காரர்களடங்கிய மந்திரி சபை ஏற்படுமென்று தெரியவருவதால் (இப்பொழுது அங்கு காங்கிரஸ் மந்திரி சபை ஏற்படவில்லை என்று திட்டமாகத் தெரிந்துவிட்டது.) காங்கிரஸைப்பற்றியும் காங்கிரஸ்காரர்களைப்பற்றியும் ரகஸ்யப் போலீஸார் சேர்த்து வைத்திருந்த தஸ்தாவேஜிகளை அழித்துவிடக் கவர்ன்மெண்டார் உத்தரவிட்டிருப்பதாகத் தெரிகிறது. இப்படி அழிக்க முடியாத தஸ்தாவேஜிகள் இந்தியா கவர்ன்மெண்டுக்கு மாற்றப்பட்டுவிடும். காங்கிரஸ் மந்திரிகள் இந்தத் தஸ்தாவேஜிகளைப் பார்க்கக் கூடாதென்பது நோக்கம்.

* * * *

### ரங்கூனில் இந்திய வியாபாரிகளுக்குச் சேதம்

சென்ற 22-ந் தேதி மாலை ரங்கூன் சூர்த்திபாரா கடைத் தெருவில் பெரியதொரு தீ விபத்து ஏற்பட்டது. இதனால் ஏராளமான இந்தியர் சொத்துக்களுக்கு நாசமேற்பட்டது. சாயம், எண்ணெய், சில்லரை சாமான்கள், துணி முதலிய சாமான்கள் வைக்கப்பட்டிருந்த கட்டிடங்கள் நாசமாயின. சுமார் 600 சிறிய கடைகளும் 5 பெரிய கடைகளும் நாசமாயின. அநேகம் கடைகள் இன்ஷ்யூர் செய்யப்படவில்லை.

* * * *

### ஐரோப்பியர் முன் குடைபிடிக்க ஆக்ஷேபம்

ஒரு வங்காளி மாணவனைத் தாக்கியதாக அஸ்ஸாம் துப்பாக்கிப் படையைச் சேர்ந்த உதவி உத்யோகஸ்தரான ஜே. எச். ஆர். எடில்மன்மீது கொண்டுவரப்பட்ட வழக்கில் எதிரி குற்றவாளியல்லவென வாதித்தும் முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் ஸ்ரீமான் பி. கே. ராய் அவர் குற்றவாளியெனத் தீர்ப்புக் கூறித் தகுந்த கண்டிப்புக்குப்பின் கி. பு. கோ. 562-வது பிரிவுப்படி விடுதலை செய்தார்.

மேற்கூறிய வங்காளி மாணவன் மோட்டார் படகில் பாரக் ஆற்றைக் கடந்து சென்றபொழுது அந்த மாணவன் குடையைப் பிரித்துப் பிடித்துக் கொண்டதை மிஸ்டர் எடில்மன் ஆக்ஷேபித்தாரென்றும், அந்த மாணவன் இந்த உத்தரவுக்குக் கீழ்ப்படிய மறுத்ததன் பேரில் எடில்மன் மாணவனை அடித்தாரென்றும் பிராஸிகூஷன் வழக்கு. மாணவன் பிரியாது கொடுத்ததன்பேரில் இதைப்பற்றி விசாரணை செய்யுமாறு போலீஸாருக்கு மாஜிஸ்டிரேட் உத்தரவிட்டார். புகார் உண்மையானதெனப் போலீஸார் ரிபோர்ட்டு அனுப்பினர்.

* * * *

### பி. என். ரேயில்வே அதிகாரிகள் மீது புகார்பற்றி விசாரணை

பி. என். ரெயில்வே அதிகாரிகள்மீது தொழிலாளர் சங்கம் செய்துகொண்டுள்ள புகார் பற்றி விசாரணை செய்வதென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இதுபற்றிய சர்க்கார் அறிக்கை கூறுவதாவது:—

சமீபத்தில் பி. என் ரெயில்வே வேலை நிறுத்தம் ரத்து செய்யப்பட்டதற்குக் காரணமாகவிருந்த ராஜி ஏற்பாடு ரெயில்வே அதிகாரிகளால் சரிவர நிறைவேற்றப்படவில்லையென்றும், பின்னர் ரெயில்வே தொழிலாளர் சங்க அங்கிகாரம் ரத்து செய்யப்பட்டது நியாயமில்லையென்றும் பி. என். ரெயில்வே இந்தியத் தொழிலாளர் சங்கத்தலைவர் புகார் செய்திருக்கிறபடியால், மேற்படி ரெயில்வே ஏஜண்டின் சம்மதிபெற்றுப்பின்வரும் நோக்கத்துடன் விசாரணை நடத்துமாறு மிஸ்டர் ஆர் எப். மூடியை ரெயில்வே போர்டார் நியமித்திருக்கின்றனர்.

விசாரணை வேலை விவரம் வருமாறு:—பி. என். ஆர். வேலை நிறுத்த ராஜி ஏற்பாட்டை ஏஜண்டு தொழிலாளர் சங்கத்தலைவருக்கு சென்ற பிப்ரவரி 6-ந் தேதி எழுதிய கடிதத்தில் கண்டுள்ளபடி பின்னர் நிறைவேறத் தவறியதான தொழிலாளர் சங்கத் தலைவர் புகாரைப் பற்றி விசாரிக்க வேண்டியது.

அத்துடன் இப்பொழுது அமைக்கப்பட்டு நடத்தப்பட்டுள்ள தொழிலாளர் சங்கத்





உலகில்

## மிகச் சிறந்த சரும நிவாரணி

நமைச்சல், சிராய்ப்புகள், புண்கள் இவற்றை

ஜாம்-பெக் விரைவில் ஒழிக்கிறது.

சருமக் கோளாறுகளையும், காயங்களையும் வெற்றிகரமாகக் குணப்படுத்த உலகில் சிறந்தது ஜாம்பெக்தான். கத்திவெட்டு, தீப்புண் அல்லது காயம் இவற்றின்மீது கொஞ்சம் ஜாம்-பெக்கைத் தடவினால் மாயமாக குணமேற்படும். ஜாம்-பெக்கிலுள்ள சுத்த மூலிகைத் தைலம் சருமத்தினுள் ஊடுருவிச்சென்று விஷத்தை வெளிப்படுத்துகிறது. ஜாம்-பெக் வலியைச் சமனப்படுத்தி, வீக்கத்தைத் தணித்து, தழும்பின்றி ரணமாற்றுகிறது. நமைச்சல், சிராய்ப்புகள், மூலச்சூடு, முதலியவற்றை நிவர்த்திப்பதில் ஜாம்-பெக் இணையற்றது. ஜாம்-பெக் பெட்டி 1-க்கு ரூ. 1 அல்லது ரூ. 2-4 வீதம் எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும். ஏஜண்டுகள்: மெஸர்ஸ் தாதா & கம்பேனி, பார்க்டவுன், மதராஸ்.

மிருகக் கொழுப்பற்றது.

ஜாம்பெக்
Zam-Buk

தின் அங்கீகாரத்தை ரத்து செய்தது நியாயமாவென விசாரணை செய்யவேண்டியது.

ரெயில்வே தொழிலாளர் சூபர்வைஸரான லெப்டினண்டு கர்னல் எச். டபிளியூ வாக்ஸ்டாப் இந்த விசாரணையில் மிஸ்டர் மூடியுடன் ஆலோசனையாளராகவிருந்து உதவிபுரிவார்.

எப்ரல் மத்தியில் மிஸ்டர் மூடி தமது விசாரணையை ஆரம்பிப்பாரெனத் தெரிகிறது.

* * * *

### தும்கூரில் போலீஸ் துப்பாக்கிப் பிரயோகம்

தும்கூர் ஜில்லாவிலுள்ள மாயசுந்தரா கிராமத்துக்கருகில் போலீஸார் ஒரு கூட்டத்தின்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யவே ஒருவர் கொல்லப்பட்டதுடன் பலர் காயமடைந்தார்கள். அக்கிராமத்திலிருக்கும் இரு கட்சிகளில் ஒவ்வொன்றும் அங்குள்ள கோயிலில் சேவிக்கத் தனக்கு மட்டுமே உரிமையுண்டென வற்புறுத்தி வந்ததாகவும், இதன்பேரில் அவர்களிடை சச்சரவேற்பட்டதென்றும் தெரிகிறது.

* * * *

### சமஷ்டி கோர்ட்டு ஜட்ஜிகள்

அலஹாபாத் ஹைகோர்ட் சீப் ஜஸ்டிஸ் ஸர் ஷா முகமது சுலைமானும் பம்பாய் ஹைகோர்ட் அட்வகேட் ஸ்ரீமான் எம். ஆர். ஜெயகரும் அடுத்த அக்டோபர் முதல் தேதி முதல் சமஷ்டி கோர்ட் ஜட்ஜிகளாக நியமிக்கப்பட்டிருக்கின்றனர். ஸர் மாரிஸ் க்வயர் சீப் ஜட்ஜாக முன்னமேயே நியமிக்கப்பட்டிருக்கிறார்.

* * * *

## பிரபஞ்ச வர்த்தமானம்

(17-ம் பக்கத் தொடர்ச்சி)

### பிரிட்டிஷ் மந்திரிகளுக்கு அதிகச் சம்பளம்

வருஷமொன்றுக்குப் பிரதம மந்திரிக்கு 10,000 பவுனும் லார்டு சான்ஸலரைத் தவிர மற்ற மந்திரிகள் ஒவ்வொருவருக்கும் 5000 பவுனும் சம்பளம் கொடுக்கும் பொருட்டு சமீபத்தில் காமன்ஸ் சபையில் ஒரு மசோதா கொண்டுவரப்படும். பிரதம மந்திரி தமது பதவியிலிருந்து விலகியபின் அவருக்கு வருஷமொன்றுக்குச் சுமார் 2,000 பவுன் பென்ஷன் அளிக்க வேண்டுமென்றும் அம்மசோதாவில் விதிக்கப்பட்டிருக்கிறது. மிஸ்டர் பால்ட்வின் மட்டும் பென்ஷன் வாங்கிக் கொள்ளமாட்டார்.

* * * *

### சீனா-ஜப்பான் பருத்தி ஒப்பந்தம்

சமீபத்தில் ஜப்பானியப் பொருளாதாரப் பிரதிநிதிக் கோஷ்டியொன்று சீனாவுக்குச் சென்றிருந்தது. அவர்களுடைய முயற்சியின் பேரில் இரு தேசப் பருத்தித் தொழில் முதலாளிகளுக்கும் ஒரு ஒப்பந்த மேற்பட்டிருக்கிறது. இதன்படி ஒரு ஐந்து வருஷத் திட்டத்தின்படி சீனாவில் பருத்தி விளைவை விருத்தி செய்ய அம்முதலாளிகள் ஒத்துழைப்பர். சீனாவிலிருந்துஜப்பானுக்கு அதிகமான பருத்தி ஏற்றுமதி செய்யப்படும். தற்பொழுது அமெரிக்கா, இந்தியா ஆகிய நாடுகளிலிருந்து ஜப்பான் எவ்வளவு பருத்தி இறக்குமதி செய்கிறதோ அதில் பாதியளவைச் சீனா இன்னும் சில வருஷகாலத்தில் ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்யக் கூடுமெனச் சொல்லப்படுகிறது.

* * * *

### 2398 வருஷம் சிறைவாசம்!

நியூயார்க்கிலுள்ள பல பிரபல ஹோட்டல்களின் சொந்தக்காரர்களைப் பயமுறுத்தி அவர்களிடமிருந்து 4,00,000 பவுன் பறித்ததாக ஏழுபேர் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தார்கள். சென்ற 20 வாரகாலமாக விசாரணை நடந்ததின் பேரில் அவர்கள் மொத்தம் 2,398 வருஷகாலம் சிறைவாஸம் அனுபவிக்க வேண்டுமெனத் தீர்ப்புக் கூறப்பட்டது. அவர்கள்மீது மொத்தம் 180 குற்றங்கள் சாட்டப்பட்டன.

* * * *

### ஸ்திரீகளுக்குத் தடியடி

பெல்பாஸ்டில் சமீபத்தில் வெகு கடுமையான கலகங்கள் ஏற்பட்டன. இதைமுன்னிட்டுப் போலீசார் இயந்திர பீரங்கிகளுள்ள மோட்டார்களுடன் அந்நகரில் காவல் புரிந்து வந்தார்கள். குடியரசுக் கட்சியினர் 1916-ம் ஆண்டு நடந்த கலகத்தின் ஞாபகார்த்தமாக ஆர்ப்பாட்டமெதுவும் நடத்தக்கூடாதென அதிகாரிகள் தடையுத்தரவு பிறப்பித்திருந்தனர். அக்கலகத்தில் கொல்லப்பட்ட குடியரசுவாதிகள் புதைக்கப்பட்டிருக்கும் இடுகாட்டைப் போலீசார் சூழ்ந்து கொண்டனர். அதற்குள்யாரும் செல்ல அனுமதிக்கப்படவில்லை. ஜனங்கள் அருகிலுள்ள ரஸ்தா ஓரத்தில் மண்டியிட்டுப் பிரார்த்தனை நடத்தினர். ஆனால், அவர்களில் ஒரு வாலிபன் பிரசங்கம் செய்ய முயன்றதும் போலீஸார் தங்கள் தடிகளைக்கொண்டு கூட்டத்தைக் கலைத்தார்கள். ஏராளமான ஸ்திரீகளுக்கும் தடியடி விழுந்ததாம். வாலிபர்கள், “ஸ்திரீகளைத்தாக்கும் கோழைகளே!” எனக் கூச்சலிட்டுக்கொண்டு போலீசாரைத் தாக்கினர். ஒரு போலீஸ்காரர் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகப்பட்டார். ஜனங்களில் சுமார் 20 பேர் காயமடைந்தனர்.

* * * *

### ஸ்பானியக் கப்பல் மூழ்கியது.

“மார்க்ஸ்பியோ” என்ற ஸ்பானியக் கப்பல் நியுகாஸிலிலிருந்து வந்துகொண்டிருக்கையில் கலகக் கோஷ்டியைச் சேர்ந்த இரு யுத்தக் கப்பல்கள் அதன்மீது கடுமையான பீரங்கிப் பிரயோகம் செய்தன. “மார்கஸ்பியோ” இப்பொழுது மூழ்கிவிட்டதாகத் தெரிகிறது. அதிலிருந்த 34 பேர் காயமின்றித் தப்பிவிட்டார்கள்.

ஸன்டான்டரிலிருந்து 20 மைல் தூரத்தில் “மாக்டிலேனா” என்ற பிரிட்டிஷ் கப்பலைக் கலகக் கப்பல்கள் வழிமறித்து அதன்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகத் தெரிகிறது. அது பிரிட்டிஷ் கப்பலெனத் தெரிந்ததன் பேரில் அது மேற்கொண்டு செல்ல அனுமதிக்கப்பட்டதாம்.

* * * *

### திகைக்கத்தக்க விபசாரத் தொழில்

சிங்கப்பூரில் விபசாரத் தொழில் மிகவும் வலுத்தப்பட்டது இதில் ஈடுபட்டிருப்போரில் பெரும்பாலோர் சீனப் பெண்கள். இத்தொழிலுக்காக வெளியிடங்களிலிருந்து வரும் ஸ்திரீகளைத் தடுக்க இப்பொழுது அதிகாரிகள் தீவிர நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கின்றனர். எனவே இத்தொழிலுக்குப் பொறுப்பாளிகளாயுள்ளவர்கள் உள்ளூரில் பிறந்த சீனப் பெண்களைக் கொண்டே அதை நடத்தி வருகிறார்கள். அவர்கள் இப்பெண்களை சிறு பிராயத்திலேயே ஒரு பவுன் அல்லது இரண்டு பவுனுக்கு விலைக்கு வாங்கிவிடுகின்றனர். அப்பெண்கள் சிறிது ஆங்கிலம் கற்றுக்கொள்வதற்காக சில வருஷகாலம் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பப்படுகின்றனர். அழகுடன், சிறிது ஆங்கிலமும் தெரிந்த பெண்களை சீன தனவந்தர்கள் அதிகமாக விரும்புகின்றனராம். இப்பெண்கள் பல கைகள் மாறியபின் இறுதியில் தெரு ஓரங்களில் அனாதைகளாகக் கிடந்து துன்புறுகின்றனர்.



அகில இந்திய ஹிந்தி சாஹித்ய சம்மேளனக் கூட்டம் சென்னை மாம்பலத்தில் நடந்தபோது ஸ்திரீகளின் பொதுக்கூட்ட மொன்று ஸ்ரீமதி கஸ்தூரிபாய் காந்தியின் தலைமையில் நடைபெற்றது. அதற்கு அவர் ஸ்ரீமதி ருக்மணி லக்ஷ்மிபதியுடன் செல்லும் காட்சி.

பத்மராஜா
விலை ரூபா 1—8—0
சுதேசமித்திரன் புத்தகசாலை,
சென்னை.

வருங்கால பலன்

புராதன சாஸ்திர ஆராய்ச்சியின் பேரில அனுபவம் பெற்ற இருவர் கலந்து தெளிவுபடக் கூறுவதாம்.

பண்டிட் M. R. K. மூர்த்தி, ஜோதிஷ கலா வல்லபர்
பண்டிட் E. S. K. சுவாமி, ஜோதிஷ தத்வக்கியானி
ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 1. காரணமுடன கேள்வி 1-க்கு ரூ. 1. ஒரு வருஷ மாதவாரி பலன் ரூ. 2. ஆயுள்வரை பொதுப்பலன் ரூ. 10. ஜாதகமாவது பிறந்த நேரம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை.
“ஜோதிட கழகம்” 38, தேவராஜமுதலி தெரு, பி. டி. மதராஸ்.

# நாட்டு நடப்பு - சித்திரக் கண்ணாடி



சமீபத்தில் நடைபெற்ற கிராண்ட் நேஷனல் குதிரைப் பந்தயத்தைப் பார்க்க மன்னர்பிரான் தம்பதிகள் விஜயம் செய்திருந்தனர்.





சென்னையில் நடைபெற்ற படகு ஓட்டப் பந்தயத்தில் பூனு கோஷ்டியினர் வெற்றி பெற்றனர். (வலது பக்கம்) அரசர் வக்கில் ஸர் தாமஸ் பார்னஸ் மிஸஸ் ஸிம்ஸன் வழக்கை முடிப்பதற்காகக் கோர்ட்டிற்குச் சென்றபோது எடுத்த படம்.



ரங்கூன் சூர்த்தி பஜாரில் பெரும் தீ விபத்து நேரிட்டது.




# பர்மா

(எஸ். ஆர்.)

பர்மா இவ்வளவு நாட்களாக இந்தியாவைச் சேர்ந்த ஒரு மாகாணமாயிருந்தது. ஆனல் இப்போது அது தனியாகப் பிரிந்துவிட்டது. அதன் விஸ்தீரணம் சுமார் 2,70,000 சதுர மைல். அதன் ஜனத்தொகை 1931-ல் 14,667,146.

பர்மா என்னும் பதம் பிரமன் என்னும் பதத்திலிருந்து வந்ததாக எண்ண வேண்டாம்; மயன் என்னும் சீன பதத்திலிருந்து வந்தது என்று கூறுகிறார்கள். மயன் என்னும் பதம் எவ்வாறு பர்மா என்று மாறினது என்று நமக்குத் தெளிவாகப் புரியவில்லை. ஆனல் இன்றைக்கும் பர்மியர்கள் தமது பாஷையில் பர்மாவிற்கு மயம்மா என்று குறிப்பிடுகிறார்கள்.

பர்மியர்கள் மங்கோலிய இனத்தைச் சேர்ந்தவர்கள். முகஜாடையில் இருவருக்கும் அதிக வித்தியாசம் காணமுடியாது. இவர்கள் குட்டையானவர்கள். அகன்ற மூக்கும் குறுகிய கண்களுமுடையவர்கள்.

உடையில் புருஷர்களுக்கும் ஸ்திரீகளுக்கும் அதிக வித்தியாசமில்லை. இருவரும் கை அகன்ற ஒரு ஜாக்கட்டைப் போட்டுக்கொள்வார்கள். அரைக்கு ஒரு லுங்கி உடுத்துக்கொள்வார்கள். அநேகமாய் பட்டினாலான ஒரு கைகுட்டையைத் தலையில் சுற்றிக்கொள்வார்கள். பெண்கள் தலையில் ஒன்றும் சுற்றிக்கொள்வது இல்லை. இவ்வாறு சுற்றிக்கொள்ளும் துணிக்கு காங்பாங் என்று பெயர். ஸ்திரீகள் தலையைக் கொண்டையிட்டுக் கட்டிக்கொள்வது வழக்கம்.

பர்மியரல்லாதார் அநேகர் பர்மாவில் வசிக்கின்றனர். மத்திய பிரதேசங்களில் ஷான் தேசத்தவர்கள் வசிக்கின்றனர். இவர்கள் சுமார் 10,00,000 பேர்கள். வடகிழக்கு பாகங்களில் சின் எனக் கூறப்படும் மனிதர்கள் வசிக்கின்றனர். அவர்கள் சுமார் 3,00,000 பேர்கள். இவர்களைத் தவிர வடக்கே கச்சின் என்போரும், கிழ்திசையில் கரீன் என்போரும், மலைப் பிரதேசங்களில் படாங்,வாமுதலிய அநேகரும் வசிக்கின்றனர். வியாபாரத்திற்காக இந்தியாவிலிருந்து சென்ற அநேகர், சென்ற இரண்டு மூன்று வருஷங்களில் திரும்பிவந்துவிட்டனர். தற்காலத்தில் ரங்கூன் முதலிய பெரிய கடற்கரைப்பட்டணங்களில்தான் இந்தியர்கள் வசிக்கின்றனர். உள்நாட்டில் இந்தியர்களை முன்போல் காண்பது அரிது.

ஐராவதி, சிண்ட்வின், சால்வீன் முதலிய நதிகள், பர்மாவின் வடக்கிலிருந்து தெற்காகப் பாய்கின்றன. உள்நாட்டிலிருக்கும் கிராமங்களும் பட்டணங்களும் அநேகமாய் இந்நதிக்கரைகளிலேயே இருக்கின்றன. ஆகையால், வடக்கில் விளையும் அரிசி, தேக்கு முதலியவைகள் படகின் மூலமாகவே ரங்கூனுக்குக் கொண்டு வரப்படுகின்றன.

பர்மாவின் தேக்கு மிக்க பிரக்யாதி பெற்றது. வீடுகட்டுவதற்கும் இதை அதிகமாய் உபயோகிக்கின்றனர். மரத்தைச் செதுக்கிச்செய்யப்படும் வேலைப்பாடு மிகவும் விசித்திரமானது. பாகன் என்னும் ஊரில் செய்யபபடும் வெற்றிலைத் தட்டு முதலிய லாகர் சாமான்கள் மிகவும் நன்றாயிருக்கும். அமரபுரத்திலும் மாண்டலேயிலும் பட்டு நெய்யப்படுகிறது.

பர்மியர் கோவில்களுக்கு பகோடா என்று பெயர். இவைகள் புத்த கோவில்கள்.



ஒரு பர்மிய ஸ்திரீ.

இவைகளில் முக்கியமானவை ரங்கூனிலுள்ள ஷ்வீடாகன் பகோடா, பெகுவிலுள்ள ஷ்வீஹாமா பகோடா, ப்ரோமில் உள்ள ஷ்வீ ஸான்டா பகோ

(31-ம் பக்கம் பார்க்க)



மாண்டலேயிலுள்ள புத்தமடம். தங்க சித்திர வேலைப்பாடுகளமைந்தது.

ஹாஸ்யப்பகுதி



அவ்வாடவன் தன் கையிலுள்ள கத்தியைக் காண்பித்து தன்னை அணுகாதிருக்குமாறு பயமுறுத்தினன்.

# காரிய சித்தி

(எஸ் .வி. எஸ்.)

'கண கண கண'வென்று மேஜை மீதிருந்த டெலிபோன் மணி பலமாக ஒலித்தது. கோட்டையூர் போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் மாதவராவ் வெப்ப மிகுதியால் சிரம பரிகாரத்தின் பொருட்டு ஓர் சாய்வு நாற்காலியில் சாய்ந்த வண்ணம் அரைக்கண் தூக்கத்திலிருந்தவர், மேற்படி மணி சப்தத்தைக் கேட்கவே, டெலிபோன் ரிஸீவரை எடுத்து "ஹலோ- யாரது... ஊம்...... ...ஹா! கொலையா?...(சட்டென்று தமதிருக்கை விட்டெழுந்து) இந்தப் பட்டபகலிலா?... ஆமா... ஆமா...; நீர் யார்?...ஊம்... எங்கிருந்து பேசுகிறீர்?...சரி...சரி இதோ வந்துவிட்டேன்" என்று;கூறிய வண்ணம் ரிஸீவரை வைத்துவிட்டு, "அடே 701, அடே 354" என்று உறக்கக் கூவினர்.

"சார்" என்ற வண்ணம் ஓர் கான்ஸ்டேபிள் உள் வந்து நின்ருன். "எண்டா 97, முட்டாளே உன்னை யாரரா கூப்பிட்டா? அந்தத் தடியர்கள் ரெண்டுபேரும் எங்கேடா தொலஞ்சு போயிட்டாங்க?" என்று கர்ஜித்தார்.

உடனே 97 பறக்கப் பறக்க ஓடிச் சிறிது நேரத்தில் அவ்விரு கான்ஸ்டபிள்களையும் அழைத்து வந்தான். "ஏய், ரெண்டு பேரும் ரொம்ப காரியமா சொல்லாமெ வெளியே போயிட்டேளா? வெள்ளப்பன் தெருவில் 19 நெ. வீட்டில் கொலை நடத்திருக்கிறதாம். போனில் தகவல் வந்தது. உடனே புறப்படத் தயாராகுங்கள், ஜல்தி" எனக் கூறி, இமைகொட்டும் நேரத்தில் ஆயுதபாணிகளாகிய அந்த இரு குண்டோதர கான்ஸ்டபிள்களுடன் சப் இன்ஸ்பெக்டர் மாதவராவ் தமது காரில் புறப்பட்டு விட்டார்.

குறிப்பிட்ட வீட்டின் வாயிலில் கார் வந்து நின்றதும் எஸ். ஐ. ஜவான்கள் சகிதம் கீழ் இறங்கி மிகுந்த எச்சரிப்புடன் வீட்டின் வாயில் கதவைத் தட்டினர். ஆனல் அவர் எதிர் பார்த்ததற்கு மாருக கதவு தாழ்ப்பாள் போடாமலிருந்தபடியால் கதவைத் திறந்துகொண்டு மடமடவென்று மூவரும் உள் நுழைந்தனர். அங்கு தென்பட்ட காக்ஷி மிக்க பயங்கரமானதாக இருந்தபோதிலும் எஸ். ஐ. மனது மிக்க குதூகலமடைந்தது. "சரியான வேட்டையகப்பட்டது. இதன் மூலம் நம் உத்தியோகத்திற்குப் பிரமோஷன் எப்படியாவது செய்துகொள்ள வேண்டும்" என அவர் மனது பல பல எண்ணிவிட்டது.

தரையில் ஓர் பெண் அலங்கோலமாக ரத்த வெள்ளத்தில் புரண்டு கிடக்கின்ருள். அருகில் ஓர் ஆடவன் கையில் ரத்தம் தோய்ந்த


## உங்கள் கூந்தலுக்கு கருமையும் மினுமினுப்பும் அளிக்கும் கூந்தல் தைலம் இதோ இருக்கிறது.

உங்கள் கூந்தல் அழகுடனிருக்கவேண்டாமா? அப்படியாயின் ப்ரிங்கால் உபயோகிக்கத் தொடங்குங்கள். கூந்தலுக்கும், தலைக்கும் விசேஷ நன்மையூட்டுவதில் பிரக்யாதி பெற்று விளங்கும் ஆயுர்வேத



முறை தயாரிப்பான கூந்தல் தைலம் இதுவே. பிரிங்கராஜ் முதலிய மூலிகைகள் வேர்களின் சாரத்தைக் கொண்டு சாஸ்திரோக்தமாகத் தயாரிக்கப்படுவது. கூந்தலுக்கும் தலைக்கும் நன்மையூட்டுவதில் இம்மூலிகைகள் சிறந்தவை. பால்யநரை, செம்பட்டை முதலியன ஏற்படக்கூடிய மருந்து தினுசுகளின் கலப்பே கிடையாது. பிரிங்கால் மேலான கூந்தல் தைலம் மட்டுமன்றி சிரசுக்குக் குளிர்ச்சியூட்டுவதில் நிகாற்றது; உச்சந்தலையிலும், உள்ளங்கை, உள்ளங்கால்களிலும் தேய்த்து ஸ்நானம் செய்தால் தேக உஷ்ணம் பூராவும் அகன்று உடல் குளிர்ந்திருக்கும்.

தைலம் நன்ருக இருக்கிறதா என்பதைப் பரீட்சிக்கவேண்டுமானல் கீழ்க்கண்டவர்களுக்கெழுதி சாம்பிள் புட்டி பெறலாம்.

கல்கத்தா கெமிக்கல் கம்பெனி, லிமிடெட்.

10, தம்பு செட்டி தெரு, மதராஸ்.





## துளி இரத்தம் சிந்தவில்லை!

வாளால் வெட்டினபோது கூட

காரணம் ரத்தமேயில்லை!

இரத்தமின்மையும், ஜீவசக்திக் குறைவும் மறைந்தொழியும், உங்கள் தேகத்தில் 100-க்கு 100 இரத்தம் நிறைந்து நிற்கும். வலுவான தசைகளும், ஆரோக்கிய வாழ்வும் ஏற்படும். எப்பொழுது—

அமிர்தா அருந்தினல்

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

கத்தியுடன் உடைகளிலெல்லாம் ரத்தக் கரைகளுடன், தலையும் முகமும் மிக்க விகாரத் தோற்றத்துடன் நின்று கொண்டிருந்தான். இக்காட்சி சப்-இன்ஸ்பெக்டரை லயிக்கச் செய்துவிட்டதால் வேறெதையும் பொருட்படுத்தாதுநேராக அவ்வாடவன்மீது பாய்ந்து அவனைக் கைது செய்ய யத்தனித்தார். அதைக்கண்ட அவ்வாடவன் தப்பியோட யத்தனம் செய்ய எஸ். ஐ. அவனை அவ்விதம் செய்யாமல் தடுக்கவே, அவ்வாடவன் தன் கையிலுள்ள கத்தியை ஓங்கிக்காண்பித்து தன்னை அணுகாதிருக்குமாறு பயமுறுத்தினன். ஆனல் அவன் மிரட்டலுக்கெல்லாம் போலீஸ் புலி மாதவராவா அஞ்சுபவர். தம்மிடமுள்ள ரிவால்வரை அவன் முன்பு நீட்டி, இனி ஏதாகிலும் சேஷ்டைகள் செய்தால் ரிவால்வருக்கு இரையாக நேரிடுமெனக்கூறி, அவன் வசமுள்ள கத்தியைக் கவர்ந்து, அவனைக் கைது செய்தார். பின்பு வழக்கமாகப் போலீசுக்குள்ள ஆர்ப்பாட்டங்களெல்லாம் புரிந்த வண்ணம் அங்குமிங்கும் கிடந்த சில துப்புத்துலக்குவதற்கறிகுறியான சாமான்களையும் எடுத்துப் பத்திரப்படுத்திக்கொண்டார். அவர் அடைந்த ஆனந்தத்திற்கோர் அளவேஇல்லை. வெகு காலமாகக் கொலைக்கேஸ் ஒன்றுகூட அகப்படாதிருந்த அவருக்கு அன்று சரியான வேட்டை கிடைத்ததைப்பற்றி மிக மிக மகிழ்ந்தார். அன்றே சர்க்கிள் இன்ஸ்பெக்டர் உத்தியோகத்திற்குஉயர்ந்துவிட்டதாக நினைத்துப்புளகாங்கிதமடைந்தார்.

* * * *

"என்னமா இருந்தாலும் தாங்கள்இந்த மாதிரி ஏமாற்றுவீர்களென்று நான் நினைக்கவேயில்லை சார்" என்று சற்று சலிப்புடன் கூறினர் சப்-இன்ஸ்பெக்டர் மாதவராவ்.

"மன்னிக்கவேண்டும். நாம் எவ்வளவோ அன்யோன்யமாகப் பழகிஇருக்கிறதற்குத்தாங்கள் இதை ஒரு பொருட்டாக மதிக்கக்கூடாது. என் விஷயத்தில் தாங்கள் சிரமமெடுத்துக்கொள்ள வேண்டியது நியாயந்தான். எனக்கேற்படும் லாப நஷ்டங்கள் தங்களுக்கேற்படுவதுபோலில்லையா? பாருங்கோன்னு, நம்ம கம்பெனி ஆக்டர் தாமோதரனைத் தங்களுக்கு நன்ருகத் தெரிந்திருக்கும். அபார நடிப்புக்காரன்; நம்ம கதைக்கு அவனைத்தான் சப்-இன்ஸ்பெக்டராக நியமித்திருந்தோம். என்னன்னு, நேத்தக்கி இருந்துதிடீரென்று அவனுக்கு உடம்புக்கு ரொம்ப ஒத்துக்காமெப்போயிடுத்து. படமோ பிடித்தாகவேணும். என்னடா செய்யரது என்று பார்த்தோம். ஒண்ணுமே புரியல்லே! வேறொருத்தனைப் போடலாமென்ருல், ஒன்றுமே பிரயோஜனப்படாது. ஏனென்ருல் அந்தக் கட்டத்தில்தான் கதையின் போக்கே திரும்ப வேண்டியதாக இருக்கின்றது. யார் யாரோ என்னென்னமோ சொன்ஞர்கள்; அதெல்லாம் எனக்கு ஒன்றும்பிடிக்கவில்லை. கடைசியாக எனக்கு ஒண்ணு தோணித்து. நீங்கள் இருக்கவே இருக்கேள்; ரொம்ப வேண்டியவாள். உங்களுக்குத் தகவல் கொடுத்துவிட்டால், நீங்கள் நிஜமென்று நம்பிக் கொண்டு ஜவான்களுடன் வந்துவிடுவீர்கள்; அப்புறம் உங்கள் நடிப்பைப் படம் பிடித்துவிடலாமென்று நினைத்தேதான் நான் உங்களுக்கு டெலிபோன் மூலியமாய் செய்தியனுப்பியது என் அபிப்பிராயப்படியே சகலமும் முடிந்துவிட்டது. படமும் ரொம்ப நன்ன பதிஞ்சிருக்கும். அதில் சந்தேகமே இல்லை. உங்களது முகஜாடைகளை அந்த போட்டோகிராபர் என்னவெல்லாமோ 'டச்' செய்து உங்களுடைய ஜாடையையே அடியுடன் மாற்றிவிடுவார். இவ்வளவு உபகாரம் செய்த உங்களை நான் மறக்கக்கூடாது. ஏதோ நான் செய்யும் மரியாதை பிரமாதமாக இல்லாவிட்டாலும், எனக்காக அதைத் தட்டாமல் ஏற்றுக்கொள்ளணும். அப்போதான் என் மனது சந்தோஷமடையும். ஏதோ பாவம்; அந்த ஜவான்களும் கஷ்டப்பட்டிருக்கா; அவர்களுக்கும் கொஞ்சம் சிரமபரிகாரம் செய்துவைத்துவிடுங்கள்" என்று கூறியவண்ணம் ஜேபியிலிருந்து ஒரு கத்தை நோட்டுகளை எடுத்து எஸ். ஐ. முன் வைத்தார். பகதூர்ஸ்டுடியோ மானேஜரான மிஸ்டர் வரதராஜ்.

"அடடா இதெல்லா மென்னத்திற்கு பரவா இல்லேன்னு; இதனலென்ன? மனுஷ்யாளுக்கு மனுஷ்யாள் உபகாரம் பண்ணுவது சகஜம்தானே! அதற்கோசரம் இதெல்லாம் என்னத்திற்கு? ஆனல் இங்கு நடந்த சங்கதிகளை மாத்திரம் பெரிய உத்தியோகஸ்தாளுக்குத் தெரியாமேமறைச்சூட்டா அதுவே போதும்" என்று கூறியவண்ணமாகவே நோட்டுகளை யெல்லாம் எடுத்துத் தமது சட்டைப் பையில் விட்டுக் கொண்டார் சப் இன்ஸ்பெக்டர் மிஸ்டர் மாதவராவ். நடிப்பு எப்படி? வரும்படி எப்படி?


**எலக்டிரிக் சினிமா ரூ. 5**

இருட்டு அறையில் வெள்ளைத்திரையில் சினிமா பார்க்கலாம். உருவங்கள் சிறிதாகவிருப்பினும் சகல அபிநயங்களும் சுத்தமாகவும் தத்ரூபமாகவுமிருக்கும். ஒவ்வொரு மெஷினுடனும் 150 அடி பிலிமும் எலக்டிரிக் சாமான்களும் அனுப்பப்படும். தனி பிலிம் 150 அடி சுருள் ரூ. 2 தான்.

JOTHI & Co.
Post B.x No 1224, Madras-

## வலி உடனே ஒழியும்

ஆட்மென்ஸ் ஸைப்ரஸ் ஸால்வ் (ரிஜிஸ்டர்ட்)
(பெயின் பாம்)



அற்புதமான பலன்; தலைவலி, . கீல் பிடிப்பு முதலிய எதுவாயினும் . சரி, இதைத் தடவினுல் உடனே சௌக்கியமேற்படும். இன்றே வாங்கிப்பாருங்கள்; பிறகு இதில்லாமலிருக்கமாட்டீர்கள். விலை புட்டி 1-க்கு ரூ. 1. வி. பி. செலவு தனி. 2 அணு ஸ்டாம்பனுப்பினுல் சாம்பிள் கிடைக்கும்.

மொத்த ஏஜண்டுகள்:
The Anglo Indian Drug & Chemical Co., Bombay 2.

Tele:—"SIMILICURE" Box 643 CAL

வெளிவந்துவிட்டன!

## ஹோமியோ புத்தகங்கள்

ஹோமியோ வைத்திய முறை
தத்துவம்

தேவங்குப்பதிப்பு விலை ரூ. 1 தான்.

M. BHATTACHARYYA & Co.,
Economic Pharmacy, 84, Clive Street, CALCUTTA.

## "குஜராத்சமாச்சார்" (தினப் பதிப்பு)
## "பிரஜாபந்து" (வாரப் பதிப்பு)

[1898-ல் ஸ்தாபிக்கப்பட்டவை]

குஜராத்தில் பிராபல்யம் வாய்ந்தவை. ஆமதாபாத்தினின்று பிரசுரிக்கப்படுபவை.

குஜராத்தில் உங்கள் வியாபாரம் பெருக வேண்டுமானல்
இப்பத்திரிகைகளில் விளம்பரஞ் செய்யுங்கள்.
ஆங்கிலத்திலேயே கடிதங்கள் எழுதவேண்டும்.

Manager. Gujarat Samachar & Praja Bhandhu
AHMEDABAD

வஜ்ர சரீரத்தை தருவது
## நர்வினஸ் (தங்கம் சேர்ந்தது)

**NERVINUS**
**(WITH GOLD)**
*Your only Chance.*



**The Best Tonic of the Day**

இதில்தான் குணமாக வேண்டும் சிறந்த பல விருதகி டானிக்

இதை உபயோகித்து ஆண்மையும் ஊக்கமும் பெறுங்கள்.

டாக்டர் ஏ. பிரசயய நாயுடு. வைத்திய உத்தியோகஸ்தர் —நர்வினஸ் (தங்கம் சேர்ந்தது) தான் சகல ரோகங்களுக்கும் கை கண்ட ஔஷதம்.

டாக்டர் என் மாசி, ரெயில்வே ஆஸ்பத்திரி, ஆமதாபாத்:— மற்ற நிவாரணிகள் பயனடையாத நிலைமையில் இது விசேஷ குணமுடைகிறது.

டாக்டர் என் ஸி டட். சாஸ்டரி துன்ஸம்பட்டா. வங்காளம்- எனக்கு அற்புதபலனளித்தது. டாக்டர் ஆர் என் கோஷ் மஹிஜர்:- கடுமையான நோய்களையும் மாயமாக குணப்படுத்தியது; வெளிப்புறத்தில கஸ்தூரி லினமெண்டுடன் உபயோகித்தால் நீங்கள் புருஷ சக்தி ததும்பி நிற்பீர்கள். நர்வினஸ் - 1 மாத உபயோகத்திற்கு புட்டி 1 க்கு ரூ. 5 லினமெண்ட் ரூ. 2-8. இரண்டும் சேர்ந்து ரூ. 7. வி. பி. சார்ஜ் தனி. ஆர்டர்களும் கடிதங்களும ஆங்கிலத்தில் எழுதுக.

BEHAR CHEMICAL WOKKS. BHAGALPUR

ஸ்டாக்கிஸ்டுகள்:
அப்பர் & கம்பெனி. & தாரா & கம்பெனி, மதராஸ்




## பால் பொடியும் மோரும்

(காசினி எழுதியது)

* * * எங்கள் பக்கத் தாத்து மாட்டுப்பெண் நேற்று எங்கள் ஆத்துக்கு வந்திருந்தாள். பல விஷயங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கும் பொழுது, 'ஆடை எடுத்த பால் பொடியைக் கரைத்துக் கொடுப்பதினுல் குழந்தைகள் நன்ருக வளருகிருர்களாம். இதைப் பரீக்ஷித்துப் பார்த்துக் கண்டுபிடித்திருக்கிருர்களாம்—என்று சொன்னுள். பால் பொடியை நானும் சாதாரணமாகப் பார்த்தும் இருக்கிறேன்; உபயோகித்தும் இருக்கிறேன். எனக்கு மட்டும், அது எவ்வளவு நேர்த்தியாகத் தயாரிக்கப்பட்டிருந்தபோதிலும், கறந்த பாலில் உள்ள ஒருவித மணத்திற்குப் பதிலாக, எதோ வாஸனை வருவதாகவே தோன்றுகிறது. அது எப்படியாஞலும், ஆடை எடுத்த பொடி என்ருல் என்ன? ஆடை உள்ள பாலைவிடக் குழந்தைகளுக்கு இந்தப் பால் பொடி நல்லதா? இதில் வேறு எதாவது சத்துக் கலக்கிருர்களா? இதை எல்லாம் பற்றி விவரமாக எழுது. குழந்தைகளுக்குப் புதிதாகக் கறந்த பாலைவிட, இந்தப் பால் பொடி சிரேஷ்டமானதா? இது புதிய நாகரீகமா? எல்லாவற்றிற்கும் உன்னுடைய விவரமானபதிலை எதிர்பார்க்கிறேன்' என்று நீ எழுதியிருக்கிருய்.

இது விஷயமாக ஒரு தினசரிப் பத்திரிகையில் சில வாரங்களுக்கு முன் ஒரு குறிப்பு வந்திருந்தது. ஒரு பள்ளியில் சில குழந்தைகளுக்கு எடு எடுத்துத் தயாரிக்கப்பட்ட பால் பொடியினுல் செய்த பாலை, அவர்களுடைய தினசரி உணவுடன் கொடுத்தார்களாம். பால் கொடுத்த குழந்தைகள் பால் கொடுக்கப்படாத குழந்தைகளைவிட, நன்ருக வளர்ந்தார்களாம். இந்தப் பால் பொடி ஆடை எடுக்கப்படாத பொடியைவிட விலை சரசமானது. மேல்நாடுகளில். தயாரிக்கப்பட்டது.

குழந்தைகளுக்குப் புதிதாகக் கறந்த பாலைவிட சிரேஷ்டமான ஆகாரம் கிடையாது. இது கிடைக்காவிட்டால்தானே பால்பொடியைத் தேட வேண்டும்? ஏழைக் குழந்தைகளுக்குத் தினப்படி ஆகாரத்துடன் பால் கொடுக்கும்படியான சக்தி பெற்ருேர்களுக்கு இல்லாததினுல், இவர்கள் வளர்ச்சி குன்றுகிறது; பாலைப் பள்ளியில் இலவசமாகக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வதினுல், சரீரவளர்ச்சியினுல் உண்



வைத்யரத்னம் பண்டித எம். துரைஸ்வாமி அய்யங்கார் குமாரி ரங்கம்மாளுக்கும், சென்னை அட்வகேட் ஸ்ரீமான் கே. வெங்கடராகவாச்சாரியார் குமாரன் வீரராகவனுக்கும் சமீபத்தில் விவாகம் நடந்தது.




கூந்தல் மட்டுமெல்லாமல், அழகிய சுருண்ட முன் நெற்றி மயிரையும், காதோரங்களிலும், புறங்கழுத்திலுமுள்ளஸூக்ஷ்மமான கேசராசிகளையும் வளரச் செய்வதால் கேசவர்த்தினி, மனம் கவரும் ஸௌந்தாயத்தை மாதர் முகத்துக்குத் தருகிறது. கூந்தல் அழகுக்கும் முக அழகுக்கும் ஒருங்கே காரணமாவது

## கேசவர்த்தினி

ஒன்றே.

மாத உபயோகத்துக்கும் போதுமான புட்டி விலை அண 12.

மேற்செலவு வேறு.

தயாரிப்பவர்:— தென் இந்திய ரஸாயனசாலை, மயிலாப்பூர், சென்னை.



## நவீன நாகரீக புடவைகள்

கண்ணிற்கினிய காக்ஷி !

மனதிற்குகந்த மகிழ்ச்சி !

மிகவும் அழகான கரைகளுடன் பச்சை நீலம் கருப்பு சிகப்பு மஞ்சள் கலர்களில் வழவழப்பும் அழுத்தமும் உறுதியுமான **புத்த புதுமாதிரி புடவைகள்** விதம் விதமான ரகங்களில் ஏராளமாயிருக்கின்றன. உங்களுக்கு இஷ்டமான பெயரை அதற்குக் கொடுக்கலாம்.

இன்னும் பலவிதமான பட்டு பருத்தி புடவைகளும் ஜாகெட் துணிகளும் குழந்தைகளுக்கு வேண்டிய சொக்காய்களும் ஆடவர்களுக்குகந்த சகலவிதமான உடை ஆடைகளும் ஏராளமாயிருக்கின்றன. உங்கள் தேவையை **வைட் ஷாப்பில்** வாங்கி ஆனந்தமடையுங்கள்.

விலைகள் மிகவும் மலிவு.

**கேவல்ராம்ஸ்**

9-13, ரட்டான் பஜார், மதராஸ்.





**ஸ்திரீகள் ஏன் இந்த க்ரீம்களை உபயோகிக்கின்றனர் என்று இப்பொழுது எனக்குத் தெரியும்.**

......ஆஹா என் வசீகரத்தை என்னவென்பேன்

டாகெட் & ராம்ஸ்டெல்ஸ் சிறந்த வானிஷிங் க்ரீமை நாள்தோறும் தவருமல் உபயோகித்து வந்தால், உங்கள் முகவசீகரத்திற்கு ஏற்படும் சோபையைக் கண்டு நீங்களே வெகுவாக ஆச்சரியப்படுவீர்கள். கொஞ்சம் எடுத்து உங்கள் முகத்தில் பூசுங்கள் சருமம் வெல்வெட் போல் மிருதுவாகும்...... முகத்தில் ஏதேனும் சொட்டைகளிருந்தால் அவை மறந்து விடும்........ எவ்வளவ அழகு உண்டாகிறது தெரியுமா?........ஒரு தடவை உபயோகித்தால் பிறகு வேறு எதுவும் பிடிக்காது.



டாகும் மன உற்சாகத்துடன் படிப்பார்கள் என்று இவ்விதம் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்கிறார்கள் இந்தப்பாலை எவ்விதம் குறைந்த விலைக்கு வாங்கலாம்? ஆடை எடுத்த பால்பொடி விலை மட்டாக இருப்பதுடன், வளர்ச்சிக்கும் ஏதுவாகவும் இருக்கிறது என்று எழுதி இருந்ததாக நினைவிருக்கிறது.

கடைந்த மோரும் இதே தன்மையைச் செய்யும். ஏடு எடுக்கப்பட்ட பால்பொடியும், வெண்ணெய் எடுக்கப்பட்ட மோரும் ஒரே சத்து உள்ளது தான். பால்பொடியைவிட, இதுமலிவானதுஎன்றுமற்றொருவர் எழுதியிருந்தார். இது ஒன்றும் நவீன நாகரீகத்தைச் சேர்ந்ததில்லை. கூடியமட்டில் புதிதாகக் கறந்த பாலைக் குழந்தைகளுக்குக் கொடுப்பதே நாகரீகம்; ஆரோக்கியம். குழந்தைகள் வளர்ச்சிக்கு இதுவே நல்ல ஆகாரம். இந்த விஷயத்தைப்பற்றி நீ என் விசாரித்தாய் என்பதுதான் எனக்குப் புரியவில்லை.

* * * *

### வேலு தறிப் புடவைகள்

'லுங்கி' மோஸ்தர் புடவைகளுக்குப் பதிலாக வேலுதறிப் புடவைகள் இப்பொழுது புதிய மோசாகக் கிளம்பி இருக்கிறது. முதலில் துப்பட்டி மாதிரியில் கட்டிக்கொண்டீர்கள். இப்பொழுது ஜமக்காளம் மாதிரியில் கட்டிக்கொள்ளுகிறீர்கள். அடுத்தாப்போல் என்ன?' என்று என்னுடைய அத்தை கேட்டாள்.

இந்த வேலுதறிகள் சாதாரண வேலுதறி மாதிரியில் மெல்லிய வலைவான கோடுகளாக இருக்கவில்லை. மூன்று விரல் நான்கு விரல் அகலமான பச்சை, மஞ்சள், நீலம் முதலிய பட்டைகளாக இருக்கின்றன. இதில் நடுவில், மற்றொரு மெல்லிய கோடு இந்த வர்ணத்திற்கு ஏற்ற மாதிரியில், இதன் மேலேயே போட்டும் இருக்கிறது. இதனால் தான் என்னுடைய அத்தை இதை ஜமக்காளம் மோஸ்தர் என்றாள். துணிப் புடவைகள் தான், இந்த மாதிரியில், பல அழகிய கரைகளுடன், அநேக வர்ணங்களில், மலிவான விலைக்கு விற்கப்படுகின்றன. பட்டிலும் இந்த மோஸ்தர் புடவைகள் இப்பொழுது போடுகிறார்கள். லேடி சின்னையாவின் மகள் போனவாரம் ஒரு ஆறு கஜம் புடவை வாங்கினாள்.

இதில் கறுப்பும், ஆழ்ந்த பச்சையும் மாறி மாறிப் போட்டிருந்தது. ஒரு விரல் அகலத்திற்கு, வேலுதறி மாதிரியில் நீளவாட்டத்தில் ஒரு கறுப்புக் கோடு, அடுத்தாப்போல் ஒரு ஆழ்ந்த பச்சைக் கோடு என்று போட்டிருந்தது. பச்சைக் கோடும், கறுப்புக் கோடும் விரல் அகலம் இருந்தது. ஒவ்வொரு கோட்டின் நடுவிலும், நீளவாட்டத்திலேயே, ஒரு மெல்லிய மஞ்சள் கோடு போட்டிருந்தது. நாலு விரல் அகலத்திற்கு மிகவும் அழகான அரக்குக் கரை. இதில் இரண்டு வரிசை சரிகை மொக்குக்களும், இதற்கு மேல் இரண்டு சரிகைக் கோடுகளும் போட்டிருந்தது. ஒரு பக்கம் தலைப்பு, முக்கால் முழம் அரக்குத் தலைப்பு. இதில் சில சரிகைக் கோடுகள் போட்டிருந்தன. மற்றொரு பக்கத்திற்குப் புனைத் தலைப்புப் போட்டிருந்தது. புடவை நெசவு மிகவும் அழுத்தமாகவும், வழவழப்பாகவும், உறுதியாகவும் இருந்தது. புடவையின் விலை இருபத்தி ஐந்து ரூபாய்கள் ஆச்சுது. எங்களுக்கு எல்லாம் புடவை மிகவும் அழகாக இருப்பதாகவே தோன்றிற்று. லேடி சின்னையா மட்டும், "புடவை பளபளப்பாகவே இல்லையே! எண்ணெயில் முக்கி எடுத்த மாதிரியில் இருக்கிறதே! இந்த நாள்களில் புடவைகளின் விலை எவ்வளவோ மலிந்து இருக்கிறதே? இதே விலைக்கு "ஜில்' என்று ஒரு புடவை வாங்கலாமே!" என்றெல்லாம் சொன்னாள். 'அம்மாவுக்கு இந்தப் புடவை என் பிடிக்கவில்லை? நன்றாகத்தானே இருக்கு?' என்று அவள் பெண் சொன்னதற்கு, 'எங்களுக்கும் நன்றாக இருப்பதாகவே தான் தோன்றுகிறது' என்று நாங்கள் சொன்னோம். மற்றைய விவரங்கள் அடுத்த கடிதத்தில்.



திருச்சி ஸ்திரீகள் சங்கத்தின் வருஷாந்திரக் கொண்டாட்டத்தின்போது எடுத்த படம்.


## ரஞ்சிதமான துணிமணிகள்

எம்மிடம் ஏராளமாக இருக்கின்றன. எல்லாம் மனதிற்கு உகந்த ரகங்கள்; வந்து பாருங்கள்; வேண்டியதை மகிழ்வுடன் தெரிந்தெடுங்கள்.

**என். வி. பாலுசாமி அய்யர் & ஸன்,**

—மூலைக் கடை—

நைனியப்ப நாயக்கன் வீதி, மதராஸ்.





**இதைத் தடுத்துக் கொண்டிருக்கலாம்**

# மலேரியா

**ஏற்படாமல்**

**உங்கள் தேகத்தைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்**




தேகத்தில் உலோக சத்துக்கள் குறைவாக இருப்பதே மலேரியா முதலிய ஜுரங்கள் ஏற்படுவதற்குக் காரணம். சோர்வு, ஹிருதய மெலிவு, நரம்புக்கோளாறு முதலியவை உங்கள் தேகத்தில் எதிர்ப்புச் சக்தி குறைந்திருப்பதன் அறிகுறிகள்.

கல்ஸானா மாத்திரைகளைத் தவறாமல் சாப்பிட்டு மேற்படி கடுமையான நோய்களைத் தடுத்துக் கொள்ளுங்கள். கல்ஸானா தேகத்தில் உலோக சத்துக்களை நிரப்புகிறது; இரத்த கோசங்களும் விருத்தியடைகின்றன. மலேரியா, சருமச் சிராய்ப்புகள் முதலிய தொத்து நோய்களை எதிர்த்து நிற்கும் சக்தியை வளர்க்கிறது.

**மிஸ்டர். ஜே. இ. ஜே: உதகமண்டலம், இந்தியா, எழுதுவதாவது:**

"நீண்டகாலம் நான் பலவீனத்தால் கஷ்டப்பட்டேன். கல்ஸானா உபயோகித்ததால் ஜீவசக்தியும், ஆரோக்கியமும் அடைந்தேன்."

தாமதம் வேண்டாம். உடனே உங்களுக்கருகிலுள்ள மருந்து வியாபாரியிடமிருந்து ஒரு புட்டி கல்ஸானா மாத்திரைகளை வாங்கிக் கொள்க. அது நீங்கள் ஆரோக்கியமாக இருக்க உதவுகிறது.

# Kalzana

**மேலான ஆரோக்யத்திற்கான உலோக உணவு.**

**கைபடாமல் தயாரிக்கப்படுவது.**

அசல் புளு ஜாகர்

**வைரங்கள்**

இயற்கை முறையில் உற்பத்தி செய்யப்பட்ட (CULTURE)

**நல்முத்துக்கள்**

கிடைக்குமிடம்:

சிமன்லால் பிரதாப்சந்த்

175, சைனு பஜார். மதராஸ்



மியூச்சுவல் அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.

தலைமை ஆபீஸ்:

187, மவுண்ட்ரோட் மதராஸ்.

நவீன, சாஸ்திர பூர்வமான தாராளத் தன்மை கொண்ட பாலிஸி ஒப்பந்தங்கள் எம்மிடம் கிடைக்கும். எல்லோரையும் திருப்தி செய்விப்பவை. குறைந்த பிரீமிய விகிதங்கள்.

டி. வி. ராமமூர்த்தி,

செக்ரிடரி



**CONTRACEPTIVE.**

'Rahat' is an unfailing contraceptive, a three-day use of which insures lifelong relief from the misery of conception without in any way harming the physique or disturbing menstrual regularity. Guarantee form accompanies every order.

Price Rs. 5-8; foreign, Shillings 10.

**Vilasvati:** excellent retentive tonic pills.

Price Re. 1-6, foreign, Shillings 2-6.

**Rejvati:** recontinues stopped menses, regularising monthly course too.

Price Rs. 5-8, foreign, Shillings 10.

**Dr. S. H. KHAN,**

S Tapia Mansion, Erskin Road, BOMBAY 3.






ஜகத்ரக்ஷக ஸ்ரீ ஷண்முக யந்திரம 125,6600. ஜனங்கள் போற்றுவது பரீக்ஷை வெற்றி, ஜீவன விருத்தி. சொற்பன மிரட்சி, சத்துரு அடக்கம், வழக்கு ஜெயம், புத்திர விருத்தி, குடும்ப ஒற்றுமை, நோய்பேய் ஒழிதல், யந்திரம் 1க்கு. ரூ 2. மாந்திரீக மருத்துவ ஆபீஸ், P.O. S.I.R. சென்னை.


## பர்மா

(26-ம் பக்கத் தொடர்ச்சி)

டா முதலியன. ஒரு கோவிலைக் கட்டுபவனுக்குப் பாயாடாகா என்று பெயர். அவனை அழைக்கும்போது அப்பெயரிட்டுத்தான் அழைக்கவேண்டும்.

ரங்கூனிலிருந்து 60 மைல் தூரமுள்ள பெகுவில் ஸ்ரீரங்கம் ரங்கனுதனைப்போல் சயனித்துள்ள ஒரு புத்த சிலை இருக்கிறது. அதன் நீளம் 180 அடி. தரையிலிருந்து தோளின் உச்சி 46 அடி உயரமிருக்கிறது. 1930 வருஷம் மே மாதம் 5-ந் தேதி ஏற்பட்ட ஒரு பூகம்பத்தில் பெகுநகரம் மிக்க சேதமுற்றது. சுமார் 1000 ஜனங்கள் இறந்தனர். 5000 ஜனங்கள் தங்க இடமின்றித் தவித்தனர்.

சில கோவில்களில் புத்தருடைய சில பாகங்கள் இருப்பதாகக் கூறுகின்றனர். உதாரணமாக ஷ்வீடாகன் பகோடாவில் புத்தருடைய தலைமயிரில் எட்டு இருக்கின்றன. இம்மயிர்களை புத்தர், பா, டாபா என்னும் பெயர்கொண்ட இரு சகோதரர்களுக்கு அளித்தார் என்று பர்மியர் புராணத்திலிருந்து தெரிகிறது. கி. மு. 500 வருஷங்களுக்கு முன்பு இச்சகோதரர்கள் ஷ்வீடாகன் பகோடாவைக் கட்டினுர்கள். இதன் கோபுரம் 370 அடி உயரமிருக்கிறது. கோபுரம் முழுவதும் தங்கக் கில்ட் அடிக்கப்பட்டு இருக்கிறது. கோபுரத்து உச்சியிலுள்ள ஒரு குடையே 50,000 பவுன் மதிப்புள்ளது. இது மின்டன் மின் என்னும் ஒரு பர்மிய அரசனுல் செய்யப்பட்டது. இப்போது கோபுரத்தைச் சுற்றி அநேக மின்சார விளக்குகள் போட்டிருக்கின்றனர். ஆகையால், இரவானுலும் சரி; பகலானுலும் சரி; கோபுரத்தை வெகு தூரத்திலிருந்து நாம் காணலாம். இக்கோவிலில், அநேக புத்த சிலைகள் இருக்கின்றன.

எப்ரல் மாதத்தில் புத்த வருஷப் பிறப்பின்று கோவில்களில் பெரிய உற்சவம் நடக்கும். அப்போது அநேக கோவில்களில் தெப்ப உற்சவம் நடக்கும். ப்ரோம் ஜில்லாவில் பாங்டே என்னும் ஊரில் செப்டம்பர் அல்லது ஆகஸ்டு மாதத்தில் தந்தப்பல் உற்சவமென்று ஒன்று நடக்கும். அப்போது, புத்தருடைய பல்லை சிலோனில் (கண்டியில்) ஊர்வலம் எடுத்துச் செல்வது போல் இங்கும் எடுத்துச் செல்வார்கள். இந்த உற்சவத்திற்கு பர்மாவின் எல்லாப் பாகங்களிலிருந்தும், இந்துசைனுவிலிருந்தும் அநேக யாத்ரீகள் வருகின்றனர்.

இந்த உற்சவம் பர்மிய மாதமாகிய டாதலின் என்னும் மாதத்தில் சுக்கில பக்ஷத்துத் துவாதசியின்று ஆரம்பமாகும். மறுநாள் அந்தப் பல்லிற்கு அபிஷேகம் முதலியவை செய்வித்து ஒரு யானையின்மீது ஒரு தங்க அம்பாரியில் ஒரு வெள்ளிப் பெட்டியில் வைத்து ஊர்வலமாகச் செல்வார்கள். இம்மாதிரி பௌர்ணமிவரையில் உற்சவம் நடக்கும். இந்தப் பல் பர்மாவிற்கு எவ்விதம் வந்தது என்று கவனிப்போம்.

புத்தர்களின் மிக்க சிரேஷ்டமான புராணமாகிய 'மஹா பரிணிபான சூத்ரம்' என்பதில் கீழ்வரும் வரலாறு காணப்படுகின்றது. 25 நூற்றுண்டுகளுக்கு முன், குசி நகரத்தில், கௌதம புத்தருடைய கிரியை நடந்தபோது, அவருடைய 4 பற்களும், சில எலும்புகளும், சாம்பலாகாமலிருந்தன. இந்த நான்கு பற்களிலொன்று த்யாகியாமின் என்னும் ஒரு தேவ புருஷனுல் சுவர்க்கத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. ஒன்று நாகர்களின் அரசனுல் எடுத்துச் செல்லப்பட்டது. மூன்றுவது காந்தார தேசத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. நான்காவதை கலிங்க தேசத்து அரசன் எடுத்துச் சென்றுன். கலிங்க தேசத்தில் (தற்காலத்து ஒரிசா) அது 800 வருஷம் ஒரு கோவிலில் வைத்துப் பூஜிக்கப்பட்டு வந்தது. அதன் பிறகு புத்த மதம் க்ஷீணதசை அடைய ஆரம்பிக்கவே, கலிங்கநாட்டுக் கடைசி அரசன், இனி அது கலிங்க நாட்டிலிருந்தால் ஜாக்கிரதையாயிராதென்று பயந்து அதைச் சிங்கள தேசத்திற்கு அனுப்பிவிட்டான். கலிங்க அரசனின் பெண்ணுன ஹேமமாலினி என்பவள் அதைத் தன் சடையில் ஒளித்து, கால்நடையாக கலிங்கத்திலிருந்து சிங்களம் வந்து சேர்ந்தாள். சிங்கள அரசனுன மேகவண்ணனென்பவன் அனுராதபுரத்தில் ஒருபெரிய ஸ்தூபமெழுப்பி அதில் இந்தப் பல்லை ஜாக்கிரதையாக வைத்துவிட்டான்.

பாங்டேயில் காணப்படும் சில புராணங்களிலிருந்து, யூம்யா என்னும் ஒரு பர்மியரின் வேண்டுகோளின்மீது, இப்பல்லைப்போலவே ஒரு போலிப் பல் 3000 ரூபாய் செலவிட்டுச் செய்யப்பட்டதென்றும், வெகுகாலம் இரு பற்களும் கண்டியிலிருந்தனவென்றும் தெரிகிறது. சுமார் கி. பி. 1900-ல் இந்தப் போலிப் பல் கண்டியிலிருந்து பாங்டேக்குக் கொண்டுவரப்பட்டது. அதிலிருந்து வருஷா வருஷம் இவ்வுற்சவம் நடத்தப்பட்டு வருகிறது. பர்மாவிற்குக்கொண்டு வரப்பட்ட பல்லும் உண்மைப் பல்லும் ஒன்றுய் வெகுநாள் வைக்கப்பட்டு இருந்ததால், புத்தருடைய உண்மை பல்லிற்கு உள்ள சக்தி இதற்கும் உண்டு என்று பர்மியர்களால் கருதப்படுகின்றது.





குழந்தைகளின் நோயெனும் இருளை நீக்க வந்துள்ள

**பாஸ்கரனின் வரப்ரசாதம்**

நோயினுல் வருத்தமுறும் குழந்தைகளை நோயினின்றும் மீட்டு ஆரோக்யத்தைப் பெருகச் செய்வது "பால பாஸ்கர"

குழந்தைகளைப் பீடித்து வருத்தமுறச் செய்யும் வியாதிகளில் ஈரல் குலைக்கட்டி என்னும் வியாதிகளே தக்க சிகிச்சையின்மையால் உயிருக்கே கேடுவிளைவிக்கின்றன. இவ்வியாதிகளை எந்நிலைமையிலும் தடுத்து குணத்தைக் கொடுக்க வல்லதென நிரூபிக்கப்பட்டுள்ள ஔஷதம் "பால பாஸ்கர" இதர ஔஷதங்களால் பயனற்றுப்போன விடங்களில் ஆச்சாயத்துடன் பலனைத் தருவதெனப் போற்றப்படுவது.

**பால பாஸ்கர**

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டிகளுக்கு

**அற்புத நிவாரணி.**

**ஆயுர்வேதாஸ்ரமம்,**

151 கோவிந்தப்ப நாய்க்கன் வீதி, தபால் பெட்டி 287, மதராஸ்.

ஏஜண்டு:

மெஸர்ஸ்: அமர்சந்த், சோபா சந்த். கெமிஸ்ட்ஸ், மதராஸ்.



**SAVE YOUR EYE**



From ALL TROUBLES, even Cataract.

Try 'SELLER'S LOTUS HONEY'

—The nature's own remedy. Absolutel safe. Sure, world-wide reputed an Tested. At all Chemists. Literature Fre

L. H. Seller, Samta, Bengal

Beware of imitation—Insist on SELLER'S



**எதிர்கால சோதிடம்**

ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன் எழுத ரூ. 2. ஆருடம் கேள்வி 5-க்கு ரூ. 1. பலன் சரியில்லாவிடில் பணம் வாபீஸ். ஜாதகம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை.

அருட்பிரகாசர் சோதிடாலயம்

பர்மாவில் ஆண், பெண், குழந்தைகள் முதலிய சகலரும் செரூட் என்னும் ஒரு வித நீண்ட சுருட்டைப் பிடிப்பார்கள். சில சுருட்டுகள் 1½ அடி நீளமும் 1½ அங்குல அகலமும் இருக்கும்.

உள்நாட்டில் இன்றைக்கும் பெரிய பட்டணங்களில் வாராவாரம் சந்தை நடக்கிறது. கடைகளில் சாமான் விற்பது அநேகமாய் பர்மியஸ்திரீகள் தான். புருஷர்கள் அவ்வளவு சுறுசுறுப்புள்ளவர்களன்று.

இச்சந்தைகளுக்குப் படாங் கரீன் முதலிய அநேக மலையில் வசிக்கும் ஜனங்கள் வருவார்கள். படாங் ஸ்திரீகள், கழுத்தில் ஒன்றன்மேல் ஒன்றாக அநேக பித்தளை வளையங்களை அணிவார்கள். சிறிய பெண்ணாயிருக்கும்போதே இதைப் போட்டுவிடுவார்கள். பிறகு வயது முதிர்ந்து வளரும்போது ஒன்றன்பின் ஒன்றாய் அதிகரித்துக் கொண்டே வருவார்கள். சாதாரணமாக 21 வளையங்களுக்குமேல் அணிவதில்லை. அவைகளின் எடை சுமார் 50 பவுண்டுகள் இருக்கும். சிலர் கழுத்தில் மாத்திரமன்றி கைகளிலும், கால்களிலும் வளையங்களைப் பூட்டிக்கொள்கின்றனர்.

கரீன் ஸ்திரீகள் சிகப்புப் பாவாடைகளும் மேலிற்கு ஒரு சால்வையும், பிரம்பினாலான வளையங்களை முழங்காலிலும் இடுப்பி...லும் அணிகிறார்கள். க...ன் தேசத்தவர்களில் ஒரு சிறுவனுக்கு 18 வயது ஆனவுடன், கிராமத்திற்கு வெளியிலுள்ள பிரமசாரிகள் வசிக்கும் ஒரு இடத்திற்குப் போய்விட வேண்டும். அவனுக்கு மணமாகும் வரையிலும் அவன் கிராமத்திற்குள் பிரவேசிக்கக் கூடாது. பர்மியர்களில் ஸ்திரீகளுக்கு ஸ்வதந்திரம் அதிகம். அவள் தனக்கு வேண்டுபவனை மணம் புரிந்துகொள்ளலாம். வேண்டாது போனால் 4 பஞ்சாயத்தார்கள் எதிரில் இப்புருஷன் எனக்கு வேண்டாமென்றால் போதும்; விவாகம் ரத்தாய் விடும். மறுபடியும் எத்தனை முறை வேண்டுமானாலும் மணக்கலாம். விவாகம் ரத்தான பிறகு, அவர்கள் இருவர்களும் சேர்ந்து சம்பாதித்த பொருளில் பாதி அவளுக்குச் சொந்தமானது. வயலில் வேலை செய்வது, மற்ற வேலைகள் செய்வது எல்லாம் ஸ்திரீதான். புருஷர்கள் சுருட்டைப் பிடித்துக்கொண்டு வீண்காலம் போக்குவார்கள்.

பர்மிய சிறுவர்கள் ஒரு புது மாதிரியான கால் பந்தாட்டம் ஆடுவார்கள். அகற்று சின்லன் என்று பெயர். இதில் 5,6 பேர்கள் விளையாடலாம். இதில் செய்ய வேண்டியது என்னவென்றால், பந்து தரையில் விழாதபடி, கையைத் தவிர வேறு எந்த பாகத்தினாலாவது அதைத் தட்ட வேண்டும். ...ன் முதலில் காலால் உயர உதைப்பான். அது கீழே விழும்சமயத்தில் அதைத் தலையினாலாவது தோளினாலாவது தடுப்பான், அல்லது முழங்காலினால் தடுப்பான். இம்மாதிரியே பந்து ஒருவனிடமிருந்து மற்றொருவனிடம்செல்லும்.

பர்மாவிலுள்ள ஒவ்வொரு கிராமத்திற்கும் வெளியே ஒரு புத்தமடம் உண்டு. அதில் வசிக்கும் புத்தசந்நியாசிகளுக்கு பொங்கி என்றுபெயர். அவர்கள் காவி வஸ்திர மணிந்திருப்பார்கள். கிராமத்திலுள்ள சிறுவர் சிறுமிகளுக்குப் படிப்புச் சொல்லித்தருவது அவர்களின் வேலையிலொன்று. அவர்கள் பிச்சை எடுத்துத்தான் உண்பார்கள். ஆனால் வீட்டுவாசலில் நின்று சாதம் போடும்படி கேட்கமாட்டார்கள். கீதம் பாடிக்கொண்டு தெருவழியே செல்வார்கள். அவர்களின் குரலைக் கேட்டு வீட்டிலுள்ளவர்கள் தாமே வெளிவந்து பிச்சையிடுவார்கள்.

ஒவ்வொரு பர்மிய சிறுவனும் 7 அல்லது 9 வயதாகும் போது, இம்மடங்களிலொன்றில் சேர்க்கப்படுவான். அவ்வாறு சேர்ப்பதற்கு முன் அவனை நன்றாய் அலங்கரித்து ஊர்வலமாக பல்லக்கில் தூக்கிச் செல்வார்கள். இவ்வாறு மடத்தில் சேர்க்கப்படும் சிறுவன் சில வாரங்கள் வரையிலும் வீடு திரும்பாமல் மடத்திலேயே இருக்கவேண்டும். அவ்வாறு அங்கு இருக்கும்போது தலையை மழுங்க மொட்டையடித்துக்கொண்டு சந்நியாசிகளைப்போல் காவியுடை தரிக்கவேண்டும். அம்மாதிரி இருப்பது அவனுக்குப் பிடித்தால், அவன் அங்கேயே சந்நியாசியாய் இருந்துவிடலாம். இல்லாமற்போனால் சில நாட்கள் கழித்து வீடு திரும்பி விடலாம்.

பர்மாவில் அநேக ஏரிகள் இருக்கின்றன. இவ்வேரிகளில் படகு ஓட்டுபவர்கள் கைகளினால் துடுப்பை அசைக்கமாட்டார்கள். படகின் ஓரத்தில் ஒற்றைக்காலில் நின்று கொண்டு மற்றொரு காலினால் துடுப்பை இழுப்பார்கள்.

பர்மாவில் 1,10,00,000 ஏக்கர்களில் நெல்பயிரிடப்படுகிறது. மண்ணெண்ணெய், பெட்ரோல் முதலியவைகளுக்கும் பர்மா பேர்போனது. சின்ட்வின் நதிக்கரையிலும், ஆற்றின் மணலிலும் தங்கம் அகப்படுகின்றது. தேக்கமரமுள்ள காடுகளில், வெட்டப்பட்ட மரங்களை இழுப்பதற்கும், ஒன்றன்மீது ஒன்று அடுக்குவதற்கும் யானைகளை உபயோகிக்கின்றனர். மேலும் பர்மாவில் வெள்ளி, பிளாடினம் தகரம் முதலிய தாதுவர்க்கங்களும் கிடைக்கின்றன.

இக்கட்டுரை சம்பந்தமான படங்கள் ;தாமஸ் குக் அண்டு கம்பெனியாராலும் நேஷனல் ஜியாக்ராபிகல் மாகஸின் அதிகாரிகளாலும் உதவப்பட்டன.

ESTD. 1893.
சவரன் மாத்து தங்க நகைகளும் முதல் தரமான வைரங்களும் அசல் வெள்ளி சாமான்களும்
உத்திரவாதத்துடன் கிடைக்குமிடம் எங்கே?
வீகம்ஸி சபில்தாஸ் & சன்ஸ்.
50 வருஷங்களாய் பிரக்யாதி பெற்றவர்கள்
112. சைனா பஜார் ரோட்டு மதராஸ்

அபார சக்திவாய்ந்த டானிக்!
S.K.M.
Dr. N. V ஸ்ரீராமாச்சார்லுவின்
—ஸித்தகல்ப—
மகராத்வஜம்
60 மாத்திரை ரூ. 10.
30 மாத்திரை ரூ. 5.
விவரத்திற்கு எழுதவும் :
மதராஸ் ஆயுர்வேதிக் பார்மஸி லிமிடெட்.,
த. பெ. நெ. 151. (ஸ்தாபனம் 1915 ஹு) 289, எஸ்பிளனேட் மதராஸ்.

குணமுற்றது மலிவுற்றது சீர்...கற்றது
...சன்கூட பல்பொடி
ஹைகோர்ட் உரிமை தீர்ப்பு பெற்றது
சாதாரணம் புதுபாக்கெட்
பாலக்ஸ் ஜீஞ்சிப் கூலாயில ஜவரேக் ...மகாதவஜ
சோல ஏஜண்ட்ஸ்: யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தா தெரு, மதராஸ்.
டிப்போ : 42, செட்டி தெரு, கொழும்பு.
201, மொகல் வீதி, ரங்கூன்.



## சாப விமோசனம்

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

வதும் அவர் வாழ்நாளில் நடவாத காரியம். கடன்கொடுப்பதற்கும் ஆள் கிடையாது.

“இந்த நிலம் இருப்பதால் அல்லவோ இவர்கள் நம்மை இப்படி இம்சிக்கிறார்கள். இந்த நிலம் இல்லாவிட்டால், நித்திய கர்மானுஷ்டானங்களைச்சரிவர நாம் செய்வதை ஒருவரும் தடுக்கமாட்டார்கள் அல்லவா? ஆகவே, இந்த நிலம் நமக்கு எதற்கு?” என்றுஇவ்விதமாகச் சிறிது நேரம் அவர் யோசனை செய்தார். திடீரென்று ஒரு முடிவையடைந்து “அப்பாசாமி!” என்று தம்பியைக் கூப்பிட்டார்.

அப்பாசாமி ஐயர் வீட்டினுள் ‘காமரா’ உள்ளே படுத்துக்கொண்டிருந்தார். அன்றைய தினம் தலையாரிகள் அண்ணாவை வழிமறித்து, வாயிதாப்பணம் கேட்கவேண்டும் என்பதை அவர்தானே சொல்லியிருக்கிறார். ஆகவே, இந்த சமாச்சாரம் எல்லாம் அவருக்குத் தெரியும். ஆயினும் இது விபரீதமாக முடியும் என்று அவர் கருதவில்லை. அவர் தூங்கி விழித்தது போலக்காண்பித்து, ‘என் அண்ணா’ என்று பதில் கூறுவதற்குள் நாணாவையர் “அப்பா! இவர்கள் வாயிதாப் பணத்துக்குத் தொந்தரவு செய்கிறார்கள். இந்தப் பத்து வேலி நிலத்தையும் உனக்குக் கொடுத்துவிட்டேன். நீயே வாயிதாவைச் செலுத்திக்கொள். இனி என்னைத் தொந்தரவு செய்யச்சொல்லாதே” என்று கேட்டுக்கொண்டார்.

அப்பாசாமி ஐயர், “என்ன அண்ணா! நிஜமாகவா? அப்படி ஒன்றும் சொல்லாதீர்கள். அதற்கென்ன? நீங்கள் கொடு என்று ஒரு வார்த்தை சொன்னால் நான் வாயிதாவைச் செலுத்திவிட்டுப் பிறகு வாங்கிக் கொள்ளுகிறேன்” என்று சொன்னார். ஆனால் நாணாவையரோ, “நான் சொன்னது சொன்னதுதான். மஹாலிங்கஸ்வாமி அறிய நான் இந்தப் பத்து வேலி நிலத்தையும் உனக்குத் தானம் செய்துவிட்டேன்” என்று கையில் வைத்திருந்த ஜாரியிலிருந்து ஜலத்தைப் பூமியில் வார்த்துவிட்டார். தலையாரிகள் வேறு என்ன செய்ய முடியும்? நாணாவையரை விட்டுவிட்டார்கள். அவரும் ஸ்நானத்துக்குப் போய்விட்டார்.

நாணாவையருக்கு ஐந்து குழந்தைகள். மூன்று பிள்ளைகளும் இரண்டு பெண்களும். மூத்தபிள்ளைக்குப் பதினெட்டு வயது. மூத்தபெண்ணுக்குக் கல்யாணம் செய்யவேண்டும். பாலஸம்ஸாரம். நினைத்த மாத்திரத்தில் இருந்த பத்துவேலி நிலத்தையும் தானம் செய்துவிட்டால் மேலே குடித்தனம் நடத்துவது எப்படி? வீடுதது. ஐயர் மனைவி, “வாயிதா பாக்கிக்கு வேண்டுமானால் இரண்டு வேலியை விற்றுக்கொடுத்தால் போச்சு; இப்படிப் பத்து வேலியையும் தானம் செய்வார்களோ” என்று குமுறிக்கொண்டிருந்தாள். அக்காலத்தில் யார் நிலத்தை வாங்குவார்கள் என்பதை அந்த அம்மாள் யோசிக்கவில்லை.

அம்மாளுக்கு எப்பொழுதுமே மைத்துனனைப்பற்றி ஒருவிதமான அபிப்பிராயம்தான். தங்கள் சொத்தைக் கைப்பற்றுவதற்காக அவர் செய்த சூழ்ச்சியே இது என்பது அம்மாளுடைய பூர்ணமான நம்பிக்கை. நாணாவையர் ஸ்வாமி தரிசனம் செய்துவிட்டு வீடு திரும்பியதும், அம்மாள் மனதுக்குள் குமுறிக்கொண்டிருந்தனவெல்லாம் பீறிட்டுக்கொண்டு வெளிக்கிளம்பின. ஒரே நிமிஷத்தில் ஒரு பெரிய குடும்பத்தைப் பாழ்செய்த தன்னுடைய மைத்துனன் பிள்ளைகுட்டிகளுடன் வாழ்வானாவென்று அந்த அம்மாள்வயிறு எரிந்து கூறினாள். இதைக் கேட்டதுதான் தாமதம், ரௌத்ராகாரமாகக் கோபம் வந்துவிட்டது ஐயருக்கு. தானே மனப்பூர்வமாகத் தம்பியைக் கூப்பிட்டுத் தானம் செய்திருக்கையில் அவன், பேரில் பழியைச் சுமத்தச் சகிப்பாரா?

முதலில் அவர் சிறிது சமாதானம் சொல்லிப்பார்த்தார். அது பயன்படாமற்போகவே, அவரும் இரைந்து கூத்தாடினார். அப்பாசாமி பிள்ளைகுட்டிகளுடன் வாழாவிட்டால், இவள்மட்டும் நிலம் நீர் முதலியவற்றுடன் வாழப் போகிறாளோ என்று பிரதிசாபமும் கொடுத்தார். கடைசியாக இந்தா, “நான் தானம் செய்தது செய்ததுதான். இஷ்டப்பட்டுக் குடித்தனம் செய்வதாயிருந்தால் நான் இங்கே இருக்கிறேன். இல்லாவிட்டால் காசியைப் பார்க்கப்போய்விடுகிறேன்” என்று தம் தீர்மானத்தைத்தெரிவித்துவிட்டார். அம்மாள் என்ன செய்வாள் பாவம். புருஷனே தெய்வம் என்று இருக்கும் அவளுக்கு அவரை காசிக்கு விரட்ட எப்படி மனம் துணியும். முன்பு ஒரு தரம் காசியாத்திரை கிளம்பித்தான் அவளைக் கைப்பற்றினார். இப்பொழுது மறுபடியும் காசியாத்திரை கிளம்பிக் குடும்பத்தைக் கலகலக்கவொட்டாமல் தடுக்கவேண்டும் என்று தெய்வத்தை வேண்டிக்கொண்டு அடங்கிவிட்டாள்.

குழந்தாய்! வயிறு எரியும் போது சொல்லும் கடூரச் சொற்களும் மனது குளிர்ந்து இருக்கும்பொழுது செய்யும் ஆசிர்வாதங்களும் அப்படியே பலிக்கும். நாணாவையர் ஸம்சாரம் வயிறு எரிந்து கொடுகள் குடும்பத்தைச் சூழ்ந்து வந்தது. சாபம் ஆசிர்வாதம் முதலியவை ஒரு குடும்பத்தை ஏழு தலைமுறைகளுக்குப் பற்றும் என்பார்கள் பெரியோர்கள். சாபம் விலகுவதற்கு ஒரு பரிஹாரம் செய்யவேண்டும். பல குடுபத்தார்கள், எந்த ஜாதியினராயினும், மனது குளிர்ந்து வாயார வாழ்த்தினால், உங்கள் குடும்பத்தைச் சூழ்ந்துள்ள சாபம் தானே விமோசனம் அடையும். அரை வயிற்றுக் கஞ்சிக்கும் அரை முழத் துணிக்கும் அவதிப்படும் ஹரிஜனங்களுக்குச் செய்யும் சிறிய உதவியையும் அவர்கள் மிகப் பெரியதாக மதித்து வாயார வாழ்த்துவார்கள். அவர்களுக்குச் செய்யும் உதவி உன் குடும்பத்துச் சாபத்தை விமோசனம் அடையச் செய்வதல்லாமல், நாட்டின் நன்மைக்கும் பெரிதும் பயன்படும். அதனாலேதான் நான் ஹரிஜன சேவை செய்யும்படி உன்னை வேண்டிக் கொண்டேன். எத்தனை பேர்கள் இப்பொழுது உன்னை மனமாற வாழ்த்துகிறார்கள் என்பதைக் கவனித்துப் பார்” என்று கூறி முடித்தார்.

சாமா பெரியவரைப் பார்த்து, “சுவாமி! நாணாவையர் குடும்பம் என்னவாயிற்று என்பதைத் தெரிவிக்கவேண்டும்” என்று கேட்டுக்கொண்டான்.

கிழவர், “அவர்கள் இரண்டு மாதங்களுக்கெல்லாம் கிராமத்தைவிட்டுப் போய்விட்டார்கள். அதற்குப் பிறகு அவர்களுக்குச் சொத்து ஏற்படவில்லை. ஆயினும் நிலம் தானம் செய்யப்பட்டதை அறிந்த அரசன், அவர்களுடைய வாழ்க்கைக்கு வேண்டிய ஸௌகரியங்களைச் செய்து கொடுத்தான். நாணாவையர் குடும்பத்தார்கள் சௌக்கியமாகத்தான் வாழ்ந்து வருகிறார்கள்.. அதெல்லாம் இன்னொரு கதை; அதைப்பற்றி வேறொரு சமயம் சொல்லுகிறேன்” என்று கூறிவிட்டுப் போய்விட்டார்.

அவர் போன பிறகுதான் சாமாவுக்கு உண்மை விளங்கியது. கிழவர் நாணாவையர் வம்சத்தைச் சேர்ந்தவரே என்பது நிச்சயம் ஆயிற்று. அதற்குப் பிறகு அவன் அந்தக் கிழவரைத் தேடிக்கொண்டிருக்கிறான். அகப்படவில்லை. நீங்கள் பார்த்தால் வரச்சொல்லுங்களேன்.


## PASSED MATRIC

பம்பாயிலிருந்து மிஸ்டர்.......... எழுதுவதாவது: “நான் மெட்ரிக் பரீக்ஷையில் தேறினேன்; இதற்கு தங்கள் “மூலிகை”யே காரணம். சீனியர் காம்பிரிட்ஜ் பரீட்சைக்காக ஒன்று அனுப்பவும்.”

“திபேத் மூலிகை”யால் கீழ்க்கண்டவை சித்தியாகின்றன; லாமா யோகியின் வரப்பிரசாதம்.



வசீகரன், ஆண் பெண் இரு பாலருக்கும் இடையில் இன்பமயமான காதலை உடனே விளைவிக்கும். இதை அணிபவர் அதன் ஆச்சரிய சக்தியை விரைவில் 2. றிவர். விலை ரூபா 3-8-0. அ வியாபாரமும், தொழிலும்:—நிச்சயமான தொழிலபிவிருத்தியும், இலாபமும்சித்திக்கும். விலைரூ.3-8-0 3. வியாஜ்யங்கள்:—இதன் சக்தியால் நம்பமுடியாத எவ்விதவியாஜ்யங்களும் ஜெயமாகும். விலை ரூ. 3-8-0 4. வியாதிகள் :— முடியாதெனக் கைவிடப்பட்ட சகலவித கொடிய ரோகங்களும் அடியோடு நீங்கும். விலை ரூபா 3-8-0 5. உத்தியோகம்:—வேலையில்லாத் திண்டாட்டத்தில் அவதிப்படும் இளைஞருக்கு அவரவர் ஸ்திதிக்குத் தகுந்தபடி உத்தியோகம் கிடைக்கும். சம்பள உயர்வும் உத்தியோக மேன்மையும் நிச்சயம். விலை ரூ. 3-8-0. 6. பரீக்ஷைகள்:- எவ்விதப் பரீக்ஷைகளிலும் நிச்சயமாய்த் தேறலாம். விலை ரூபா 3-8-0 7. சத்ருக்களை ஜெயித்தல்:—எவ்வளவு அபாயகரமான விரோதிகளும் இதை அணிபவர் முன், முழந்தாளிட்டுப் பணிவர் விலை ரூபா 3-8-0 8. கிரஹ தோஷம்:-எல்லாவிதமான கிரஹ தோஷங்களும் சாந்தியாகும். விலை ரூபா 3-8-0. 9. ஆரோக்யமும், செல்வமும்:—எளிதில் சித்திக்கும். விலை ரூ. 3-8-0.

அறிவிப்பு:—இந்து சாஸ்திரங்களில் நம்பிக்கையுள்ளவர்கள் மாத்திரம் தங்கள் நோக்கம் இன்னதென்பதைக் குறித்து எழுதவும். ஒவ்வொரு நோக்கத்துக்கும் தனிப்பட்ட மூலிகை அவசியம். ஒரு மூலிகையின் விலை ரூபா 3-8-0. தபால் சார்ஜு வேறு ஒரே தடவையில் 3 மூலிகைகள் வாங்கினால் தபால் சார்ஜ் உள்பட ரூ. 9-6-0.

**BIJOYA LODGE, (S.W.)**

P O SALKIA HOWRAH



ஸ்தாபிதம் 1913

சவரன் மாத்து தங்கத்துக்கும், அசல் வெள்ளி சாமான்களுக்கும், மேன்மையான வேலைப்பாட்டுக்கும் உத்திரவாதமுள்ள இடம்

**கரம்சந்த் சபில்தாஸ் & ஸன்**

நகை வியாபாரிகள்

175, சைனபஜார் ரோட் — மதராஸ்.

காட்லாக்குக்கு எழுதவும்.

## ஜோதிஷ மகுடவர்த்தனர்

இந்து மன்னர் சமஸ்தான25-வது தலைமுறை ஜோதிஷர்-பீமகவி-சுகர்-புஜண்டா சாஸ்திர நிபுணர் இப்பூமண்டலப் புகழுரையில் எதிர்கால பலன் கூறுவதில் "உலக சிரேஷ்டர்" என வெற்றி பாமாலையும் தங்க சன்ன தங்களும் பெற்றவர்.



ஜாதகம் லக்கின நக்ஷத்திர ஸ்புடஞ் செய்து பொதுப் பலன் எழுத ரூ. 1. ஒரு தெசைக்கு புக்தி பலன ரூ. 2. அஷ்ட வர்க்கம் ஆயுள்வரை புக்தி பலன் ரூபா7. ஜாதகக் குறிப்பு முன் பணம் ரூபா 4. தேவை) 1 வருட மாதா மாதப் பலன் ரூ. 1-8. கேள்வி 6-க்கு ரூ. 1. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.

புரோபஸர், N. சுப்பிரமணியம்,
நெ. 2, (ஜோதிஷ ஆசிரமம்)
வாலாஜாபாத், S. I. R. சென்னை

## நரைமயிரை அகற்றுங்கள்



உங்களது தலைமயிர் வெகுகாலமாகவோ, மிக அதிகமாகவோ நரைத்திருந்தால் விவலேன் ஹேர் ஆயிலை உபயோகித்தால் நரை நீங்கித் தலைமயிர் கருகருவென்று பழையபடிப் பிரகாசிக்கும். இன்றே விவலேன் எண்ணெயை உபயோகியுங்கள். அதிக நரையில்லாவிடில் சிறியபாட்டில் ரூபா 1-12. நரை முற்றியிருந்தால் பெரிய பாட்டில் ரூ. 3. ஏககாலத்தில் 3 பாட்டில்கள் வாங்கினல் தபால் செலவு இனம்.

சயண்டிபிக் பப்ளிஷிங் கம்பெனி
(மெடிகல் டிபார்ட்மெண்டு S. 15)
பவானிப்பூர், — கல்கத்தா
மதராஸ் ஸ்டாக்கிஸ்டு:—
ஜே. ஹஸாரிமால் & கம்பெனி, 260, சைனபஜார் ரோட்,
ஸப் ஸ்டாக்கிஸ்டு:—
தாதா & கம்பெனி, மருந்து வியாபாரிகள், 52, நைனியப்ப நாயக்கன் தெரு, பி. டி. மதராஸ்.
செகந்தராபாத் ஸ்டாக்கிஸ்டு:—
பரேக் பிரதர்ஸ், ஜம்மா மஸ்ஜித்

## ரூ. 500 இனம்!

### திமிர்குஷ்டமும், வெண்குஷ்டமும்.

உலகக் கியாதி வாய்ந்த எனது மருந்துகளை 15 தினங்களுக்கு உபயோகித்தால் எல்லாவிதமான திமிர் குஷ்டமும், வெண்குஷ்டமும் நிரந்தரமாக நிவர்த்தியாகிவிடும். பற்பல டாக்டர்கள், கவிராஜர்கள், ஹக்கீம்களும் கைவிட்டதனுல்கூட பரவாயில்லை. எனது அற்புத மருந்துகளை உபயோகியுங்கள். பலனில்லை என நிரூபிப்பவருக்கு ரூ. 500 இனம். 7 நாள் மருந்து ரூ. 2—8; 15 நாள் மருந்து ரூ. 4. தபால் செலவு தனி

SRI SWAMI & Co,
Bengal



## உங்கள் குழந்தைக்கு டோங்கரேயின் பாலாம்ருதமும்

சோடுங்கள்.

டோங்கரேயின் பாலாம்ருதம் என்பதென்ன?

1. டோங்கரேயின் பாலாம்ருதம் குழந்தைகளுக்கான ஓர் சிறந்த டானிக்.
2. நீடித்த தொந்தரவான இருமலையும், சாதாரண ஜுரத்தையும் போக்குகிறது.
3. மெலிந்து கிடக்கும் குழந்தைகளுக்கு வலுவூட்டுகிறது.
4. பல் முளைக்கையில் குழந்தைகளுக்கு உதவிசெய்கிறது.

மதராஸ் ஏஜண்டுகள்:

ஏ. பி. பரேக், 268, சைனு பஜார் ரோட்.




பூரா திருப்தியும், ஜயமும் உத்திரவாதமும் செய்யபபடும் விளம்பரப்படி இல்லாவிட்டால் விலை வாபஸ் கொடுக்கப்படும்.

## மாந்திரீக மோதிரம்

இந்த அபூர்வமான மெஸ்மரிஸ் மோதிரம் உயர்ந்த சாமான்களால், ஆச்சர்யப்படத்தக்க மின்சார காந்த சக்திகள் உடையதாய் தயார்செய்யப்பட்டிருக்கிறது.



இந்த மோதிரம் நடந்த காலம், நிகழ்காலம். நடக்கும் காலம் முதலியவைகளை ஒரே நொடியில், மாயா சக்தியால் அறிந்து கொள்ளும் திறமையுடையது. மேலும், இறந்தவர்களுடன் அறிமுகப்படுத்துதல், ஆயிரமைல்களுக்கு அப்பால் இருக்கும் விஷயங்களைத் தெரிந்துகொள்ளுதல், புதையல்களைத்தெரிந்து கொள்ளுதல், நோயாளிகளின் குணத்தை அறிதல், காணமற்போன சாமான்களைக் கண்டுபிடித்தல், முத்திரை போட்ட கவரில் இருக்கும் விஷயங்களைத் தெரிந்து கொள்ளுதல், மறைந்திருக்கும் பொருளைத் தெரிந்து கொள்ளுதல், இரகசியமான கேள்விகளுக்குப் பதில் அறிந்து கொள்ளுதல், இம்மாதிரி ஆயிரக்கணக்கான அபூர்வ விஷயங்களை இந்த மோதிரத்தினுல், ஒரே விநுடியில் பெற்றுவிடலாம். உபயோகிக்கும் முறை மோதிரத்துடன் அனுப்பப்படும்.

விலை ரூ. 2. தபால் கூலி அணு 8.

கடிதப் போக்குவரத்து ஆங்கிலத்தில் கீழ்க்கண்ட விலாசத்துக்குச் செய்யவேண்டும்.

SHARMA TRADING Co., No. 2, ALIGARH CITY.

## கொசு வலைகள்.



பிரத்யேக வலுவான வெள்ளை வலைகளாலானவை. நல்ல தையல். நீடித்துழைப்பவை. வெளுத்த பச்சை, நீலம், சிகப்பு, மஞ்சள் முதலிய பல கலர்களிலும் கிடைக்கும். வெள்ளையா கலரா என்பதைக் குறித்தெழுதுக.

| நீளம் | அகலம் | உயரம் | சாதா | உயர்ந்தது | மேலானது |
|---|---|---|---|---|---|
| அடி | அடி | அடி | ரூ. | ரூ. | ரூ. |
| 6 | 3½ | 3½ | 1-4 | 1-8 | 2-4 |
| 6 | 4 | 4 | 1-8 | 1-12 | 2-6 |
| 6½ | 4½ | 4½ | 1-12 | 2-4 | 2-12 |
| 7 | 5 | 5 | 2-4 | 2-12 | 3-4 |
| 7½ | 6 | 6 | 2-12 | 3-4 | 4-4 |

தபால் செலவு தனி. பாக்கிங் இலவசம். இலவசம் ஏககாலத்தில் மூன்று வலைகள் வாங்குவோருக்கு 6— | வலை ஒன்று இலவசம்.

Bally Mosquito Net Factory,
P. O. Bally Dist. HOWRAH

## இனம்

378 டிசைன் 64 பக்க நகை கேட்லாக்.

பி. கோபாலசுவாமி நாயுடு & சன்ஸ்
பறங்கிமலை P. O. (சென்னை)

"ZANDU"
KESARI JIVAN
THE IDEAL TONIC FOOD
SOLE AGENTS DAMODER & Co.
78. CHINA BAZAAR ROAD MADRAS.




## மாதவிடாய் கோளாறுகள்

அவைகளே பெண்மலட்டிற்கும் காரணம்

ஸ்திரீகளின் வியாதிகளுக்கு வேலன்ஸ் ஸ்திரீ ஸோதரியைவிட சிறந்த ஒளஷதம் வேறில்லை. இது மாதவிடாயைச் சிரமப்படுத்தி, அதிகமாகப் போவதைத் தடுத்து, சூதக பந்தத்தை உடைத்து மாதவிடாய் காலத்தில் ஏற்படும் வயிற்று வலியைப் போக்கி, மலட்டுப்பூச்சிகளைக் கொன்று சந்தான பாக்யத்தை யளிக்கிறது. டாக்டர்களும் இதையே சிபார்சு செய்கின்றனர். பத்தியமில்லை. விலை ரூ 5. பாக்கிங் & தபால் செலவு வேறு.

**வேலன்ஸ் மெடிகல் ஹால்,**
காரணீஸ்வரர் கோயில் தெரு,
மயிலாப்பூர், மதராஸ்.

# ராதா

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

காரியமும் பார்க்கும் சாதாரணமான ஆண்பிள்ளையாயிருந்தாலல்லவா நம்மைப்போலவே எண்ணுவான்? அவன் எண்ணங்களும் கொள்கைகளும் உத்தேசங்களும் இந்தத் தேசத்திலுள்ள பொது ஜனங்களின் க்ஷேமத்தையும் அபிவிர்த்தியையும் நாடிச் செல்கின்றனவேயன்றித் தன் சொந்த வாழ்க்கையைப் பற்றிச் செல்லவில்லை. ஜனாபிமான ஊக்கமும் ஜீவகாருண்யக் கிளர்ச்சியுமே அவன் உள்ளமெல்லாம் நிறைந்திருக்கின்றது. அவன் இந்த நாட்டுப் பொதுஜனங்களுக்கு செய்ய நினைந்திருக்கும் எண்ணற்ற சீர்திருத்த நன்மைகளில், இரண்டு விஷயங்களை மட்டும் அதிமுக்கியமாகக் கருதியிருக்கின்றானாம். அதாவது நமது நாட்டு ஈனஜாதியார்களுக்குக் கல்வியும் உயர்ச்சியும் பெருமையுங் கொடுத்து அவர்களை முன்னிலைக்குக் கொண்டுவர வேண்டுமென்பது ஒரு நோக்கமென்றும்; கேவலமான மிருகங்களுக்குச் சமானமாய் நடத்தப்பட்டுவரும் இந்த நாட்டுப் பெண்களுக்கு, கல்வி, செல்வம், மணம், முதலியவற்றில் ஸர்வஸ்வாதீனமும் கொடுத்து, அவர்களை மேன்மைப்படுத்த வேண்டுமென்பது மற்றொரு நோக்கமென்றும் சொல்கின்றான். ஈனஜாதிகளின் நிலைமையும் பெண்களின் நிலைமையும் சற்றே உயருமானால், நமது நாட்டு நாகரீகமும் தானே உயருமென்பது அவனுடைய சித்தாந்தம். அதற்கு உன் அத்தான் ஒரு உவமையும் கூறினான். அதாவது இத்தேசத்தின் நாகரீகமென்பதே ஒரு தேர் எனவும், அத்தேருக்கு ஈன ஜாதியாரின் உயர்ச்சியொன்று பெண்களின் ஸ்வாதீனம் ஒன்று ஆகியஇரண்டும் இரண்டு சக்கரங்களெனவும், ஆகவே, ஈன ஜாதியாரும் பெண்களும் குறைநீங்கி மேம்பாடடையும் காலம் வரும்வரை அந்த நாகரிகமென்னும் தேர் சற்றேனும் அசைந்து நகராதெனவும்; அவனுடைய ஆசிரியர் ஸ்வாமி ஞானானந்தர் உபதேசம் செய்திருப்பதாய்க் கூறினான். இவ்வுபதேசப்படியே இந்த நாட்டு ஈன ஜாதியாரைத் தன்னுடைய ஒரு கண்ணெனவும் பெண்களையெல்லாம் மற்றொரு கண்ணெனவும் பாவித்து, அவன் இத்தனை பிரசங்கங்களும் மனப்பூர்வமாய்ச் செய்வதாயும், இந்தப் பிரசங்கத் தொழிலைக் கேவலம் டம்பத்தின் பொருட்டேனும் இந்தப் பத்திரிகைத் தொழிலைக் கேவலம் லாபத்தின் பொருட்டேனும் வைத்துக் கொள்ளவில்லையெனவும் உன் அத்தான் சொல்கின்றான். ராதா, இன்னும் கேள். எல்லா மனிதரும் மேல் குலம், கீழ் குலம், ஆண்பால், பெண்பால் என்ற பாரபக்ஷமான வரம்பின்றி ஒருவர்க்கொருவர் ஒழுகுதலே தருமமெனவும், அதுவே சகல தரும சாஸ்திரங்களின் ஸாராம்ஸமெனவும், இன்னும் அதுவே ஒரு தேசத்தின் நாகரிக வளர்ச்சியின் அடிப்படையெனவும் உன் அத்தான் கொண்டிருக்கும் அரும்பெருங் கொள்கையை நான் கேட்டவுடன், என் ராதா, அவன் மனவிசாலத்தை நினைந்து நினைந்து என் உள்ளமெல்லாம் பூரித்தது; என் உடல் புல்லரித்தது; "ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகன் சான்றோன் எனக்கேட்ட தாய்" என்றதுபோல், உன் அத்தானைப் பெற்றெடுக்கத் தவஞ்செய்த என் வயிறெல்லாம் குளிர்ந்து, என் இருபத்தைந்து வருஷத் துன்பங்களையெல்லாம் மறந்தேன். அதுபோலவே நீயும், "மணந்த பொழுதிற் பெரிதுவக்கும் தன் கணவன் சான்றோனெனக் கேட்ட பெண்" என்று கூறி மகிழவேண்டுமென்பது என் பிரார்த்தனை.

ராதா:—(நகைத்து) அத்தை, தாங்கள் கூறிய முதற் குறள் அந்த வள்ளுவ நாயனார் பாடியதென்று எனக்குத் தெரியும். இரண்டாம் குறள் இந்தத் தெற்குத் தோப்பு நாயனார் சொந்தக் குறளோ! நல்லது குறையும் சொல்லி முடியுங்கள்.

கற்ப:—(தானும் நகைத்து) அம்மா, இப்பெருங்கொள்கையை உலகுக்குப் போதித்தலே தன் வாழ்க்கையின் புருஷார்த்தமென்று துவஜம் கட்டியிருக்கும் உன் அத்தான் முடிவில் இன்னொரு விஷயமும் சொன்னான். அதாவது ஆயிரம் நீதிகளை வாயால் பிரசங்கிப்பதிலும் ஆயிரம் நியாயங்களைக் கையால் எழுதுவதிலும் பார்க்க, ஒரு நீதியையேனும் ஒரு நியாயக் கொள்கையையேனும் செயலளவிற் செய்து உலகுக்குக் காட்டுவதால், அளவற்ற பிரயோஜனமிருப்பதாய் நம்புகின்றான் உன் அத்தான். கேவலம் கீர்த்தியின் பொருட்டு டம்பமாய் வாய்ப் பேச்சுமட்டும் பேசும் சாதாரணமான ஜனாபிமானிகளால் விளையும் நன்மையினும், ஒரு தரும நீதியைச் செயலாற் செய்து காட்டும் தீரனால் அளவற்ற நன்மையுண்டாகுமென்பது அவன் கருத்து. என் ராதா, உன் அத்தானுடைய இரண்டு நேத்திரங்களாகிய ஈன ஜாதியார், பெண்கள் இவ்விரு வகுப்பாருள், ஈன ஜாதியாரை உயர்த்தவேண்டுமென்னும் நீதிக்கொள்கையை அவன் செயலிற் காட்டிவிட்டான்; இப்பொழுதும் காட்டுகின்றானாம். அதாவது எந்த வருணத்தானையும் எந்த மதத்தானையும் தன்னவன் அயலான் என்ற பேதமின்றி, "ஒழுக்கமே உயர் குலம்" என்ற ஒரே நோக்கத்துடன், பாரபக்ஷமின்றி மதித்து, உன் அத்தான் எல்லாரிடமும், எல்லாருடனும் ஒன்றாயிருந்து உண்கின்றான். ஜாதி பேதத்தைப் பிரித்துக்காட்டும் முதற் குறியாகிய போஜன விஷயத்திலேயே இவ்வாறு நடத்தலானது ஸர்வ ஜாதிகளும் ஒன்றென்று ஒப்பி நடத்தல் போலாகின்றதல்லவா?

இனி, ராதா, கவனித்துக் கேள். மற்றொரு நேத்திரமாகிய பெண்கள் விஷயமாய் அவன் கொண்டிருக்கும் நீதிக் கொள்கைகளை அவன் செயலாற்காட்டும் முறை எப்படி? உன் அத்தான் பெண்களுக்கு ஸர்வஸ்வாதீனமும் வேண்டுமென்கின்றான். முக்கியமாய் கல்வி, பொருள், விவாகம் இம்மூன்றிலும் பெண்களும் புருஷர்களைப்போன்ற உரிமையும் ஸ்வாதீனமும் பெறவேண்டுமென்பது உன் அத்தானுடைய கக்ஷி. ஆனால், கல்வி, பொருள் இரண்டிலும்—எல்லாப் பெண்களுமில்லாவிடினும் சிலபெண்களாவது ஸ்வாதீனத்தை யனுபவிக்கின்றார்களென்றும், ஆனால், விவாக விஷயமொன்றில் மட்டும் அவர்கள் ஸ்வாதீனம் சிறிதுமின்றி வருந்துவதாயும்முறையிடுகின்றான். பெண்களைப்பற்றி அவன் செய்யும் பெரிய பிரசங்கங்களிலெல்லாம் இந்த விவாக விஷயமொன்றுதான் அவன் மாறி மாறிப் பாடுகின்ற பல்லவியாம். அதிலும், பெண்கள் முதன் மணத்தைப் பார்க்கினும், பெண்களின் மறுமணமே அதிமுக்கியமானதென்றும், அது சம்பந்தப்பட்டமட்டில், அவன் தன்னுடைய நியாயக்கொள்


## உன் குழந்தையின் உத்தமமான துணைவன்.

சுத்தமாகவும் சிறப்பாகவும் மருந்தூட்டிய குடிகூரா டால்கம் (Cuticura Talcum) தூள் குழந்தையின் இளமையான தோலைத் தேற்றி, உல்லாசமான வாசனை உண்டாக்கும். குழந்தைக்கு ஸ்நாநம் செய்த பிற்பாடு குடிகூரா டால்கம் (Cuticura Talcum) தூளை உடம்பின்மேல் தூவினால், பதரும், எரிப்பும் வராதபடி காப்பாற்றும். குழந்தையின் தோலை சரியான பக்குவத்தில் வைக்கச் செய்யும்.




குடிகூரா டால்கம்(Cuticura Talcum) தூள் நேர்த்தியாகவும் பரிசுத்தமாகவு மிருப்பதினால், உலகமுழுதலும் வைத்தியர்களும், தாதிகளும் இதை குழந்தையின் கட்டிளமைத் தோலுக்கு உபயோகப் படுத்தும்படியாகபுகழ்ந்தோப்பு வித்திருக்கிறார்கள். இந்த காரணத்தினாலேதான் ஸ்திரீகளும் இந்தத் தூளை ஸ்நாநம் செய்த பிற்பாடு உபயோகித்து சந்தோஷ மடைகிறார்கள். அதுவுமல்லாமல், இந்தத்தூளை உபயோகித்து ஸ்திரீகள் பதரையும் எரிப்பையும் போகச் செய்து களிப்படைகிறார்கள். அது வேர்வையைத்தணிக்கிறது; தோலின் சூடான மினுக்கத்தை நீக்கி, திரேகத்துக்கு முழுதலும் இனிப்பான வாசனை கொடுக்கும்.

எல்லா மருந்து கடைகளிலும் பஜார்களிலும் வாங்க அகப்படும்.

### குடிகூரா டால்கம்
### CUTICURA TALCUM

குடிகூரா டால்கம் (Cuticura Talcum) தூள் வேண்டுமென்று இன்றைக்கே கேள்.

கையைச் செயலாற் செய்து உலகுக்குக் காட்டவேண்டு மென்பது உன் அத்தானுடைய ஆவற் கருத்து. என் அம்மணி, இவ்வினிய கருத்து இனிது நிறைவுபெறும் காலமும் இடமும், பாத்திரமும், அவனை யறியாமல் தாமே அவன் முன் வந்து நிற்பதை நினைந்து தான்—என் ராதா—அவன் மகிழ்கின்றான். என் கண்மணீ, நகைக்காதே; இன்னும் நான் சொல்லி முடிக்கவில்லை.

ராதா:—அத்தை, சொல்லுங்கள்; சொல்வதையெல்லாம் கேட்கின்றேன்.

கற்ப:—அம்மா, சும்மா கேட்டால்மட்டும் போதுமா? நான் சொன்னபடியே நடப்பா யென்றும் நம்பித்தான் இத்தனையும் சொல்கின்றேன். உன் கோலத்தைக் கண்டு உன் அத்தான் மகிழ்ந்தானென்றதைக் கேட்டு நீ நகைத்துப் பரிகஸித்தாயே? நீ சற்று நேரத்திற்கு முன் கூறியபடி நீ இதுவரை ஒரு சாதாரணமான மங்கலப் பெண்ணுயிருந்திருந்தால் உன் அத்தான் அவன் நியாயக் கொள்கையின்படி ஒரு கைம் பெண்ணை மணந்து தன் கொள்கையை இவ்வுலகிற்குச் செயலாற் காட்டமுடியுமா? அல்லால், நீ ஒரு மங்கலப் பெண்ணுயிருக்கும் பக்ஷத்தில், இத் ... கல்வியும் குணமும் அழகும் ஒழு... மும் வாய்ந்த தன் சொந்த மாமன் மகளாகிய உன்னை—தன்னை ஏழு வருஷமாய்க் காதலித்து வந்த கற்கண்டுக்கட்டியை—விட்டுவிட்டு, தன் கொள்கை நிறைவேறுவதற்காக அவன் உன்னையல்லாது வேறு கைம்பெண்ணொருத்தியை மணக்கஇசைவானு? அவனுக்கு இனி வாய்க்கும் மனைவி ஒரு கைம்பெண்ணுயுமிருக்கவேண்டுமாம்; உண்மையான காதலியாயுமிருக்க வேண்டுமாம். இந்த இரண்டு நிலைமையும் பொருந்திய பெண் இவ்வுலகில் உன்னையன்றி வேறே யார்? என் ராதா, இத்தோடு உன்னைப் போன்ற இணையற்ற கல்வியும் அறிவும் வாய்ந்த மனைவி தனக்குக் கிடைத்தால், உன் அத்தான் சுமந்து வரும் பெரிய பாரமும் சற்றே குறையுமாம். அதாவது ஈன ஜாதியாரை மேன்மைப் படுத்தலாகிய ஒரு பாரத்தை மட்டும்தான் வகித்துக் கொண்டு, பெண்பாலினர்க் காய்ப் பரிந்து பேசும் பெரும் பாரத்தைப் பெண்பாலாகிய தன் பாரியிடம் ஒப்பு வித்துச் சற்றே இளைப்பாறலா மெனவும் நினைத்து மகிழ்கின்றான். அதாவது நீங்களிருவரும் ஒருவரையொருவர் மணந்து இல்லற வாழ்க்கையிற் புகுந்துவிட்டால், அவன் எடுத்துக்கொண்ட இந்தப் பாரமான தொழிலில் அவன் பாதியும் நீ பாதியுமாய் பங்கிட்டுச் செய்யலாமென்று நம்பி மகிழ்கின்றான். ஆதலால், என் ராதா, உன் அத்தானுடைய இத்தனை கருத்திற்கும் இசைந்த காதலி நீ ஒருத்தியேயன்றி வேறே ஒருவரும் இவ்வுலகில் இல்லையே! இத்தனையும் கேட்ட பின்னும், நீ ஏதேனும் ஆக்ஷேபனை சொல்வாயாயின், நீ யிருப்பதுபோலவே அவனுமிருப்பானன்றி—உங்களிருவர்க்கும் துறவுதான் கதியேயன்றி—வேறு போக்குப்புகல் ஒன்றுமில்லை. என்கண்மணி ராதா, இப்போது என்ன சொல்கின்றாய்? (என்று கம்பீரமாய்க் கேட்க)

ராதா:-(நகைத்து) அத்தை நீங்கள் அத்தானிடம் இரண்டு மணி நேரம் உட்கார்ந்திருந்து, இத்தனையும் மனப்பாடம் செய்துகொண்டு வந்து என்னிடம் பேசுகிறீர்கள். அவர்கள் பாததூசியின் விலையும் பெறுத பெண்பிள்ளை நான்; அவர்களுடைய வினுக்களுக்கு மறுமொழி சொல்ல முடியுமா? அத்தை, நெடுநேரமாய் விட்டது (என்று சொல்லிக் கொண்டே வெட்கத்துடன் ஜலத்தினுள் முங்கினுள்; மூழ்கி நிமிரவும்)

கற்ப:—தாயே, இது மகா பரிசுத்தமான மகாநதியின் புண்ணிய தீர்த்தம்; அதிலும் இந்த வாய்க்கால் ஸ்ரீ சாவிவாடீசுவரரின் திருநாமம் புனைந்த நெல்லையங்கால்; ஆதலால் நீ இப்போது மூழ்கிய ஒரு முழுக்கோடு உன்னுடைய பாவங்களனைத்தும் தீர்ந்த தாய்ச் சிந்திப்பாயாக; இந்த நிமிஷமே உன் பழய கோலமெல்லாம் நீங்கி, நீ ஒரு புனர் ஜன்மம் பெற்றுவந்த புதுப் பெண்ணென்று உன் உள்ளத்தில் உன்னுவாயாக. ராதா, நீயும் உன் காதலன் அமரேசனும் சகல மங்களங்களையும் பெற்று நன்கு வாழ்வீர்களாக. (என்று சொல்லிக்கொண்டு தானும் மூழ்கினுள். இந்தச் சமயம் இருவரையும் தேடிவந்த)

பூசையாச்சி:-அம்மா, 'மாமியும் மருமகளும்' குளிப்பதற்கு எத்தனை நேரம்? கற்பகம், உனக்குப் புதுத்தண்ணீர் புடிக்குமா? உன்னை உன் நாயகன் கார்த்திகேயன் அழைக்கின்றான். உன் மருமகள் ராதா இன்று மாலைவரையும் ஜலத்தில் நின்று விளையாடினுலும் அவள் ஆசை தீராது.

கற்ப:—அம்மா, இதோ வந்துவிட்டேன் (என்று விரைந்து ஸ்நாநம் செய்து கரையேறி வீட்டிற்கு வந்தாள். அவளைக்கண்ட,)

கார்த்:—கற்பகம், நீங்கள் தாயும் மகனும் தனித்துப்பேச சௌகரியமாயிருக்கும்படி நானும் உன் தம்பியும் நெடுநேரமாய் வெளியே போயிருந்தோமே? இதுவரை இருவரிடமும் என்ன பேசி முடித்தாய்?

கற்ப:—ரகஸ்யமாயும் சுருக்கமாயும் ராதாவின் மனோநிலைமையையும் நாயனுரின் சம்மதக் குறிப்பையும் அறிவித்து, ராதாவின் மனத்தில் இந்த ஒரு ஆக்ஷேபனைதான் சற்றேயிருக்கிறது. வேறே தடையொன்றுமில்லை. (என)

கார்த்:—(பட்டகசாலைக்குள் நின்ற ராதா கேட்கும்படி) அந்த ஆக்ஷேபனையைத் தானு ராதா பிரமாதமாய்ச் சொல்கின்றாள்! கோலம் கோலமென்று சும்மா சொல்கிறாயே, ராதாவுக்கு இப்பொழுது என்ன கோலம் வந்துவிட்டது? அவள் தன்னை விதவையென்று எண்ணுகின்றாள்? அவள் விதவையல்லவே!

(தொடரும்)


வெண்குஷ்டம் பெருவியாதி

எவ்வளவு கடுமையானதாயினும், எவ்வளவு நாட்பட்டதாயினும் நாலே வாரத்தில் குணம். ஈவர்த்திக்கு உத்தரவாதம்.

விவரங்களுக்கெழுதுக.

KAMALA WORKS (S M.)

Panchpota—Bengal, India.

G.கன்னையா கம்பெனி

இரும்புப்பெட்டி வியாபாரம்.



137.பிராட்வே மதராஸ்

நீரிழிவு, மதுமேகம்

முதலிய சகல நீர் ரோகங்களுக்கு

பண்டிட் ஸ்வாமி ஸ்ரீநிவாஸய்யங்காரின்

மயூரகாய கற்பம்

ஒரு தெய்வீக சஞ்சீவி!!

இதுவரை இதன் நன்மையைப் பிரபுக்கள் மட்டுமே பெற்று வந்தனர். இப்போது சகல ஜனங்களும் பயன்பெறவேண்டி 20 டோஸ் கொண்ட பொட்டணம் ரூ. 15-8-0 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. 10 நாளைக்கு வரும். அதற்குள் கண்கூடாகக் குணங்காணும். பிரபல இங்கிலீஷ் டாக்டர்களுடையவும், குணமடைந்த பலருடையவும் உயர்ந்த உண்மை அபிப்பிராயங்கள் கொண்ட இலவசப் புத்தகத்திற்கு

இன்றே எழுதுங்கள்

ஸ்கந்தாசிரமம்

தபால் பெட்டி, 759 :: எழும்பூர், மதராஸ்.

டாக்டர் ஜம்மி வெங்கடாரமணய்யாவின்

லிவர்க்யூர்

குழந்தைகள் ஈரல், குலைகட்டிகளுக்கு நிகரற்றது என்று டாக்டர்களாலும், பெற்றோர்களாலும் போற்றப்பட்டது.

அநேக கண்காட்சிகளில் தங்கமெடல்களும், நற்சாட்சி பத்திரங்களும் பெற்றது.

ரங்கூன் ஏஜெண்டு:—ரிலையன்ஸ் பார்மசி, 125-12, பிங்னட் வீதி—ரங்கூன்.




ஒருவன் தன்னிடத்தில் வைத்த இரும்பை எலி தின்றதென்றது.



தென்னிந்தியப் பிரமுகர்கள்

## மஹாமஹோபாத்யாய வெள்ளூர்

# சுப்பிரமணிய கனபாடிகள்

(கே. எஸ். ஆர்.)



மைசூர்ப் பிரதேசத்தில் இருந்து பிரசித்திபெற்ற அறிஞர்களுள் காலஞ்சென்ற மகாமகோபாத்தியாய வெள்ளூர் சுப்பிரமண்ய சாஸ்திரிகளும் ஒருவராவார். அங்கு சிருங்கேரி ஜகத்குருக்களின் மகா சன்னிதானத்திலும், பின்பு அம்மகான்களின் அனுக்ரஹ லாபத்தினுல் ராஜ சபையிலும் அக்ரேஸராராக இவர் வீற்றிருந்தவர். "கற்றோர்க்குச் சென்ற விடமெல்லாம் சிறப்பு" எனும் பழமொழிக் கிணங்குவதாகும் இவரது சரித்திரம். வேறு ஒரு ஜில்லாவில் பிறந்து, தமக்கு முன்பின் தெரியாத மைசூர் தேசத்திற்குப் போய் அங்கு தமது பாண்டித்தியத்தை நிரூபித்து நிலைநாட்டிப் புகழ் எய்திய பெருமை இவரைச் சார்ந்தது. தற்காலம்போல் தெரிந்ததைக்கொண்டு நின்றுவிடாமல், இவரைப் போன்றவர்களுக்குப் :புதிய புதிய விஷயங்களைச் சதா படிப்பதிலும் கேட்டு அறிவதிலும் இருந்த உத்ஸாஹமும் ஊக்கமும் அளவிடற்கரியது. இதுவே இவர்களது மேன்மையான பாண்டித்தியத்திற்குக்காரணமாகும்.

திருச்சினுப்பள்ளி ஜில்லாவில் காவிரியாற்றின் வடகரையில் முசிரிக்குக் கிழக்கே 5 மைல்கள் தூரத்திற்குள் வெள்ளூர் என்னுமொரு அக்ரஹாரமிருக்கிறது. இவ்விடத்தில் 1868-ம் வருஷம் அக்டோபர் மாதத்தில் ராமாசாஸ்திரிகள் என்பாரின் த்விதீய குமாரராக, நம் மஹாமஹோபாத்யாய ஸ்ருதிசிரோபூஷணம் வெள்ளூர் சுப்பிரமண்ணிய சாஸ்திரிகள் பிறந்தனர். இவருடன் மூன்று சகோதரர்களும், இரண்டு சகோதரிகளும் உடன் பிறந்தவர்கள் இருந்தனர். இவரது வம்சத்தில் வெகுகாலமாகவே வித்தையானது வளர்ந்து வந்ததாகும். இவரது முன்னோர்கள் பரம வேதாந்திகளாகவும் இருந்துள்ளனர். இவர் உதித்த இந்த அக்கிரஹாரத்தில் அநேக வருஷங்களுக்கு முன்பு ஸாங்கவேதாத்யயனமும்,சாஸ்திராத்யயனமும் செய்து சாஸ்திரங்களின் கருத்துக்கிணங்கி நிஷ்காம கர்மானுஷ்டானம் செய்துவந்த அநேகம் வைதீக குடும்பங்கள் வாழ்ந்துவந்தன. இத்தகைய குடும்பங்களுள் ஸ்ரீ ரங்கநாத சாஸ்திரிகளின் குடும்பமும் ஒன்று. ஸ்ரீ ரங்கநா[illegible] சாஸ்திரிகள் தமது [illegible]யாகிய தைத்திரீய சாகையைப் பூராவும் அத்யயனம் செய்து, கர்மானுஷ்டானங்கள் செய்துகொண்டு, வார்த்தீகதசையில் சித்தசுத்தியேற்படவே, துரீயாஸ்ரமமான ஸந்நியாஸாஸ்ரமத்தை ஸ்வீகாரம் செய்துகொண்டு கைவல்யத்தை அடைந்தார். இப்பெரியாருடைய சமாதி இன்றும் வெள்ளூரிலேயே இருக்கிறது. இந்த ரங்கநாத சாஸ்திரிகளுக்குப் பூர்வாஸ்ரமத்தில் பிறந்த இரண்டு குமாரர்களுள் ராமா சாஸ்திரிகள் என்பவர் இளையவர். இவரும் பரம்பரையாக வளர்ந்துவந்த தமது சாகையை அத்யயனம் செய்து இல்லறம் நடத்திவரும்போது, தமது முதல் பத்னி சந்ததியின்றிக் காலமாகிவிடவே, ஸன்யாஸத்திற்குத் தமக்கு அதிகாரம் இல்லாததை உணர்ந்து, மறுபடியும் விவாகம் செய்துகொண்டார். இந்த விவாகத்தினுல் இவருக்குப் பிறந்தவர்களுள் மஹாமஹோபாத்யாய சுப்பிரமண்ய சாஸ்திரிகள் ஒருவர்.

பரம்பரை வித்வான்களின் வமிசத்தில் வந்த இவருக்குப் பால்ய தசையிலேயே கிரமப்படி ஸம்ஸ்காரங்கள் செய்யப்பட்டு, ஏழாவது பிராயத்தில் உபநயனமும் செய்விக்கப்பட்டார். இதன் பின்பு இவருக்கு ஒருவிதமான குடும்பக் கவலையுமின்றி வித்யாப்யாஸம் செய்ய வேண்டுமென்ற தீர்மானம் உதித்தது. ஆகையினுல் இவர் திருச்சினுப்பள்ளிக்குச் சமீபத்திலிருக்கும் அந்தநல்லூர் என்னும் கிராமத்திற்குப் போய், அங்கு வசித்துவந்த ஒரு சிறந்த கனபாடிகளிடம் மூல பாகங்களையெல்லாம் அத்யயனம் செய்துவிட்டார். பிறகு பதக்ரமம் முதலியவைகளையும் அப்யஸிக்கவெண்ணி, அப்பொழுது மஹா பிரசித்தர்களாகவும் இருந்து, அநேகருக்கு அத்யயனம் செய்வித்து கீர்த்தி மிகுந்த வேதமூர்த்தி பிரும்மஸ்ரீ திருவையாறு முத்து கனபாடிகளிடம் கொஞ்சகாலமிருந்து அத்யயனம் செய்தார்.

இதனுடன் இவரது த்ருப்தி அடங்கவில்லை. இவருக்கு சாஹித்யாத்யயனம் செய்யவேண்டும் என்ற உத்தேசமும் எழும்பியது. இதற்குத் தமது குலபுரோஹிதரும், தர்ம சாஸ்திரம் முதலிய கிரந்தங்களில் மிகவும் சிரமப்பட்டு சம்பிரதாயங்களைப் பிரமாணமூலமாகத் தெரிந்து ப்ராமாணீகர் என்று பிரசித்தராகவுமிருந்த முசிரி பிரும்மஸ்ரீ பரமேஸ்வர சாஸ்திரிகளிடம் காவ்யக்கிரந்தங்களை அப்யஸித்தார். அப்புறம் ஸலக்ஷணகநாந்தாத்யயனம் செய்து வியாகரண சாஸ்திராப்யாஸமும் செய்து லக்ஷணக் கிரந்தங்களைச் சொல்லி வைத்துக்கொண்டிருந்த பிரம்மஸ்ரீ சிறுகாம்பூர்சுப்பிரமண்ய கனபாடிகளிடம் "ஜடாமணி" "வியாஸசிக்ஷை" முதலான லக்ஷண கிரந்தங்களையும் "கௌமுதீ" "தத்வபோதினி" முதலான வியாகரண கிரந்தங்களையும் அப்யஸித்தார்.

இதன்பின்பு அத்வைத வேதாந்த சாஸ்திரத்தில் பூரண ஞானம் அடைய வேண்டுமென்ற ஆஸ்தையுடன் இவர் மன்னார்குடிக்குச் சென்றார். அவதார புருஷர் என்றும் உபதமின்றியே தீக்ஷிதர் என்று பிரசித்தரும் மஹானுபாவரும், ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரருமான ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதரவர்களுடைய திவ்விய வமிசத்தில் ஸ்ரீதீக்ஷிதரவர்களுக்குப் பின் ஒன்பதாவது புருஷர்களாக அவதரித்து, ஸகல சாஸ்திரங்களிலும் அத்யயனம் செய்வித்துக்கொண்டு, அத்வைத வித்யா சாம்ராஜ்யத்தை அனுபவித்துக்கொண்டு வந்தவரும், மன்னார்குடி சாஸ்திரிகள் என்று பிரசித்தருமான மஹாமஹோபாத்யாய ராஜு சாஸ்திரிகள் என்ற ஸ்ரீதியாகராஜ மகிவர்யர்களை, இவர் மன்னார்குடிக்குச் சென்று அத்வைத வித்யாப்யாஸத்திற்காக ஆஸ்ரயித்தார். இப்பெரியாரிடம்தான் இவர் தர்க்கத்தில் பிரகரண கிரந்தங்களையும் பிரஸ்தானத்ரய கிரந்தங்களையும் கிரஹித்துக்கொண்டார்.

இதே காலத்தில் இவர் கிருஹஸ்தாச்ரமத்தை ஸ்வீகரித்துக்கொண்டார். பண்டிதர்களுக்கு எப்போதும் தாரித்ரியம் இயற்கையே என்பது பொதுவான அபிப்பிராயமாகும். பண்டிதர்களுடைய தனம் எக்காலத்திலும் அவர்களுடைய வித்யாதனமேயாகும். இந்த உலகரீதிப் பிரகாரம் நம் சுப்பிரமணிய சாஸ்திரிகளும் பீடிக்கப்பட்டவர். ஆகையினுல் எங்காவது ராஜஸ்தானங்களுக்குச் சென்று, அங்கு பரீக்ஷை கொடுத்து சம்பாவனைகள் சம்பாதிக்க வேண்டும் என்ற எண்ணம் இவருக்குத் தீவிரமாக ஏற்பட்டது. உடனே இவர் மைசூர் சமஸ்தானத்தில் ஸலக்ஷணகநாந்த பரீக்ஷை கொடுக்க வேண்டும் எனத் தீர்மானித்துத் தமதூரிலிருந்து பெங்களூர் மார்க்கமாக மைசூருக்குப் பிரயாணமானுர். பெங்களூர்நகரம் வந்து சேர்ந்ததும் இவருக்கு அங்கே வழங்கி வந்த கன்னட பாஷையில் சிறிதும் பயிற்சி இல்லாமையால், மிகவும் கஷ்டப்பட நேர்ந்தது. ஆகையினுல் இவர் அங்கு தமது தேசத்தினர் எவர்களாவது இருக்கிருர்களா என்று விசாரித்துக்கொண்டே போய், கடைசியாக, மைசூர் சீப் கோர்ட்டில் ஜட்ஜ் ஸ்தானம் வஹித்துவந்த காலஞ்சென்ற திவான்பஹதூர் ஏ. ராமச்சந்திரய்யர் அவர்களின் கிருஹத்தையடைந்தார். திவான்பஹதூர் ராமச்சந்திரய்யரவர்கள் மைசூர் சீப் ஜட்ஜியாகவும் பின்பு இருந்து விலகியவர்; தவிர அவருக்கு விசேஷமான மதப் பற்றுதல் உண்டு; அவர் வேதாந்த விசார நிர்ணயாதிகளில் விசேஷ உத்ஸாஹமும் ப்ரீதியும் பூண்டவர்; அவர் ஸ்ரீ சிருங்கேரி ஜகத்குருக்களின் ப்ரிய சிஷ்யராகவிருந்து தமது அந்திய காலத்தைக் காலடி க்ஷேத்திரத்தில் கழித்தவர். வித்வான்களைத் தக்கபடி ஆதரிப்பதில் பிரியம்கொண்ட அய்யரவர்கள் இவரை முதலில் தமது கிருஹத்தில் இரண்டு தினங்கள் தங்கும்படிச் செய்து இவருக்கு எல்லாச் சௌகர்யங்களையும் செய்து வைத்தார். ஒருநாள் அய்யரவர்கள் இவருடன் சாவகாசமாகப் பேசி, இவரது யோக க்ஷேமங்களை விசாரித்ததுமல்லாமல், மத சம்பந்தமான சில கேள்விகளையும் இவரைக் கேட்டார். இந்தப் பிரச்னைகளுக்கு நம் சாஸ்திரிகள் அளித்த உத்தரமானது அவருக்குப் பரம த்ருப்தியை விளைவித்தது. அவர் உடனே இவரிடம், மைசூருக்குப் பரீக்ஷைக்காகப் போகவேண்டாம் என்றும் தமது கிருஹத்திலேயே தங்கி, தமக்கு வேதாந்தக் கிரந்தங்களை ப்ரவசனம் செய்ய வேண்டும் எனவும் மிகவும் கேட்டுக்கொண்டார். இவ்வாறு எதிர்பாராதவிதமாக அன்னிய தேசத்தில் இவருக்கு சகாயம் கிடைத்தது ஈசானுக்ரஹமே தவிர வேறு இல்லை. திவான்பஹதூர் ராமச்சந்தி

ரய்யரவர்களின் அபீஷ்டத்திற்கிணங்கி, இவர் தமது குடும்பத்துடன் பெங்களூர் வந்து சேர்ந்தார்; அங்கு அவருடைய கிருஹத்திலிருந்து கொண்டு, அவருக்கு "பஞ்சதசீ" முதலிய வேதாந்த கிரந்தங்களைக் கற்பித்து வந்தார்.

இந்தச் சமயம் இவருக்குத் தர்க்க கிரந்தங்களையும் வியாஸங்கம் செய்வதற்கு ஒரு சௌகர்யம் ஏற்பட்டது. தார்வாடா பக்கத்திலிருந்து (பின்பு மஹாமஹோபாத்யாயர் பட்டம் பெற்ற) பிரும்மஸ்ரீ விரூபாக்ஷ சாஸ்திரிகள் என்பவர் பெங்களூர் நகரம் வந்து அப்போது சமஸ்தானத்தின் திவான் பதவியை அலங்கரித்து வந்த ஸர் கே. சேஷாத்திரி அய்யரவர்களின் மாளிகையில் புராணப்ரவசனம் செய்துகொண்டிருந்தார். இந்த விரூபாக்ஷ சாஸ்திரிகள் தர்க்க சாஸ்திரத்தில் அதி நிபுணர். விரூபாக்ஷ சாஸ்திரிகளுக்கும் இவருக்கும் பரிசயம் ஏற்படவே, இவர் அவருக்கு அத்யயனம் சொல்லி வைத்துக்கொண்டும், அவரிடமிருந்து மேல்படியான தர்க்க சாஸ்திர கிரந்தங்களை வாசித்துக்கொண்டும் வந்ததினுல் வித்யாபிவிருத்தி ஏற்பட்டது. உண்மை வித்யார்த்திகளின் ஸ்வபாவம் இத்தகையதாகும்!

வேதாந்தத்தில் ப்ரஸ்தானத்ரய கிரந்தங்களை மன்னார்குடி ராஜு சாஸ்திரிகளிடம் அப்யஸித்ததுடன் இவர் திருப்தியடையாமல். "ஸித்தி" "பிரும்மாநந்தீயம்" "பாமதி" முதலிய வாதப்ரஸ்தான கிரந்தங்களை அப்யஸிக்கவேண்டும் என்று யோசித்து, தமது அபிப்பிராயத்தை இவர் ஸ்ரீமான் ராமச்சந்திரய்யரிடம் தெரிவித்தார். அய்யரவர்களும் இதைக் கேட்டு மிகவும் சந்தோஷத்துடன் இவருக்கு ஸஹாயம் செய்யலானுர். அப்போது ஸ்ரீ சிருங்கேரி பீடத்தை அலங்கரித்தவரும், மஹா பண்டிதரும், மஹாமஹிம பூமிகளும், ஸ்ரீ மதாசார்யாவதாரம் என்று புகழும் பெற்ற ஸ்ரீ சச்சிதாநந்த சிவாபிநவ நிருஸிம்மபாரதீ ஸ்வாமிகளிடம் பாடம் படிப்பதற்கு இவரை சிருங்கேரிக்கு அய்யரவர்கள் அனுப்பினுர். இதே காலத்தில் திவான் ஸர் கே. சேஷாத்திரி அய்யரவர்களின் சகாய பலத்தினுல் சிருங்கேரிக்கு வேதாந்த பாடம் அப்யஸிப்பதற்காக, பிரும்மஸ்ரீ விரூபாக்ஷ சாஸ்திரிகளும், தற்போது நம்மிடையே சிறப்புடன் வாழ்ந்து வருபவரும், சமீபத்தில் மஹாமஹோபாத்யாயர் பட்டம் பெற்றுக்கொண்டவருமான பிரும்மஸ்ரீ நேமம் வைத்தியநாத சாஸ்திரிகளும், வந்து சேர்ந்தனர். இம்மூவரும் அங்கு பரஸ்பரம் ஒற்றுமையாகவிருந்து வேதாந்த சாஸ்திரத்தைக் கற்றுவந்ததுமல்லாமல், இதர சமயங்களில் கிரந்த காலக்ஷேபமும் செய்து வந்தார்கள். அப்போதே பிரும்மஸ்ரீ வைத்தியநாத சாஸ்திரிகள் சம்பிரதாயப்படி மீமாம்ஸா கிரந்தங்களை வியாஸங்கம் செய்து, அந்த சாஸ்திரத்தில் உத்தமமான பாண்டித்தியத்தைப் பெற்றிருந்தார். இதையறிந்த நமது சுப்பிரமண்ய சாஸ்திரிகளும், விரூபாக்ஷ சாஸ்திரிகளும் தகுந்த தருணத்தை நழுவவிடாமல், ஸ்ரீ வைத்தியநாத சாஸ்திரிகளிடம் பாட்டதீபிகை முதலான மீமாம்ஸா கிரந்தங்களை அப்யஸித்தனர்.

இவரிடம் ஸ்ரீ ஜகத்குருக்கள் விசேஷ ப்ரீதி கொண்டிருந்தனர். சாஸ்திராப்யாஸம் முடிந்தபின்பு ஸ்ரீ சன்னிதானத்தின் ஆக்ஞையின் பேரில் ஆஸ்தான பண்டிதராக நியமிக்கப்பட்டார். 1908-ல் தக்ஷிண தேசத்தில் யாத்ரையாக ஸ்ரீ ஜகத் குருக்கள் புறப்படவே ஆஸ்தான பண்டிதரான இவரும் உடன் சென்றுர். இந்தச் சமயம் ஆஸ்தானத்தின் தீர்ப்பிற்காக வரும் தர்ம சாஸ்திர சம்ஸயங்கள் இவரால் பார்வையிடப்பட்டு தீர்க்கப்பட்டு வந்தன. இவ்வாறு சுமார் 4 வருஷகாலம் யாத்ரை செய்து திரும்பியவுடன் ஸ்ரீ ஜகத் குருக்கள் நாளுக்குநாள் மலினமாகி வரும் பூர்வோத்தர மீமாம்ஸா சாஸ்திரங்களை சம்பிரதாய லோபமில்லாமல் அபிவிருத்தி செய்யும்பொருட்டு பெங்களூரில் "கீர்வாண ப்ரௌட வித்யாபிவர்தினீ" என்ற உயர்தர பாடசாலையை ஸ்தாபித்தார்கள். இங்கு இவர் வேதாந்த சாஸ்திர ப்ரவசகராக ஸ்ரீ மகா ஸ்வாமிகளால் நியமிக்கப்பட்டார்.

இவர் ஔபாஸனம் பஞ்ச மகா யக்ஞங்கள் முதலிய நித்ய


உயர்ந்த வைரங்கள்

T. R.

ஜோஷி & சன்ஸ்,

Diamond Merchants,

38, ஏகாம்பரேசுவரர் அக்ரஹாரம்

பி. டி. மதராஸ்.

NO MORE GREY HAIR




வெள்ளையாயிருக்கும் கூந்தலை இயற்கை அழகுடனிருக்கச் செய்யுங்கள்—கேஷ்கலா கூந்தலுக்குப புதிய அழகைக் கொடுக்கும்—கேஷ்கலாவையே உபயோகித்து உண்மையை உணர்வீர்.

KESHKALA
RESTORES NATURAL TINT

Obtainable from:—
அப்பா & கம்பெனி, சைனுபஜார் ரோட், மசராஸ். வி. ஜே சேத், பந்தர் தெரு, மதராஸ். டி. ஷேகுஸ்தான் & கம்பெனி, டெங்களூர் சிடி & கண்டேன்மெண்டு. ஸ்ரீ கணேஷ் மார்ட், ராஜா தெரு, கோயமுத்தூர். எக்ஸ்-ப-பேல்வா, பிரின்ஸ் தெரு, கொழும்பு.

Further Inquiries to:—
KESHKALA CHEMICAL CO P.O. Box No. (M) 5506. Bombay 14.

செவிடு

"டெப்கில்லர்" செவிட்டுத் தன்மையை சாசுவதமாகப் போக்கிவிடும். இன்னும் காதில் ஏற்படும் இதர கோளாறுகளையும் அகற்றிவிடும். எவ்வளவு நாள்பட்ட செவிடாகவிருந்தாலும் சரி, சிறிதும் சந்தேகமின்றி நிரந்தரமாக நிவர்த்திக்கப்படும்; செவிடர் செவ்வையாகச் செவியுறுகிறுர். கால்செவிடு, அரைச்செவிடு அல்லது முழுச்செவிடு எதுவாகவிருந்தாலும் அக்கரையில்லை; நீண்டகால ஜலதோஷம், இருமல், ஜுரம், தொண்டைக் கோளாறு, மூக்குக்கோளாறு முதலிய எக்காரணங்களால் ஏற்பட்ட செவிடாயினும் சரி குணமாகிவிடும். சீழ்வடிதலும் நின்றுவிடும். ஆயிரக்கணக்கானவர்கள் குணம் பெற்றிருக்கின்றனர். விலை ரூ. 5; தபால் செலவு 7அணு.

AVAILABLE AT ALL LEADING CHEMISTS,

Wholesale: ஸ்டாக்கிஸ்ட்ஸ்:—அப்பா அண்டு கம்பெனி, 286, சைனு பஜார் ரோட், மதராஸ்.

தாது புஷ்டியைக் கொடுப்பதில் சிறந்தது




சி.எம். சாமி

மன்மதக் குளிகை

இது உடலுக்கு வலுவைக்கொடுத்து ஆண்மையை அதிகப்படுத்தி இரத்த விருத்தியையும் வீரிய விருத்தியையும் திடகாத்திரத்தையும் தரும். 20 குளிகை ரூ 2/-



பிராஞ்சு:—1/54. அருணுசலநாயகன் தெரு, சிந்தாத்திரிப்பேட்டை, மதராஸ்.

மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி.

கர்மாக்களை லோபமின்றி நடத்தி, வேதாந்த ப்ரவசனம் செய்துகொண்டு வந்தார். இவற்றையும் இவாது குணாதிசயங்களையும் கண்டு சந்தோஷித்த மைசூர் மஹாராஜா இவரைத் தமதுஆஸ்தானத்தில் "மஹா வித்வான்" என நியமித்துக்கொண்டார். பின்பு 1913-ல் இவருக்கு இந்தியா கவர்ன்மெண்டாரால் மிகவுயர்ந்த 'மஹாமஹோபாத்யாயர்' பட்டமும் வழங்கப்பட்டது.

சிருங்கேரியில் 1916-ல் ஸ்ரீ ஜகத் குருக்களின் ஆக்ஞையை முன்னிட்டு ஸ்ரீ சாரதாம்பிகையின் ஆலயத்தின் கும்பாபிஷேக மஹோத்ஸவம் நடைபெற்றது. அந்த சமயம் நடந்த ஒரு பெரிய வித்வத் ஸபையில் நம் மஹாமஹோபாத்யாய சாஸ்திரிகளுக்கு "ஸ்ருதிசிரோபூஷணம்" என்ற பிருதத்துடன் இரண்டு தோடாக்களும் ஜோடி சால்வையும் அளிக்கப்பட்டன. இதே வருஷம் காசிபாரத தர்ம மண்டலியாரும் இவருக்கு 'வேதாந்த ரத்னம்" என்ற பிருதையளித்தனர். தவிர சிதம்பரம் காளஹஸ்தி முதலியவிடங்களில் வித்வத் சபைகளுக்குச் சென்று. இவர் அநேகம் சன்மானங்களை ஸ்வீகரித்துக்கொண்டார்.

1917-ம் வருஷாரம்பத்தில் மஹாமஹோபாத்யாய ஹரிஹர சாஸ்திரிகள் காலமாகிய பின்பு, அவருக்குப் பதிலாகப் பெங்களூரில் பாடம் சொல்லிவந்த இம்மஹாமஹோபாத்யாயரை, மைசூர் மஹாராஜா சம்ஸ்கிருதக் கலாசாலை அத்வைத வேதாந்த ப்ரதான அத்யாபகராக இவர் மைசூர் அரண்மனை அதிகாரிகளால் நியமிக்கப்பட்டனர். இந்தப் பதவியில் இவர் வெகு காலம் இருக்கவில்லை. தேக அசௌகர்யம் ஏற்படவே, இவர் லீவு எடுத்துக்கொண்டு தமது கிராமமாகிய ஆங்கரையை வந்து அடைந்தார். அங்கு 1917ம் நவம்பர் மாதம் 16-ந் தேதியன்று மஹாமஹோபாத்யாய வேதாந்த ரத்னம் ஸ்ருதி சிரோபூஷணம் சுப்பிரமணிய சாஸ்திரிகள், தமது 49-வது வயதிலேயே சிவலோகமெய்தினர். இவர் இன்னும் கொஞ்சகாலமிருந்திருந்தால், பலருக்கு இன்னும் ப்ரயோஜனகாமாகவிருந்திருப்பதுடன் அதிக மேன்மையையும் அடைந்திருப்பார்!

சாஸ்திர வியாஸங்கமானது கேவலம் பரோபதேசத்திற்கு மாத்திரமல்லாமல், முக்கியமாகத் தமது ஆத்மார்த்தமாக உபயோகப்படுத்திக்கொள்வதற்கு அவசியம் என்பது இவரது திடமான எண்ணம். என்ன விக்கினங்கள் நேரிடினும் இவர் தமது தர்மத்திற்கு விரோதமாக நடந்துகொண்டதில்லை; நித்யகர்மாக்களை அனுஷ்டிக்க ஒரு போதும் இவர் தவறியதில்லை. இவர் தமது மனத்திற்கு யுக்தமாகத் தோன்றும் விஷயத்தை எடுத்துச் சொல்லி, அதன்படி நடப்பாரே தவிர பிறருடைய தாக்ஷண்யத்தை உத்தேசித்து மனதிற்கு விரோதமாக ஒன்றும் செய்ததில்லை. இக்குணாதிசயங்கள் பலராலும் பாராட்டப்பட்டன. இம்மஹாமஹோபாத்யாயருக்கு கிரந்த ப்ரணயன விஷயத்திலும் ஆசையிருந்தது. இவர் ஸ்ரீ சங்கராசார்யருடைய "ஸாதன பஞ்சக"த்திற்கு ஒரு விஸ்தாரமான வியாக்யானம் எழுதினர். இன்னும் சில வியாக்யானங்களின் குறிப்புகளும் கிரந்தங்கள் இயற்ற வேண்டி இவர் எழுதி வைத்தார். இவருக்கு இன்னும் கொஞ்ச காலம் வித்யாப்ரசாரம் செய்துவிட்டு, காவேரி தீரத்திலிருந்து ச்ரௌத கர்மாக்களைச் செய்துகொண்டு, ஆத்மாராமராகவிருக்க வேண்டும் என்பதே பிரதான நோக்கமாக விருந்து வந்தது. இவாது அகால மரணத்தினால் இத்தகைய அபீஷ்டங்கள் கைக்கூடாது போயினவாயினும், தமது வித்யா மகிமையினால் தமது வாழ்நாள் பூராவும் இம்மஹாமஹோபாத்யாயர் இதரர்களுக்கு ஆதர்சமாகவிருந்து புகழுடன் விளங்கினர்.

* * * *


நம்பிக்கையானஇடம்.



மார்ச் & செமூர்
மார்ஷல் ரோட், எழும்பூர் மதராஸ்.

தமிழனபர்களுக்கு ஓர் நல்விருநது!
புதுமைக்கவி ஸ்ரீ பாரதியாரின் நூலகளைப் படித்து
ஆனநத மடையுங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | கவிதைகள் (8-பாகஙகள்) | ரூ. | 2—8—0 |
| 2. | வசனஙகள் (6-பாகஙகள்) | ,, | 2—0—0 |
| 3. | கதைக்கொத்து | ,, | 0—8—0 |
| 4. | பகவத்கீதை | ,, | 0—8—0 |
| 5. | கட்டுரைகள் பகுதி 1 தத்துவம் | ,, | 0--10--0 |
| | ,, ,, 2 மாதர் | | 0—8—0 |
| | ,, ,, 3 கலைகள் | ,, | 0—8—0 |
| | ,, ,, 4 சமூகம் | ,, | 0--12--0 |

6. Bharathi and his works
by Mr C Visvanathan, Brother of Bharathi 0 4 0

பாரதி பிரசுராலயம்,
திருவல்லிக்கேணி, சென்னை.

முக்கிய அறிவிப்பு.

அமிர்தாஞ்சன் டிப்போவின் படை மெழுகு

இதுவரையில்

ராஜா-ராணி, வியாபாரக் குறியுடன்விளங்கிய எமது வில்லியம் அண்டு கம்பெனியின் படை மெழுகு இப்பொழுது கீழ்க்கண்ட வகையில் மாற்றப்பட்டிருக்கிறது.

அமிர்தாஞ்சன் டிப்போவின் மூவர்ண 'உதய சூர்யன்'

மேற்படி தகவலையறியும்படி முக்கியமாக எமது வாடிக்கைக்காரர்களை நாம் கேட்டுக்கொள்ளுகிறோம். வியாபாரக் குறியில் மாறுதல் ஏற்பட்டிருக்கிறதே தவிர எமது மருந்தின் தயாரிப்பில் எவ்வகை மாறுதலுமில்லையென்று உறுதி கூறுகிறோம்.

அமிர்தாஞ்சன் லிமிடெட் பம்பாய், மதராஸ், கல்கத்தா

ஸ்டாக் செய்பவர்கள்:—எ. பி. பரேக், சைனா பஜார் ரோட், மதராஸ்
ஷியாம் & கம்பெனி, பந்தர் தெரு, மதராஸ்.



ஸ்ரீகா கஸ்தூரி கோரோஜனை மாத்திரை
"பாலகஸ்"பேதி மாத்திரை
"யூனிகான்" டானிக்

14, ஸச அவுஸ்,
மாடுங்கா, பம்பாய்



ஸ்தாபிதம
1885.

ஹைகோர்ட் ஜட்ஜ்களாலும் ஆங்கிலேயர்களாலும் ஜமீந்தார்களாலும் உயர்தர உத்தியோகஸ்தர்களாலும் பிரபல தனவைசியர்களாலும அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் பெற்று கவர்ன்மெண்டு 26 ஜில்லாக்களுக்கும் போர்டு மூலமாய் சப்ளை செய்து கொண்டு வரப்பட்ட உறுதியான இரும்புப்பெட்டிகளும் நவமான இரும்பு பீரோக்களும் எங்களிடம் சரஸமான விலைக்குக் கிடைக்கும்



பழ. மு. முத்தய்யா செட்டியார் & ஸன்ஸ்,
இரும்புப் பெட்டி வியாபாரம்,
7, திருவொற்றியூர் ஐரோடு, பழைய வண்ணாரபேட்டை, மதராஸ்.
பிராஞ்சு ஆபீஸ்,—1/135. பிராட்வே, மதராஸ்.




10 வருஷம் உத்திரவாதமுள்ள புது மாதிரியான பஞ்சவர்ண கல்செயின்கள்

(செயின் 1-க்கு)

ரூபாய் 5-0-0.

எங்கள் ரோல்டு கோல்டு செயின்கள் ஐந்துவித நிறமான செயற்கை கற்கள் வைத்துக் கட்டிய இந்த புது மோஸ்தர் செயின்களை குழந்தைகளும், பெரியவர்களும் அணிந்து ஆனந்தமடையலாம்.

(கேட்லாக் இலவசம்)

R. S. பிரகாசம் & Co,
அலாய் கோல்டு ஜுவல்லர்ஸ்.
187, சைனா பஜார் ரோட், ஜி. டி
மதறஸ்

## இந்திய தேத் தண்ணீரால்



# தேக ஆரோக்கியத்தையும் களங்கமற்ற மனதையும் காப்பாற்றுங்கள்

நாமெல்லோரும் நமது இஷ்டப்படி ஏதாவது ஒரு மகத்தான சக்தியை ஆராதிக்கின்றோம். ஏனென்றால், அவ்விதம் செய்வது நாம் சத்தியம் தவறாது இருக்கவும், நல்வழி நடத்தவும் உதவுகின்றது.

இவ்விதமே மூளைச் சக்தியாலும், தேக சக்தியாலும் வேலை செய்யவும், அனைவருக்கும் தங்களது ஜீவ சக்தியை போஷிக்க இந்தியத் தேயிலை உதவுகின்றது.

எப்படி ஒரு மஹத்தான சக்தியை ஆராதிக்கும்பொழுது மெய் மறந்து போகிறோமோ அதே மாதிரி இந்திய தேத் தண்ணீரை அருந்தியவுடன் மனக்கவலையும், தேகக் களைப்பும் மறைந்து விடுகின்றன.



### தேத் தண்ணீர் செய்யு முறை

சுத்தமான தண்ணீரை கொதிக்க வை. ஈரமில்லாத பாத்திரமாக ஒன்று எடுத்து ஒவ்வொருவருக்கும் ஒரு டீ ஸ்பூன் வீதமும் அதிகமாக ஒரு ஸ்பூனும் நல்ல இந்திய தேயிலையை போட்டுகொதிக்கும் ஜலத்தை விடு. 5 நிமிஷம் கழித்துவடிக் கட்டி பாலையும் சர்க்கரையையும் சேர்த்துக் கொள்ளவும்.

**இந்தியாவின் சந்தோஷமும், பெருமையும் - இந்திய தேயிலை**

IK. 42.

Regd. No. 2514




## வருங்காலத்தில்
## நிச்சயமான
## ஆரோக்கியம்

குழந்தைகள் விஷயத்தில் யாருக்குத்தான் சிரத்தையில்லை? நம் குழந்தைகள் நன்றாகப் படிக்க வேண்டும்; நல்ல அழகுடன் விளங்க வேண்டும்; நல்லவர்கள் என்று பெயரெடுக்க வேண்டும் என்றெல்லாம் நீங்கள் விரும்புகிறீர்கள்.

வருங்காலத்தில் உங்கள் குழந்தைகளுக்கு இவையெல்லாம் ஏற்பட்டு, ஆனால் ஆரோக்கியம் மாத்திரம் இல்லாமலிருந்தால் என்ன பயன்? நோயற்ற வாழ்வு ஏற்பட்டால்தான் மற்றவை சோபிக்கும்.

ஆகவே குழந்தைகள் நோய், நொடியில்லாமலிருக்கவேண்டும்; ஜலதோஷம், இருமல், இழுப்பு இவற்றை எதிர்த்து நிற்கவேண்டும்; இவ்வளவுக்கும் தேகத்தில் வலுவிருக்க வேண்டும்; நல்ல போஷாக்கினால்தான் பலம் ஏற்படும். விட்டமின்கள் A & Dயும் சிறந்த போஷாக்கைத் தருபவை.

விட்டமின்கள் பூரணமாகவிருப்பதால் மாலர்ஸ் ஸூபர் ஸ்ட்ரெங்த் காட்லிவர் ஆயில் (Moller's Super Strength Cod Liver Oil) மற்ற மட்டமான சரக்குகளைவிடச் செலவு குறைந்தது; எப்படியெனில், இதில் கொஞ்சம் கொடுத்தாலும் போதுமானது; 15 நாட்களுக்கொருதரம் சரக்கு வந்துகொண்டிருப்பதால் ஆயில் சுத்தமாகவே இருக்கிறது.

இவை பூரணமாக நிறைந்தது காட்லிவர் ஆயில்; ஆனால் எல்லா காட்லிவர் ஆயில்களிலும் ஒரே ரீதியான விட்டமின்களிருப்பதில்லை; காட்லிவர் ஆயில்களில் சிறந்தது <u>மாலர்ஸ் ஸூபர் ஸ்ட்ரெங்த் காட்லிவர் ஆயில்</u> (Moller's Super Strength Cod Liver Oil) இது நார்வே தேசத்தில் தயாராகும் உயர்ந்த காட்லிவர் ஆயில்; பிரத்யேக முறைப்படி எடுக்கப்படுகிறது; சுத்தமானது; ருசியானது; விட்டமின்கள் நிறைந்தது.

**எங்கும் டாக்டர்கள் சிபாரிசு செய்வது.**

உங்கள் குழந்தைகளுக்கு இதைக்கொடுத்து ஆரோக்கிய சம்பத்தை வழங்குங்கள்.

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.




# MOLLER'S
## *Super Strength* COD LIVER OIL

மொத்த ஏஜண்டுகள்:

**சவுத் இண்டியன் மர்க்கண்டைல் கம்பெனி,**

12, மன்னாரு தெரு :: பார்க் டவுன் :: மதராஸ்.

Printed and Published by T. S. Visvanatha Iyer, B.A. at the Swadesamitran Power Press, Mount Road Madras—Editor C. R. Srinivasan, B.A.